# VISVANATHAM

## An Historical Drama in Five Acts.

BY

**C. S. MUTHUSAMI AIYAR,**

*Assistant Tamil Pandit, Kalyanasundaram High School,*
*and Sub-Editor, Tamilakam, Tanjore.*

# விசுவநாதம்.

மதுரை நாயக்கர் வம்சதிலகனான விசுவநாதன்
பெருமைகளை யெடுத்துக்கூறும்

ஓர் நாடகம்.

இது

தஞ்சைக் கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் உதவிப்பண்டிதரும்,
தமிழகம் உதவிப்பத்திராசிரியருமான

**C. S. முத்துஸாமி ஐயர்**

இயற்றியது.

தஞ்சாவூர்:

ஜி. என். மணியா அண்டு கம்பெனி பவர் பிரஸ்.

1906.

*Copyright Registered.*]
[Price—Re. 1.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
MADRAS-41.

To

M. R. Ry.,

# K. Gopalaswami Aiyangar Avl., B.A.,

*HEAD MASTER,*

## KALYANASUNDARAM HIGH SCHOOL,

## TANJORE,

THIS Drama which narrates the noble thoughts and the commendable deeds of **Visvanatha,** the first of the Nayak Kings of Madura, is most respectfully dedicated in token of his gratitude and esteem by

THE AUTHOR.

---

மதுரை

**நாயக்கர் வம்ச திலகனை விசுவநாதன் பெருமைகளை**

எடுத்துக்கூறும்

## இத்தமிழ் நாடகம்

*இதனை இயற்றிய ஆசிரியனால்*

தஞ்சை

**கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர்**

மகா-ள-ள-ஸ்ரீ

**K. கோபாலசாமி ஐயங்காரவர்களுக்கு**

*அவரிடத்தில் இவ்வாசிரியன் கொண்ட மதிப்பினையும்*
*நன்றியறிதலையும் காட்டச் சமர்ப்பிக்கப்பட்டது.*

# அபிப்பிராயங்கள்.

மகா-௱-ஸ்ரீ C. S. முத்துசாமி ஐயர் இயற்றிய 'விசுவநாதம்' என்னும் நாடகத்தைப் படித்துப்பார்த்தேன். இஃது இந்த நாட்டில் முன்பு நடந்த சரித்திரத்தைப் பொருளாகக்கொண்டு இயற்றப் பெற்றிருத்தலும் யாவரும் படித்துத் தத்தம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்படி இனிய அகவல் நடையிற் கடினமின்றி அமைந்திருத்தலும் பாராட்டற் பாலன. தாம் அறிந்த விஷயங்களை மற்றவர்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் அன்புவைத்து இந்த நூல்முகமாக வெளியிட்ட இவருடைய உபகார சிந்தை கொண்டாடத்தக்கது.

(மஹாமஹோபாத்தியாயர்)
வே. சாமிநாதையன்
பண்டிதர்,
பிரஸிடென்ஸி காலேஜ்.

சென்னை,
1—12—06.

---

* * * * *

மகா-௱-ஸ்ரீ C. S. முத்துசாமியையரவர்கள் இயற்றிய 'விசுவநாத' மென்னும் நாடகத்தின் பெரும்பான்மையான பகுதிகளைப் பார்த்ததில், அந்நூல் பலருக்கும் திருப்திகரமான வகையில் அமைந்துள்ளதெனத் தெரிகிறது. பழைய சுதேசமன்னவர்களில் ஒருவரது பெருமையை எடுத்து நாடக ரூபமாக நிலைநாட்டி விளங்கிய நூலாசிரியரது தேசாபிமானம் அனைவரும் கொண்டாடத் தக்கது. மிக்க கடினநடையாகவும், மிக்க எளிய நடையாகவும் இராமல் இக்காலத்துக் கேற்றபடி நடுத்தரமான நடையில் இந் நூல்முழுவதும் ஒரேவிதமாக அமைந்திருப்பதை இந்நூல் படிப்பவ ரெவரும் பாராட்டாதிரார். இவ்வாறு விஷய கௌரவத்தோடு பாஷாகௌரவமுமுடைய இந்நூலின் அருமை பெருமைகளை யாவரும் அறிந்து இந்நூலை வாங்கிப்படித்துப் பரவச்செய்து இதனை யியற்றியவரது ஊக்கத்தை மிகுவித்துஇது போன்ற மற்றும் பல நூல்களை அவர் இயற்றுமாறு செய்து ஆதரிப்பார்களாயின், அது தேசபாஷைகளின் அபிவிருத்திக்கு ஏதுவாமென்பது என் கருத்து. இங்ஙனம், அன்பன்,

வை. மு. சடகோபராமாநுஜாசாரி.
காலேஜ் தமிழ்ப்பண்டிதர்.

கும்பகோணம்
24—9—06.

## நிலை மண்டிலவாசிரியப்பா.

எழுத்துநிலை தரூஉம் விழுத்தகு கொன்றைத்
தொடைமதி யோடணி சடைமுடிக் கடவுள்
செவியறி வுறுத்துபு தெற்கண் விடுத்த
தன்னிக ரகத்தியன் பன்னிய வியலொடு
நின்றுநில வுறாஉந் தோன்றுபடு மருந்தமிழ்
வளர்தர வளர்த்த மதுரைத் தொல்பதி
கோலினைத் திருத்துபு கோமுறை புரிந்த
விசுவநா தப்பெயர் வேந்தனற் சரித
மணியினங் குயிற்றிய வணியிது வாமென
வைதருப் பத்தார் செய்தெளி விதுவெனத்
தமிழ்முது மக்கட மறிவுகவர்ந் திழுப்ப
வறமுத னாற்பொருள் செறிதர விளங்க
வரசற் கப்பா வழகிதென் றறிந்தே
யுரையிடை யிட்ட பாட்டென வியற்பா
வதனா லொருநூ லமைத்தற் குரியோன்
றற்பெயர் புனைந்து தந்தரு ளினனே
தொடுகட லகழும் படுமலை மதிலும்
வளைதர விசும்பின் வளநக ரெனப்படுந்
தஞ்சையின் மலைமிசைச் செஞ்சுட ரென்னத்
தன்னிசை பரப்பி மன்னிய பெரியோன்
றமிழகந் தழீஇத் தமிழகந் தனக்கே
யொருதலை மைத்தன மருவிய விசையோன்
றமிழ்க்கட லெல்லையைத் தன்மதிக் கலங்கொடு
தெரிதரப் போய செந்தமி ழந்தண
னுமிசை முத்துச் சாமிநா வலனே.

* * * * *

ஆ. கா. பிச்சை யிபுறாகீம் புலவன்.

திருச்சி,
14—8—06.

தமிழ்ப்பண்டிதர்,
எஸ். பீ. ஜீ. காலேஜ்.

## மதுரை விவேகபானுப் பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக் கவிராயரியற்றிய சாற்றுக்கவிகள்.

திருவால வாயென்னுந் திருநகரி லரசுமுறை
செய்தோ னாகிப்
பெருவாய்மை யாதிநலம் பெறுவிசுவ நாதனியல்
பிறங்குங் காதை
மருவாருந் தென்றமிழி னவரசமு நவரசமா
மலியச் சாற்றிக்
குருவாழும் பொதியமுதற் றமிழகத்திற் றமிழகத்தாற்
குலவச் செய்து (1)

தலைமகன்பே ராணியைந்த தன்றியுமிந் நாலிசைநாற்
சலதி சூழ்ந்த
நிலமிசையெங் கணுமுழங்கு நீராளு மியையுமென
நெடுநூல் வல்லோர்
சொலவிசுவ நாதமெனப் பெயருமிட்டு வெளியிட்டான்
றாய்மை வாய்மை
குலமறிவு பொறைசுகுண மாதியெவற் றினுமுதன்மை
குலவு மாண்பன் (2)

ஆங்கிலநன் கறிந்துயர்ந்து தமிழகத்துத் தலைமையுறீஇ
யயனுட் டோர்க்கு
நாங்கிலவ ரல்லலென் றறிவுறுக்க வருராஜ
நாம நூலோன்
பாங்கிலகு நட்பாள னிஃதென்னே வியப்பனைய
பண்பா னெற்கும்
ஓங்கிலவ ணுகரநேர் செல்வரையு முருணிநீ
ரொப்பச் செய்வோன் (3)

தளங்குலவு மலர்வாவி சூழ்தஞ்சைத் தமிழ்ச்சங்கந்
தழைப்ப வெய்தி
வளங்குலவு தரளமெனுந் தலைவனிவ னெனவெவரு
மதிக்கும் வண்ணம்
விளங்குமுத்து சாமியெனுந் திருநாமன் விருந்தருத்தி
மிசையும் வேட்கை
யுளங்குலவு பெருவாழ்வான் இவன்சிறப்பென் னொருநாவா
லுரைக்கற் பாற்றோ. (4)

இன்னபுகழ்ப் பிரதாபன் றருமினிய நாடகத்தி
னெவண்பார்த் தாலும்
அன்னவயி னமைப்புரக்கும் வெண்கமல மயினடன
மாடு மாண்பு
முன்னுறுவ தாதலினு லகவலெனும் பெயரிதற்கே
மொழிதல் சாலும்
சொன்னலமும் பொருணலமும் அணிநலமும் எந்நலமும்
துலங்கு மன்றே. (5)

மதுரை
16—10—06.

இங்ஙனம்,
மு. ரா. கந்தசாமிக் கவிராயன்.

---

* * * * *

நாடிப் புகழ்விசய நாதமெனு நாடகத்தைக்
கூடிப் புலவருணக் கோத்தளித்தான்—கோடிநூல்
கற்றுத் தெளிந்த கவிசிங்க நான்மறைதேர்
முத்துச் சுவாமியையன் முன்.

நாவலர் கோட்டம்
27—9—06.

இங்ஙனம்,
ஆ. முத்துத்தம்பி பிள்ளை,

---

* * * * *

சரித்திர ஆராய்ச்சியினால் சந்தேகமின்றி ஏற்படும் சங்கதிகளை ஆதாரமாய்க்கொண்டு நாடகங்கள் கதைகள் அமைப்பது மிகவும் புகழத்தக்க முயற்சியென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளக்கூடியதுதான். மாணவர்க்கு இச்சங்கதிகளை கற்பிக்கும் மார்க்கங்களில் இது ஒன்று. இவ்விதமான நாடகங்களிலும் கதைகளிலும் கவனிக்கவேண்டிய விஷயமொன்றுண்டு. சரித்திர ஆராய்ச்சியினால் ஏற்படும் சங்கதிகளை அதிகமாய் மாற்றாமல் அவ்வாராய்ச்சிக்குட்படக்கூடாத பாகங்களில் கதையின் தொடர்ச்சியின்பொருட்டு சில சந்தர்ப்பங்களையும் விஷயங்களையும் கற்பனைசெய்து கூட்டிக்கொள்ளலாம்.

தாங்கள் அமைத்திருக்கும் நாடகத்தை முழுமையும் வாசிக்கத்தற்காலம் அவகாசமில்லையென்றாலும் பார்த்தபாகங்கள் மனதைக்கவர்ந்து பூர்த்திபாய்ப் படிக்க ஆவலை உண்டாக்கத்தக்கதாயிருக்கின்றன.

* * * * *

உதகமண்டலம் }
17—9—06. }

தங்கள் விதேயன்,
வேங்கய்ய, M. A.

---

* * * * *

'விசுவநாதம்' என்னும் தங்களுடைய இனிய நாடகத்தை வாசித்து மகிழ்ந்தேன். காலஞ்சென்ற ஸ்ரீமான் சுந்தரம்பிள்ளையவர்களியற்றிய மனோன்மணீயத்தின் போக்கைப்போன்ற நாடகங்கள் பல தமிழிலில்லையென்னும் பழிநீங்கத்தாங்களியற்றிய இவ்வரிய நாடகத்தின் வாக்கையும், பொருட் சுவையையும் கதையின் ஒற்றுமையையும் யாவரும் புகழாதிரார். நம் தேசத்துச் சரித்திரங்களில் பொதிந்து கிடக்கும் பெரியோர் சரித்திரங்கள் நாடக முதலிய எவ்வகை ரூபத்திலாயினும் வெளி ஏறின், அவைகளை வாசிக்கும் சிறுவர்களுக்கு அப்பெரியோர் நற்குண நற்செய்கைகள் படியுமென்பதற்கையமேயில்லை.

ஆயின் விசுவநாதம் நடிக்கத்தக்க நாடகம் அல்ல வென்பாருமுளர். ஒருக்கால் அப்படியில்லாதிருப்பினும், புராண இதிகாசங்களைப்போல பத்திய ரூபத்தில் படிப்போர் மனங்களிப்பிக்கும் குணம் இதற்கு இல்லாமற்போகவில்லையே. மேற்கூறிய துற்குணம் இதற்கு மாத்திரமல்ல, மனோன்மணியத்துக்குமுள்ளதே. ஆதலால் மனோன்மணியத்தை நன்றென்போர் இதனையும் ஏற்காது தள்ளார்

என் விஷயத்தில், தங்கள் நாடகம் வெகு நேர்த்தியாயிருக்கிறது என்பது பூர்ணாபிப்பிராயம். அதிலும் சொல்வன்மையும், வாக்கின் தாடியும் அருமையாயிருக்கின்றன. கடினமான சரித்திரத்தை நாடகமாயாக்கினது வியக்கத்தக்கது. மொத்தத்தில் தங்கள் நாடகம் எல்லாவகையிலும் சிறப்புடையது என்னும் விஷயம் ஒவ்வொரு பாகத்தாலும் விளங்கும்.

* * * * *

திருவனந்தபுரம், }
29—9—06. }

து. அ. கோபிநாதராவ், M. A.

The play of Visvanatham by the learned Pundit Mr. C. S. Muthusamy Iyer is a very successful attempt at dramatising the historical incidents of the time of Visvanatha Naicker, the founder of the Madura Naik dynasty. The English model is followed, though the prose introductions to the scenes form a novel feature in dramatic attempts of the kind. It portrays vividly the various relationships of the then ruling princes (both Hindu and Muhamedan) and sets a fascinating love story in the background of their history. Though the style is high Tamil and the play is thereby rendered unactable, yet there can be no doubt that the literary merit of the work is high and as such, it is a real addition to high class Tamil literature, nay, also to the portion of the history of Southern India which treats of the Naik kings. The work is full of noble poetical sentiments and commends itself to all lovers of Tamil Literature.

Tiruvandram,
8—11—06. } T. Lakshmana Pillay, B. A.,

---

Dear sir,

I have looked through with great pleasure your work Visvanatham, a drama relating to the period of the greatness of Vijayanagar Kindly allow me to say you have done the work admirably in some parts and on the whole it is a very creditable performance in modern Tamil. I was struck with the simplicity of language which has been attained while maintaining the classical grace of diction. In these days when the University requires modern works in the vernaculars, your

work ought to be a welcome addition and I hope the University will make use of the work, as they had done a similar work before, viz Manonmaniyam of the late Mr. V. Sundram Pillay of Tiruvandram. Thanking you for having given me the pleasure of reading an advance copy of your excellent work, and wishing you all success,

I remain,

Chamarajendrapet, Bangalore City, 29—11—06.

Yours sincerely,
S. KRISHNASVAMI IYENGAR, M. A.,
*Professor, Central College.*

---

Dear Sir,

I am very glad that you are now re-issuing in book form your Tamil Drama of Visvanatham. I read it with considerable interest as it originally appeared in the pages of the Tamilakam. The interesting story which you have woven out of an episode in the history of the Vijayanagar Nayaks and the fine poetical style in which it is written make it very pleasant reading.

It possesses high literary merits which make it, in my opinion, eminently suited for a Text Book in Tamil. In point of literary form and finish your work will bear comparison with Sundaram Pillay's Manonmaniyam.

I am yours sincerely,
K. RAMARATNAM AIYER, B. A.

## தனியன்.

கவித்தநெடும் புகழ்விசுவ நாதன்சீர்ச் சரிதைதனைக்
கற்றோர் தங்கள்
செவித்தலத்திற் கினிமைதரச் செந்தமிழி னாடகமாச்
செய்க வென்று
புவித்தலத்திற் கணிதிலக மானதடம் பொன்னிவளம்
பொலியும் பண்ணைக்
கவித்தலரா ஜன்புகலக் கவிமுத்து ஸாமிசெய்து
களிப்பித் தானே.

# INTRODUCTION.

VISVANATHAM, as the poet himself styles it, is an historical drama in five acts. It glorifies the deeds of Visvanatha, an ideal hero, and the first of the Nayak line of kings of Madura. He was the son of Nagama Nayak ('Camanayque' in the chronicle of Fernao Nuniz) who was the chief of the guards in the army of Krishna Deva Raya. The early breeding and education of Visvanatha who was a pet in the palace was therefore in the right royal style, and it is said that he was a friend of Achyuta Raya, the brother of that illustrious king of the Second Dynasty of Vijayanagar, Krishna Deva Raya. It is not my purpose here to sketch out a biography of this eminent personage in South Indian History; that, in the main, has been so well done by the poet himself in his work. My chief aim now is to point out the historical basis of this drama. The life-history of Visvanatha is found to cover the first sixty four years of the sixteenth century; in fact he was born along with that century and died about A. D. 1564. His name is always associated with another great hero of Southern India, namely Aryanatha Mudali who was his friend, counsellor, and minister. The poet says that Aryanatha Mudali was 26 years old in the year 1512 of the Christian era. This is evidently an exaggeration, as we find that Aryanatha died about the close of the sixteenth century at the ripe age of nearly 98 years in his new-made home at Solavandan in Madura. It seems to me that perhaps Visvanatha and Aryanatha were of about the same age, if the latter was not a little younger than the former as persumably one is led to think he was. Both Visvanatha and Aryanatha distinguished themselves early in the service of Vijayanagar and both of them gradually rose up the ladder of civil and military service, the latter at first becoming a captain in the army of Nagama.

Visvanatha had more of the softer qualities in him, and to him therefore even a royal alliance by marriage was reserved It seems that about A. D. 1535 Visvanatha was made the commander-in-chief of the forces for the signal services rendered by him to Achyuta, his friend and master. It was by the same kingly well-wisher Achyuta that Visvanatha was later on commissioned to go to the country of the Pandyas, there to carry on the Government of that land in the interests of the mad king Guna Vira Varman, the last of the nominal kings of that country. On the death of the same insane Tamil king, Rama Raja of Vijayanagar seems to have acceded to the request of the people of Madura and to have virtually installed Visvanatha on the throne of the Tamil country.

The history of Vijayanagar commencing from the accession of the great Krishna Deva Raya down to a few years in the reign of Rama Raya has been laid under contribution to supply matter for this drama, and naturally therefore the poet ought to have had before him a panorama of diversifying incidents from which to select; and I fully believe that he has done his work pretty satisfactorily. He has not sacrificed historical truth very much in the interest of producing a good poetic effect. The selection that he has made of the history of the Second Dynasty of Vijayanagar he has himself given us in his argument (கதாசங்கிரகம்), and therefore it is not necessary for me to repeat the same. The relation that existed between Krishna Deva Raya and Ismail Adil Shah of Bijapur, their several relations with the Portuguese at Goa, the condition of international trade, the quarrel about "Raichur and the Doab", the splendid rise of Hindu greatness in the reign of Krishna Deva or Achyuta, the confusion and anarchy that followed the death of Achyuta, the machinations of Ibrahim Adil to bring down the glory of the "City of Victory", the accession of Rama Raya which was a sign of peace — (but alas! only for a short period) — all these are rapidly and playfully touched upon by the poet in his wonderful drama

whose diction, I think, will equal, if not excel, the late lamented Professor Sundaram Pillai's Manonmaniyam for its smoothness. To really understand the historical basis of this drama I would recommend the reader to study Robert Sewell's "A Forgotten Empire" — chapters 9 to 14, and especially the two documents appended to the book, namely the Narrative of Domingos Paes and the chronicle of Fernao Nuniz.

Ranging as it does over a period of exactly half-a-century *i.e.*, from A. D. 1509 to A. D. 1559 the drama certainly fails to satisfy us on one score, namely that of want of unity of time and place. The poet will perhaps plead that Shakespeare too was guilty in having bodily transported across the channel innumerable infantry and artillery in the space of a few minutes to array them before the walls of Agincourt. But a too rapid scenic change either in place or time sometimes does mar good effect and leaves the audience to question where they are. Happily, however, the interest of the story and the smooth diction transport us right through readily, and we are not left to gape in wonderment. Unity of action is always well kept up, and though descriptions of battles, sieges, courts, camps, marriages, processions, love-episodes, incidents of domestic life, ways of friendship and sweet recreation are all mixed up, they are mixed up in such a way that one is prompted to say in satisfaction, "Well, let us have all these variegated landscapes; we can view them pretty well, standing as we do on this prominent rock."

The threads of the plot that are interwoven to produce a pleasing effect may be analysed into five or rather six events. They are, I think, i. the diplomatic relations of Vijayanagar and Bijapur during three successive generations. ii. the love-episode of Visvanatha and Kanchanai, the hero and the heroine, their trials and their triumph, iii. the causes that led to the battle of Solamaligai and its results, iv. Nagama's treachery, the battle of Solavandan, and the reinstatement of

Chandrasekara Pandya, v. the fresh laurels obtained by Visvanatha in the siege and battle of Raichur, vi. and lastly the crowning glory of Visvanatha at Madura. Of these events No. ii. might be set aside as a pure myth or the fancy of the poet. Krishna Deva is said to have had two daughters only and they were respectively married to Rama Raja and to Tirumal Raya *alias* Jeeva Rai. To events iii & iv, the poet, I know is indebted to the Madura and the Tanjore District Manuals, the works of Mr. Taylor, and the variorum history of South India written by Mr. S. P. Narasimhalu Naidu of Coimbatore. The siege and battle of Raichur is ascribed by most historians and witnesses to Krishna Deva Raya and not to Achyuta as is here done by the poet. His authority is "Achyuta Rayabhyudayam" a manuscript find of Mr. T. S. Kuppusvami Sastriar, a patient labourer in the field. Therein the whole credit is given to Achyuta. But both the Persian historian Firishtah who for some time resided at the court of the Nizam Shahs of Ahmadnagar and Fernão Nuniz who had personal access to the court of Vijayanagar plainly state that the incident referred to occurred in the reign of Krishna Deva Raya in 1520, and Robert Sewell. after a careful sifting of evidences arrives at the 19th day of May of that year as the date of the battle. In the face of such overwhelming evidence, we have to reserve judgment for the present. Perhaps the battle of the Krishna where Malu Khan was forced to retreat and Ismail Adil purchased peace refers to a different event in the reign of Achyuta. But after all according to Nuniz Achyuta was not the right sort of a king to war with Adil Shah, and it is said by the same authority that the debated land "Raichur and the Doab" was eventually lost to the Hindus in 1530. I am therefore led to think that the author Rajanatha Kavi extolled Achyuta to the skies and transferred the glory of Krishna to Achyuta, prompted as he was by self-interest and other considerations. But to come to the point, although the poet might have erred in this respect, the description of the siege and battle of

Raichur is faithful and does not at all suffer in consequence. The diplomatic relations of the two courts of Vijayanagar and Bijapur, and the life-incidents of Visvanatha are generally well depicted, and on the whole the web of the plot is most artistically woven. The play is highly commendable for its beauty.

The characters of the play are likewise varied and present interesting study. The hero and the heroine are indeed ideals, and you vainly search for even a single blemish. The majestic bearing and the catholic spirit of the hero quite in keeping with his breadth of views and love of justice; the soft feminine virtues of Kanchanai ; the extreme loyalty of Murti and her desire to please her mistress ; the changing moods of the sprightly Mathivilasini ; the mathematic precision and the calm demeanour with which Aryanatha conducted the military operations at Raichur ; the rather enfeebled Achyuta delighting in sensual pleasures ; the treachery of Nagama, the wily Mangamma, the cunning minister prone to vice later on,—all these mingled up in nice proportions add grace to the poem. The critical positions in which Visvanatha is placed try his soul, and after every ordeal he comes out glorious. He would not wound anybody's feelings, but would always help the weak and render service where it ought to be rendered. Krishna Deva is represented in the play not as a mere figure-head but as a king whose words were highly respected. He is said to be resting upon the glory that he had already won. The simple logic of the Jaffnese when they discover Chokalingan deserting the cause of Virasekara is most realistically told, and Puntattai is at once pleased with the argument. The imprisoned lady mourning her fate on the moon-lit night in the upper storey and her rescue by means of a rope-ladder are calculated to rouse our feelings by action. But what is wonderful there is the simple way in which gratitude is expressed. I would fain speak of more

characters, if space would allow me. A host of other characters remain to be pictured, poor Kanakavalli accepting a pittance to live upon, Malu Khan, Salabat Khan and the rest. I leave all these for the careful study of the reader. I would also point out the beauties, the choice expressions, and the nice sentiments, but space forbids my doing this.

In conclusion, I recommend this play very earnestly as a book fit for the reader's leisure-study, fully believing that he will be repaid the trouble of perusal. The poet richly deserves encouragement, and in these days when modern vernacular literature has to be developed, I believe that it is the duty of the educated public to welcome such poets who show adaptability to modern conditions.

With this fore-word I bless Visvanatham and earnestly pray that God will be pleased to secure it the success it so well deserves.

TAMIL SANGAM,
TANJORE,
*1st Dec., 1906.*

T. RAJAM AIYANGAR, B.A., L.T.,
*A Member.*

# முகவுரை.

விசுவநாதம் என்னும் இந்நூல் விசுவநாதனது சரித்திரத்தை நாடக ரூபமாய் எடுத்துக்கூறும் தன்மையில் அமைந்துள்ளது. இவன் நமது தமிழ்நாட்டின் ஓர் பகுதியாகிய மதுரையை அரசாட்சி புரிந்த நாயக்க ராஜவம்சத்தில் முதல் அரசனும் அவர்களில் திலகம் போன்றவனுமான ஓர் இந்து அரசன். இவன் இளமை தொடங்கி நல்லொழுக்கம், சற்சகவாசம், பெருந்தன்மை, ஆழ்ந்த அறிவு, ஆண்மைத்தன்மை, ராஜபக்தி, முதலிய நற்குணங்களை உடையவனாய் விளங்கினன். இத்தகைய நற்குணங்களையுடைய இவனது சரித்தைத் தற்கால பாஷாபிவிருத்திக்கு ஏற்றபடி நாடக ரூபமாய் எழுதினால் இதைப்படிக்கும் மாணாக்கர்களுக்கும் ஏனையோர்க்கும் அவ்வரிய குணங்களும் ஒழுக்கங்களும் படியுமென்பது கருதியும், எனது நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கியும் யான் இந்நூல் எழுதலானேன். இச்சரித்திரத்திலுள்ள சாராம்சங்களையும் கதையின் தொடர்ச்சியையும், என்னால் எழுதப்பட்டுள்ள கதாசங்கிரகமும் நண்பர் மகா-௱-ஸ்ரீ இராஜமையங்காரவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள முகவுரையுமே நன்கு விளக்குமாதலால் அதைப்பற்றி இவ்விடத்தில் எடுத்துச்சொல்வது மிகையென விடுத்தனன்.

இந்நூலுக்கின்றியமையாத சரித்திர சம்பந்தமான பாகங்களைப் பல இடங்களில் தேடி யாராய்ச்சி செய்து எனக்குக் கோர்வையாகச் சேர்த்துக்கொடுத்தும், எனது நன்மையைத் தனது நன்மையாகக் கருதியும், என்னுடன் என்றும் இணைபிரியாத்தோழமையுங்கொண்ட எனது உயிர்க்குயிராகிய நண்பர் மகா-௱-ஸ்ரீ T. இராஜமையங்கார் அவர்கள் (B. A. L. T.) நாளும் செய்து வருகிற நன்றியை என்றும் மறக்கற்பாலதன்று. தஞ்சைத் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டு வருகிற 'தமிழகம்' என்னும் பத்திரிகை வாயிலாக இந்நூலையான் வெளியிடத்தொடங்கிய காலையில் அதில் வந்த சிற்சில பகுதிகளை மிக்க ஆவலுடன் பார்வையிட்டு மகா-௱-ஸ்ரீ கோபிநாதராயரவர்கள் (M. A.) யான் எடுத்துக் கொண்ட காரியம் நற்காரியமென்றும் இது எவ்வகையானும்

இனிது முடிவுபெறவேண்டுமென்றும் அன்புபாராட்டிக் கடித மூலமாகத் தெரிவித்து எனக்கு ஊக்கத்தை உண்டாக்கினர்.

இச்சரித்திரத்திற்கு ஒற்றுமையான சில பாகங்களை வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்துக்கொடுத்தும் யான் எழுதிவந்த இச்சரித்திரத்தின் கோர்வையை உற்று நோக்கியும் எனக்கு உதவிபுரிந்து வந்த வடமொழியில் வல்ல பண்டித சிரோமணியாகிய நண்பர் மகா-ா-ஸ்ரீ T. S. குப்புஸ்வாமி சாஸ்திரிகளுக்கும், மாற்றவேண்டிய பாகங்களை மாற்றியும் சேர்க்கவேண்டியவைகளைச் சேர்த்தும் ஏற்றமான விஷயங்களை எடுத்துக்காட்டியும் இது விஷயத்தில் எனக்கு மிகவும் உதவியாயிருந்த நண்பர் மகா-ா-ஸ்ரீ K. இராமாநுஜ ஐயங்கார் அவர்கள், நண்பர் மகா-ா-ஸ்ரீ O. N. அப்பாசாமி ஐயரவர்கள் இவர்களுக்கு யான் செய்யும் கைம்மாறென்னுளது.

கலாசாலைகளிற் கற்கும் மாணாக்கர்களுக்கும் பயன் தரத்தக்கதாய் இந்நூலை அதிக கடினமின்றி எளிய நடையில் எழுதவேண்டுமென்று எனக்குக் கட்டளையிட்டும், அடிக்கடி இதைப்பார்வையிட்டும், எனது க்ஷேமத்தை நாடி என்னைப் பாதுகாத்தும் வருகின்ற மகா-ா-ஸ்ரீ K. கோபாலசாமி ஐயங்கார் (B. A.) அவர்களுக்கு எந்நாளும் எனது நன்றியைச் செலுத்த கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்நூலை அச்சிடுவதற்கு உதவிபுரிந்த கனவான்களுக்கு எனது நன்றியைச் செலுத்துகின்றேன்.

இந்நூலைப் பிழைபறவும், தெளிவாகவும், புத்தகத்தைப் பார்ப்பவர்கள் மனதைக் கவரத்தக்கபடி மிக நேர்த்தியாயும் விரைவில் அச்சிட்டுக் கொடுத்த தஞ்சை கல்யாணசுந்தரம் பவர் பிரஸ் தலைவர்களுக்கும் ஏனைய நண்பர்களுக்கும் எனது வந்தனத்தைச் செலுத்த கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அச்சுப் பிழைகளும், சொற்குற்றங்களும், பொருட்குற்றங்களும், இந்நூலில் ஏதேனும் உள்ளனவாயின் அவைகளைத்திருத்திக்கொள்ளும்படியாக நண்பர் அனைவரையும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

தஞ்சை,
1906ஹு டிஸம்பர்மீ 1௳ } **C. S. முத்துஸாமி ஐயர்,**
தமிழ்ப்பண்டிதர்.

# விசுவநாதம்.

## கதாசங்கிரகம்.

விஜயநகர் அரசன் கிருஷ்ணதேவராயனு, விஜயபுரி சுல்தான் இஸ்மேல் அடில்ஷா செய்துவந்த துன்பங்களைச் சகியாதவனாகிப் பகைமேற்கொண்டிருந்தான். வடுகல் துறைமுகத்தும் ரேய்ச்சூர் முற்றுகையிலும் முதுக்கல் போர்க்களத்தும் சுல்தான் தனது விரோதத்தைக் காட்டினதுமன்றி, பொதுவாக இருந்த போர்த்துகீயரோடு உறவாடி அவர் நடுநிலைமையையும் கெடுத்துவிட்டான். அரசன் இக்கவலையினால் மிகவும் வருந்திக்கொண்டிருந்தான்.

இப்படி இருக்கையில், சந்திரசேகர பாண்டியன் வீரசேகரச் சோழனால் தன்னாட்டினின்றும் துரத்தப்பட்டு, சேனையையும் செல்வத்தையும் இழந்து விஜயநகரம் புகுந்து கிருஷ்ணதேவனைச் சரணமாக அடைந்தான். கிருஷ்ணதேவன் அபயமளித்து, தனது தளகர்த்தன் நாகமனைப் பாண்டியனோடுசென்று சோழனை வென்று மதுரையைப் பாண்டியனுக்கு கொடுத்துவரும்படி ஆக்ஞாபித்தான். அவ்வாறே நாகமன் ஓர் பெருஞ்சேனையைச் சேர்த்துக்கொண்டு, பாண்டியனோடு சோழநாட்டுக்கு வந்து, சோழமாளிகைப்புறத்து வீரசேகரனை வென்று, அவனையும் கொன்று, அவன் நாட்டையும் கிருஷ்ணதேவன் வசமாக்கி, அந்நாட்டிற்கு ராஜப்பிரதிநிதியாகக் கிருஷ்ணதேவன் மைத்துனன் செவப்ப நாயக்கனைத் தஞ்சையில் இருத்தி, தன் சேனையோடும் பாண்டியனோடும் மதுரைக்குச்சென்று, அவனுக்கு முடிசூட்டி, அவன்கீழ் மந்திரியாகச் சிலகாலம் இருந்தான்.

விஜயநகரத்தில் நாகமன் புதல்வன் விசுவநாதன், அரசன் பின்னவனும் இளவரசனுமான அச்சுததேவனோடு இணைபிரியாத் துணைவனாக வாழ்ந்துவந்தான். அப்போது அரசன் புதல்வி காஞ்சனையம்மன் விசுவநாதனிடத்தே மிகுந்த காதல்கொண்டு அவனையே மணம்புரிவதென்று இசைந்து இருந்தாள். இப்படியிருக்க விஜயபுரி இளவரசன [illegible] இளைஞன் குறை

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

திசயங்களைக் கேள்வியுற்று இவளைத் திருடிக்கொண்டுபோய் தனது காமக்கிழத்தியாக வைத்துக்கொள்ளநினைத்தான். அவன் தன் வார்த்தைக்குட்பட்ட சில பாதகரைக்கொண்டு தன் இஷ்டப்படியே காஞ்சனையைச் சிறைகொண்டு தனது அரண்மனையிலே அவளை வைத்தான். இதைக்கேட்ட விசுவநாதன் அரசன் தூதனெனச் சென்று சுல்தான் அடில்ஷாவுடன் பேசி வடுகல் துறைமுகத்து மகம்மதியர் ஸ்தாநாதிபதியான ரஸல்கானுக்குத்தண்டனை விதிப்பித்ததுமன்றி, அன்றிரவே நிலா முற்றத்திற் கிடந்து புலம்பிய காஞ்சனையின் நிலைமையைக்கண்டு வருந்தி அவளை விடுவிக்க நூலேணியொன்று அமைத்து அதன் வழியே அவளைக் கீழிறக்கி அவளுடன் பொழுது விடிவதன்முன் அந்நகரத்தைவிட்டு விஜயநகரம் வந்து சேர்ந்தான்.

இது இங்ஙனமாக, பாண்டிநாட்டிலே நாகமன் தருமநெறி தவறி, பொருளாசையால் பாண்டியனைச் சிறைசெய்து சிம்மாசனம் ஏறினான். இச்செய்தியைக் கேட்டுக் கிருஷ்ணதேவன் உள்ளங்கலங்கி நாகமனைத் தண்டிக்கவேண்டித் தருமவழி தவறாத விசுவநாதனையே ஓர் பெருஞ்சேனையுடன் அனுப்பினான். விசுவநாதன் மதுரைக்குச்சென்று தன் தாய் கூறிய அதர்மவழியை விலக்கித் தந்தையுடன் போர்புரிந்து அவனைத் தளையிட்டுச் சந்திர சேகரனை விடுவித்து அவனைச் சிம்மாசனம் ஏற்றி அரியநாதனை மந்திரியாக்கித் தன் தந்தையுடன் விஜயநகரஞ்சென்றான்.

அங்கு நாகமன் கிருஷ்ணதேவனைப்பணிந்து தனது இராஜத்துரோகத்தை மன்னிக்கும்படி கேட்க அரசன் அவ்வாறே மன்னித்ததுமன்றி அவனைத் தன் பந்துவாக உறவாடி அவன் மகன் விசுவநாதனுக்குத் தனது புத்திரி காஞ்சனையை மணம்புரிவித்தான்.

சின்னாளடைவில் கிருஷ்ணதேவன் தெய்வலோகமடைய, அச்சுதன் பட்டம் பெற்றுத் திக்குவிஜயஞ்செய்யச் சென்றான். தனக்குக் கீழ்ப்படியாது தாழ்த்த குறுநில மன்னர்களைப் பணிவித்துத் தன்னகர் நோக்கிவரும்போது, விஜயபுரியிலிருந்தும் ஓர் தூதன் வந்து துங்கபத்திரைக்கு வடபால் 10 மயில் அகலமுள்ள நாடெல்லாம் சுல்தான் ஆளுகைக்குட்பட்டதென்றும் அதை யரசன் மறுப்பானாகில் போர் உண்டாகுமென்றும் கூறினான். அரசன் அது தன்னுடையதென்று வாதம்புரியச் சண்டை

நேர்ந்தது. அச்சண்டையில் சுல்தான் சேனை முறிபட்டோட ஓர் சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது. அவ்வுடன் படிக்கையின்படி துங்கபத்திரையின் வடபால் காவதநாடு விஜய நகரத்தைச்சேர்ந்தது.

கொஞ்சகாலம் சென்றபிறகு அரியநாதனிடத்திலிருந்து ஒரு தூதன் வந்து சந்திரசேகரபாண்டியன் இறந்தான் என்றும், அவன் மகன் குணவீரவர்மன் பித்தேறினன் என்றும், குடிகளை ரக்ஷிக்க ஓர் அரசன் வேண்டுமென்றும், மதுரை வாசிகள் விசுவநாதனையே தங்கள் அரசனாகத் தரவேண்டுமென்கிறார்கள் என்றும் கூறினன். அப்போது அரசன் மிகுந்த சந்தோஷமடைந்து விசுவநாதனைக் காஞ்சனையுடன் மதுரைக்கு அரசனாக அனுப்பினன்.

விசுவநாதன் அரியநாதனுடன் மதுரையில் அரசு புரிந்துகொண்டிருக்கையில், விஜயநகரத்தில் அச்சுதன் பரமணடி நீழற்சார, பெருங்குழப்பமுங் கலகமும் மீதிட்டு நகரம் அணிகுலைந்தது. பிறகு குழப்பங்கள் ஒருவாறு அடங்க இராமராஜன் பட்டத்திற்கு வந்தான். அவன் காலத்தில் மதுரையில் குணவீரவர்மன் இறந்துவிட மதுரை வாசிகள் விசுவநாதனையே முடிசூட்டும்படி விண்ணப்பஞ் செய்துகொள்ள, அரசன் இராமராஜன் காளிகாதேவியையும், அரச சின்னத்தையுந் தந்து விசுவநாதனுக்கு முடிசூட்டிவைத்தான்.

விசுவநாதன் ஜனங்கள் இன்பமடையும் வண்ணம் செங்கோல் தரித்து அரியநாதனைத் தனது மந்திரியாகவமைத்துக் கொண்டு காஞ்சனை களிகூற, கி-பி 1559-ஆம் முதல் கி-பி 1563-ஆம் வரைக்கும், அந்தணரும் பெரியோரும் வாழ்த்த மாந்தர்கள் இவனே அரசன் என்று கூற நன்னிலை கோடாது அரசுபுரிந்தான்.

# விசுவநாதம்

இந்நாடகம் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப்போன்று ஐந்து அங்கங்களையும், ஒவ்வொரு அங்கத்திலும் அதன் உட்பிரிவுகளாகிய பல களங்களையுங் கொண்டது. ஒவ்வொரு களத்திலும் அமைந்த விஷயங் களையும் சுருக்கி வசனமாய் முன்னர்த் தொகுப்பின் நலமென்று கருதிப் பின்வரும் களவிஷய சூசிகை வரையப்பட்டிருக்கின்றது.

---

## அங்கம்—1.

---

### களம்—1.

துங்கபத்திரைநதியின் தென்கரையுள்ளது புராதன விஜய நகரம் அந்நகரரசன் கிருஷ்ணதேவராயனு. அவன் ஆக்ஞை தெக்ஷணமெல்லாம் பரவியது. ஆயினும் நதியின் வடபாலெல்லாம் மகம்மதியர் ஆளுகைக்குட்பட்டது. மேற்றிசையில் கடலோரமாகப் பேரர்த்துகீஸர் என்ற ஐரோப்பிய வர்த்தகர்கள் குடியேறி ஓர் சிற்றரசமைத்து வாழ்கின்றனர். இங்ஙனமாக, விஜயபுரியை சுல்தான் இஸ்மேல் அடில்ஷா ஆண்டுவந்தான். இவன் செய்யும் இடுக்கண்களுக்காற்றாது அரசன் கிருஷ்ண தேவன் சபையில் மிகுந்த கவலைகொண்டனனாகி இருந்தனன். அப்போது சபையில் நடந்த மந்திராலோசனை இக்களத்தி லமைந்துளது. இது நிற்க, சோழன் வீரசேகரன் வஞ்சமாய்ப் பாண்டிநாட்டைக் கவர்ந்து சந்திரசேகரபாண்டியனை முறி யடித்தோட்ட அவன் கிருஷ்ணதேவனிடத்தே சரண் புகுந் தான். கிருஷ்ணதேவன் அபயமளித்துத் தனதுதளகர்த்தன் நாக மனை நோக்கித் தென்னாடு சென்று சோழனைச் சிறைசெய்து பாண்டியற்குப் பதியளித்து வாவென வியம்பினன்.

---

### களம்—2.

அரசர்க்குச் செல்வப்புதல்வி காஞ்சனையம்மன். இம்மங்கை க்குத் தோழியர், மூர்த்தியம்மன், மதிவிலாசனிமுதலானவர்கள். இக்காஞ்சனை நாகமன் புதல்வனும் நமது கதாநாயகனுமான

விசுவநாதனிடத்தே ஆருக் காதல்கொண்டாள். இளமையில் அவனுடன் விளையாடியும், பலநூல்கள் பயின்றும், உரையாடியும் வந்தமையின் காதல் மிக்குயர்ந்தது. பருவமுற்ற காலையில் நாதனையன்றி ஒருவனையும் ஆடவனென்று கருதாள். தான் தொழுந் தெய்வத்துக்குப் பல பணிகளாற்றி வீணையை மீட்டிப் பாடி நாதனைத் தா என்று வேண்டுவள். உருவெளித் தோற்றங் கண்டு மயங்குவள். தனது அருமைத் தோழி மூர்த்தியம்மனிடத்தே சொல்லிவருந்துவள்.

---

## களம்—3.

அரசன் ஆக்ஞையைத் தாங்கிய தளகர்த்தன் நாகமன் தனது அரிய படைத்தலைவன் அரியநாதனை அழைத்துப்பாண்டி நாடு செல்லப் படையிட்டினையோவென்று வினவ, அவனும், "சேர்த்தனன். நாமுஞ் செல்லலாம்" என்றனன். அப்போது நாகமன் தன் வீட்டிலே வந்து தன்னைப் பயணஞ் செய்தனுப்பக் கூடினவர்கள் முன்னிலையில் தனது குமாரன் விசுவநாதனை, இளவரசன் அச்சுதப்பனிடத்தே சேர்ப்பித்து அவனுக்குப் பல நன்மொழிகள் கூறினன். தாயாகிய மங்கம்மன் தன் புத்திரன் பிரிவாற்ருது கலங்கிவருந்தினள். அப்போது விசுவநாதன் தாயைத் தேற்றித் தந்தையுடன் செல்வதே தருமமெனக் கூறினன். பின்னர்ப் பாண்டியனும் சேனையும் உடன்வர நாகமன் போர்க்கோலங்கொண்டு போயினன்.

---

## களம்—4.

இக்களத்தில் காஞ்சனையின் காதல் மிக்குயர்ந்து வளர்தல் கூறப்படுகின்றது. உதாரணமாய், ஒருநாள் மாலைப்பொழுதில் அச்சுதன், விசுவநாதன் இருவருடனும் காஞ்சனை உத்தியானவனத்தில் உரையாடிக்கொண்டு நிற்றலும்; அப்பொழுது விசுவநாதனுடைய மன்மதவடிவையும், கல்வித்திறத்தையும், வாக்கின் சாதுரியத்தையும், சற்குணத்தொகுதியையும், எண்ணங்களின் மேம்பாட்டையும், எளியவர்க்கிரங்குந் தன்மையையும், தெய்வபக்தியையும், அவர்கள் சம்பாஷணை மூலமாய்க் காஞ்சனையம்மன் அறிந்து வருந்தலும்; தானும் சம்பாஷணையிற் புகுந்து சோலை

யை வருணிப்பதுபோல இங்கிதமாகத் தன் கருத்து வெளிப்படச் சில வார்த்தையுரைத்தலும்; அவ்வார்த்தையைக்கேட்ட விசுவநாதனும் தனதுகருத்து குறிப்பாகத் தோற்றவும், தான் மேற்கொண்ட பக்திமார்க்கம் தனது வார்த்தையால் விளங்கவும் மறுமொழிகூறலும்; நன்குபுலப்படும். அச்சுதன் நினைவெல்லாம் தாழ்ந்த சிங்காரச்சுவையிலேயே பரந்துநிற்க விசுவநாதன் எண்ணங்களெல்லாம் மீதுயர்ந்து செழித்தல் புலப்படும்

## அங்கம்—2.

### களம்—1.

வீரசேகரச்சோழன் தனதுபடைகளை அணிவகுத்துச் சோழமாளிகைப்புறத்தே தங்கினன். சேனை இருகூறாக வகுக்கப்பட்டு ஒரு கூறுக்குத்தானும்,மற்றொன்றிற்குக் கோலாகலனும், படைத்தலைவராக அமைந்தனர். அரசன் படையில் குபேரன் யானைப்படைத்தலைவன். கோலாகலன் படையில் வில்வலன் விற்படைத்தலைவன். இவ்விதமணிவகுத்து இச்சேனை நாகமன் சேனையை எதிர்பார்த்து நிற்ப, அரியநாதன் தூதாகவந்து "பாண்டியனுக்குக் கன்னிநாட்டைத்தந்து சமாதானஞ்செய்துகொள்ள இஷ்டமா?" என்று வீரசேகரனைக்கேட்டான். அப்பொழுது வீரசேகரன் தனது துணைவர் பலத்தைக்கருதிப் புன்னகைசெய்து கன்னிநாட்டைத் தரமுடியாது என்று மறுத்தான். அரியநாதன் போர் ஒன்றே நேருமென்று திரும்பி வந்தனன்.

### களம்—2.

நாகமன் படையும் இருகூறாகப் பிரிக்கப்பட்டது. அவ்விரு படைகட்கும் முறையே நாகமனும், அரியநாதனும் தலைவராவர். யுத்தகளத்தில் வீரசேகரன்படை நாகமன் படையை எதிர்த்து நிற்க, அரியநாதன் கோலாகலனை எதிர்த்தான். அரியநாதன் தனது ஆயிரங்காலாட்படைகளையும், நாலாயிரங் குதிரைப் படைகளையுங்கொண்டு அரியபோரிட்டு ஓடிப்போன பகைவர் இருநூற்றுவரொழிய மற்றையாவரையும் கொன்றனன். கோலா

கலனுயிரும் கவரப்பட்டது. தனது பக்கத்து ஐந்நூறு வீரர்கள் மாண்டதைக்கண்டு மிகவும் மனம்வருந்திக் காயப்பட்ட எண்ணூறு வீரர்களையும் தக்கவிடுதிகளுக்கனுப்பிச்சேமப்படை வீட்டிலே தங்கியிருந்த தளகர்த்தன் சதாசிவராயனுக்குக் கடிதம் அனுப்பினன். சதாசிவராயன் எண்ணூறு வீரர்களைச் சேர்த்துக்கொண்டு அரியநாதனைச் சேர்ந்தான்.

[இக்களத்தில் அரியநாதன் வரலாறு செம்மையாய்ச் சதாசிவராயனால் வீரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.]

---

## களம்—3.

போர்க்களத்தில் மற்றொருசார் நாகமன்படை வீரசேகரச் சோழன்படை முன்னின்று போர்செய்யத்தொடங்கிற்று. நாகமன்பக்கம் ஜெயமோ, சோழன் பக்கம் ஜெயமோ என்று சொல்வதரிதாகும்படி உச்சிக்காலம் வரையும் சண்டை நடந்தது. அரியநாதன் கோலாகலன் சேனையைச் சின்னபின்னஞ்செய்தபிறகு, சதாசிவன் தன்னுடன் கொண்டுவந்த எண்ணூறு போர்வீரர்களுடன் விரைந்து போர்க்களத்துக்குவந்து வீரசேகரச் சோழனைப்பின்னே வளைந்துகொண்டான். வீரசேகரச் சோழனுக்கு முன்னே நாகமனும், பின்னே அரியநாதனுமிருந்து போர்செய்தகாலையில் சொக்கலிங்கன் என்னும் ஈழப்படைத்தலைவன் சோழன் படையினின்றும் விலகி அரியநாதனைச் சேர்ந்தான். இவன் அவ்வாறு செய்தது இராஜத்துரோகமன்று. இச்சொக்கலிங்கன் முன்னமே சோழனால் துரத்தப்பட்ட சந்திரசேகர பாண்டியனுடைய வலதுகையன்னதுணைவன். தனதரசன் துரத்தப்பட்டது முதல் சோழனிடத்தே மிகுந்த அருவருப்புக் கொண்டிருந்தான். இப்போது சமயம் வாய்த்ததும் சோழனை விட்டு விலகினன். அது நிற்க, யுத்தகளத்தில் மாலைப்பொழுதில் பெரும்போர் விளைந்தது; சோழன் கொல்லப்பட்டான். அவன் சேனையும் புறங்காட்டி ஓடிற்று. அரியநாதனும், நாகமனும் ஜெயபேரியடித்துக் கலந்தனர்.

[இவ்விஷயம் இக்களத்தில், யாழ்ப்பாண வீரர்களும், சிங்கள வீரனும் பேசும் சம்பாஷணையிலமைந்துளது.]

---

## களங்கள்—4-5.

வெற்றிகொண்டபின் நாகமனும், அரியநாதனும் சந்திர சேகர பாண்டியனும், படைத்தலைவர்களும் இனிது வீற்றிருந்து உரையாடிக்கொண்டிருக்கச், சோழன் மனைவியாகிய கனகவல்லி துக்கமடைந்தவளாய்த்தனது அவலத்தன்மையைப் புலம்பிக் காட்டித் தன் கணவன் உடலைத்தரும்படி வேண்டினள். நாகமன் மிகுந்த கிருபையுடன் அவளுக்கு ஆரியப்படையூரையும், ஆயிரம் வேலிகளையும், அரிவையரிற்சிலரையும் ஜீவனத்திற்குத்தந்து, இன்னுரை கூறியனுப்பினன்.

---

## களம்—6.

துங்கபத்திரையின் பாங்கர் ஓர் திவ்யமான பூஞ்சோலையுண்டு. அப்பூஞ்சோலையில் காஞ்சனை தனது தோழியர் ஆயத்தோடும் செவிலியர் கூட்டத்தோடும் சென்று நீராடி மலர் கொய்து பூச்சூடி அமுதுண்டு பாங்கியருடன் பிணங்கியும் பிறகு அவருடனிணங்கியும் மன்மதக் கோட்டம் வளைந்து கும்மி கொட்டி விளையாடினள்.

---

## களம்—7.

விளையாடிய இளைப்புத்தீர, அவரவர் தமது இஷ்டப்படி உலாவிவருவதென்று தீர்மானித்தனர் அப்படியே காஞ்சனை துங்கப்பத்திரையின் கரையோரமாய் மேற்றிசை நோக்கி யாரும் வராத ஓர் பக்கம் உலாவிச் சென்றனள். அப்பொழுது பீஜபூர் சுல்தான் இஸ்மேல் அடில்ஷாவின் மகனுன மாலு என்பவன் சூழ்ச்சியால், காஞ்சனை அபகரிக்கப்பட்டு யாவர் திருஷ்டியிலும் படாமற் கொண்டுபோகப் பட்டாள். இராவணன் சீதையைச் சிறை கொண்டதுபோல மாலுவுங் காஞ்சனையைக் கொண்டு சென்று விஜயபுரி நகரத்தில் ஓர் மாளிகையில் வைத்தான். இது இங்ஙனமாகப் பூஞ்சோலையில் மாதர்களும் செவிலியர்களும் காஞ்சனையைக்காணுதுவருந்தி நாலாபக்கங்களிலுந்திரிந்து தேடி அல்லலுற்று நிற்கையில், இளவரசன் அச்சுதப்பனும் நமது கதாநாயகனுகிய விசுவநாதனும் சோலைக்குள் வந்தனர். மாதர்

களுக்குண்டாகிய குழப்பத்தின் காரணத்தை யறிந்துகொண்டு காஞ்சனையைத் தேடிவருவதென்று விசுவநாதன் துணிந்தான்.

## களம்—8.

சோலையின் வழியே தேடிச்சென்ற விசுவநாதன் அவ்விடங்களிலுள்ள அடிச்சுவடுகளையும் வண்டி சென்ற வழியையும் அச்சுதப்பனுக்குக் காட்டிக் காஞ்சனை சிறைப்பட்டனள் போலும் என்று கூறிநிற்க, அங்கே காஞ்சனையின் மோதிரம் காணப்பட்டது. மோதிரத்தை யெடுத்துப் பிரலாபித்துக், காரைச் செடியின் மீதுகிடந்த கட்டுண்ட தாமரைப்பூவையெடுத்து, அந்த இங்கிதத்தால் காஞ்சனை பகைவரால் சிறை செய்யப்பட்டதை அறிந்து, தான் சிறை மீட்பதாகச் சபதம் கூறினன். அச்சுதன் அதுவே சரியென்று கூற இருவரும் நகர் நோக்கிச் சென்றனர்.

## அங்கம்—3.

## களம்—1.

விசுவநாதன் காஞ்சனை சிறைப்பட்டாளென்று அரசனுக்குத் தெரிவித்து அவளை மீட்டுவருவேனென்று விண்ணப்பஞ் செய்துகொள்ள, அரசன் அப்படியாகில் "விஜயபுரிக்கு நீயே என்தூதனாகச் சென்று சுல்தான் இஸ்மேலடில்ஷாவைக் கண்டு வடுகல் துறைமுகத்தில் அவனுடைய ஸ்தானாபதியான ரசல்கான் நமது கப்பல்களைக் கொளுத்தி வர்த்தகத்திற்கு இடையூறு செய்தானென்று தெரிவித்து அவ்வாறு அவன் செய்தற்குச் சுல்தானின் ஆக்ஞையுண்டோவென்றும் அவ்வாறு அரசன் உத்திரவு செய்திராவிட்டால் ஸ்தானாபதியைத் தண்டிக்கும்படி கேட்டும் வா" என்றான். விசுவநாதன் அப்படியே புறப்பட்டு வந்தான். இது இவ்வாறிருக்க விஜயபுரிக்கோட்டையில் ஓர் மாளிகையில் காஞ்சனை சிறையிருந்து வருந்தினாள். ஒரு நாள் மாலைப்பொழுதில் சந்திரன் தனது ஒளியை வீச மாளிகையின் நிலா முற்றத்தின் மீது சோர்ந்து கிடந்து பிரலாபித்தாள். சுல்தான்மாலு அங்கே வந்து தனது காதலைக் கூறி வேண்டினன். காஞ்சனை ஒரு சூழ்ச்சியைத் தன் மனதில் நினைத்து ஒரு மாதகாலம் தவணை கூறிவிடுத்தாள்.

## களம்—2.

*சுல்தானிஸ்மே லடில்ஷாவைக் கண்டு விசுவநாதன் தனது தூதுரைப்ப, சுல்தான் மிகவும் வருந்தி மந்திரி கும்மல்கான் வழியாக ரசல்கானுக்குத் தண்டனை விதித்து ஓர் கடிதம் போக்கினான். விசுவநாதன் அவன் நிலைமைக்குத் தக்கபடி உபசரிக்கப்பட்டுச் சலாபத்கான் வீட்டில் அன்றிரவு தங்கினன்.*

## களம்—3.

அந்நிலா முற்றத்துக் காஞ்சனை தனியே நின்று மறுபடியும் வருந்தச் சகியாதவளாய் அன்றிரவே அம்மாளிகையைச் சூழ்ந்த அகழியிலே விழுந்து தன்னுயிரை மாய்ப்பதாகப் புலம்பிக் கொண்டிருக்க, அச்சமயத்து விசுவநாதன் அங்கே புகுந்தான். அவளுடன் உரையாடி அவள் காஞ்சனையென்றே யறிந்து ஜீவராயனை விளித்து நூலேணியை வாங்கிச் சுருளவிழ்த்து நிலாமுற்றத்து நின்ற காஞ்சனை பிடித்துக்கொள்ள ஓர் நுனியை விட்டெறிந்தான். காஞ்சனையும் தைரியத்தோடு அம்முனையைப் பிடித்து நிலாமுற்றத்து விளங்கிய துவசத்தம்பத்தினடியிற் கட்டினாள். ஜீவராய் மற்றோர் முனையை ஓர் மரத்திற்கட்ட, விசுவநாதன் விரைவில் ஏணி எதிர் சென்று நிலா முற்றத்துக் குதித்தான். காஞ்சனை களிகூர்ந்து அகழியை இலக்ஷியம் செய்யாது ஏணியின் வழியே கீழிறங்கினாள். விசுவநாதன் பின் தொடர்ந்து வந்து காஞ்சனையை நிலத்திற் கண்டு கடவுளை வந்தித்து நூலேணியை வெட்டி மேலே செய்யவேண்டிய விஷயங்களை நினைத்தான். விசுவநாதன் தனது உடைகளைக்களைந்து காஞ்சனை பூணும்படி செய்தனன். காஞ்சனை விசுவநாதனைகவும் விசுவநாதன் ஜீவராய் உடைகளைத்தரித்து அவனைப்போலவும் முறையே மாறுவேடம் பூண்டு ஜீவராயைத்தனியே விடுத்துப் பிறகு அவனை ஏற்றுக்கொள்வதற்கு வேறு சூழ்ச்சி செய்வதாகச் சொல்லிச் சலாபத்கான் வீட்டுக்குச் சென்றனர்.

## களம்—4.

சலாபத்கான் வீட்டில் காஞ்சனை அவன் மனைவியும் தனது தோழியுமான நூர்ஜஹானோடு உரையாடிக்கொண்டிருக்க, சலாபத்கான் தனது சேவகன் உடைகளை யெடுத்துக்கொண்டு வெளியே சென்று ஜீவராயனுக்கு மாறுவேடம் பூட்டி வீட்டுக்

கழைத்து வந்தனன். பிறகு இம்மூவரையும் அவர் நாடு நோக்கிப் பகலெழுவதன்முன் அனுப்பிவிடவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அவர்களையும் அனுப்பிவிட்டான்.

## அங்கம்—4.

### களம்—1.

விசுவநாதன் காஞ்சனையைச் சிறைமீட்டு விஜயநகரத்துக்கு வந்து அரசனைக்கண்டு நடந்தது விளம்ப, அரசன் காஞ்சனையை அவள் மாடத்திற்கனுப்பி மந்திரி முதலானவர்களோடு சுல்தான் அடில்ஷாவின் சூழ்ச்சிகளைப்பற்றி ஆலோசனை செய்துகொண்டிருந்தான். அப்பொழுது பாண்டிவாசியொருவன் வந்து பாண்டிய நாட்டிற் சந்திரசேகரனைச் சிறைசெய்து நாகமன் சிம்மாசனம் ஏறிக் குடிகளை வருத்துந் தன்மையைப் பலவாறு எடுத்துக் கூறினன். அரசன் மிகுந்த கோபமடைந்து நாகமனைத் தண்டிக்கும் வழியை நினைத்தான். அப்போது மந்திரிகள் பலவிதமான ஆலோசனைகள் செய்து கடைசியாக விசுவநாதனையே பாண்டி நாட்டுக்குச் சேனையுடன் அனுப்புவதாகத் தீர்மானித்தார்கள்.

### களம்—2

விசுவநாதனும் அவ்வாறே சென்று சோழவந்தான் பக்கத்துத் தங்கினன். நாகமன் தன்குமாரன் வரவைக்கேட்டு அவன் தாய் மங்கம்மையைத் தூதனுப்பினன். மங்கம்ம விசுவநாதனை அவன் கொண்ட கருத்தினின்றும் மாற்றத் தன்னால் ஆனஅளவும் முயன்றுபார்த்தாள். விசுவநாதன் இராஜபக்தியும் தருமசிந்தனையுமுள்ளவனுதலால் இணங்காமல் தாய்க்கு இதோபதேசம் கூறிவிலக்கினன். தன் கருத்து இயலாதென்று கண்டு தாயும் மதுரைநோக்கிச் சென்றனள்.

### களம்—3.

சோழவந்தான் பக்கத்தில் தந்தையும் மகனும் தானையுடன் வளைந்து போர்புரிந்தனர். சண்டையில் மதுரைச்சேனை தளர்ச்சியடைய நாகமன் சிறைப்பட்டனன்.

[இப்போரின் வரலாறும், விசுவநாதன் வெற்றியும் ஓர் மதுரைப்புலவன் பாடுகிற தானை, வஞ்சி, வாகை மாலைகளால் நன்கு விளங்கும்.]

## களம்—4.

அரியநாதன் கூறிய பல நன்மொழிகளையும் ஏற்றுக்கொள்ளாத நாகமன் வீரங்குன்றவும், விசுவநாதன் சந்திரசேகரபாண்டியனைச் சிறைமீட்டு அவனைச் சிம்மாசனமேற்றி அரியநாதனை மந்திரியாக வமைத்துத் தனது தந்தைதாயுடன் விஜயநகர்நோக்கிச் சென்றனன்.

## களம்—5.

விஜயநகரத்தில் காஞ்சனையம்மன் தனது தோழியர்களோடு கவலையற்று விளையாடுபவள் சிற்சிலசமயங்களில் தனதுகாதலனை நினைந்து பெருமூச்செறிவாள். ஒருநாள் தன் தோழியோடு கழலாடிக்கொண்டிருக்கும் பொழுது விசுவநாதன் பெயரைத் தன் தோழி சொல்லக்கேட்டு, காஞ்சனை மிகுந்த வருத்தமடைந்து சோர்ந்தாள். அப்போது மூர்த்தியம்மனோடு அங்கேவந்த கிருஷ்ணதேவன் காஞ்சனையின் காதலைக் கண்டு அவளை விசுவநாதனுக்கே மணம்புரிவிப்பதென்று தீர்மானித்துக்கொண்டான்.

## களம்—6.

விசுவநாதன் கிருஷ்ணதேவன் சபையில் தந்தையை நிறுத்திச் சந்திரசேகரனைச் சிம்மாசனம் ஏற்றிய நற்செய்தியைக்கூற, நாகமன்தான் செய்தபிழையை ஒப்புக்கொண்டவனாய் மன்னிப்புக்கேட்டான். கிருஷ்ணதேவன் அவ்வாறே மன்னித்து நாகமனைத்தழுவிச் சம்பந்தியென்று உறவாடித் தன்மகள் காஞ்சனையை மருமகளாக அங்கீகரிக்கும்படி வேண்டினான்.

## களம்—7.

பூங்காவனத்தில் காஞ்சனையும், விசுவநாதனும் சந்தித்து உரையாடிக்கொண்டிருப்ப, அரசனும் நாகமனும் அவ்விடம் போந்து அவர்களைக்கண்டு ஆசீர்வதித்தனர். குருபக்த இவர்களது ஒற்றுமையைக்கண்டு மனதில் தியானிக்க அப்பொழுது தேவகானம் முழங்கி மலர் மழைபெய்தது. மூர்த்தியம்மன் தனது முத்துமாலையை ஓர் பூங்கொடிக்குப் பூட்டி ஆனந்தக் கூத்தாடினள்.

## களம்—8.

விசுவநாதனுக்கும் காஞ்சனைக்கும் விவாகம் நடந்தது. அந்தக்கல்யாணத்தைக்கண்டு களிக்கப் பலதேய மன்னர்களும் சிற்றரசர்களும் வந்து நிறைந்தனர். அரசன் கிருஷ்ணதேவன் மிகுந்த சந்தோஷத்தோடு யாவரையும் உபசரித்துத் தக்க மரியாதைகள் செய்தனன். மதுரைப்புலவன் இவைகளையெல்லாங் கண்டு பேரானந்தமடைந்தனன்.

---

# அங்கம்—5.

---

## களம்—1.

கிருஷ்ணதேவன் விண்ணுலகாளச்சென்றதும் அச்சுதராயன் பட்டம் பெற்றான். தென்னாட்டுக் குறுநில மன்னர்பலர் திறைகொடாது தருக்குடன் இருப்ப, அவர் செருக்கையடக்கவேண்டியும் சோழன் கஞ்சி நம்பியைச் சிறையிட்டுத் திருவிதாங்கூர்த் திருவடியைப் பணிபவைத்துப் பாண்டியனை உயர்த்தவேண்டியும் பெரும்படையிட்டு அச்சுதன் தென்னாடெங்குந் திக்குவிஜயஞ் செய்தான். அப்போது சுல்தான் இஸ்மேலடில்ஷா ராவதநாட்டைப்பற்றிய பழஞ்சண்டையைக் கிளறப் போர்விளைந்தது. இருதிறத்தினரும் படையிட்டு ரேய்ச்சூர் நோக்கிச் சென்றனர்.

---

## களம்—2.

ரேய்ச்சூர் முற்றுகை நடந்துகொண்டிருக்கையில், ஒருசார் படைத்தலைவனான விசுவநாதன் மாலுவின் பெருஞ்சேனை கிருஷ்ணாநதியைக் கடந்து தென்கரையில் வந்துற்றதென்று கேள்வியுற்று, அப்படையுடன் போர்செய்யக்கருதினன். அப்போது அங்கே வந்த கச்சிப்புலவனால் அரியநாதன் கோட்டையைப் பிளந்து உள்ளேசென்று வெற்றிக்கொடியை நாட்டிய நற்செய்தியைக்கேட்டு, மனமகிழ்ந்து, அந்தக் கச்சிப்புலவனையே அரியநாதனிடத்துத் தூதனுப்பித், தான் மாலுவின் சேனையுடன் போர்புரிய முன்சென்றதைத் தெரிவித்துப்பின்வரும் அச்சுதனை விரைவில் வரும்படி செய்கவென்று அறிவித்தனன். பிறகு, தானினைத்தபடியே தன் சேனையுடன் போர்க்களம் நோக்கிச் சென்றனன்.

## களம்—3.

விசுவநாதன் தனது பெருஞ்சேனையோடு கிருஷ்ணாநதியின் தென்பால் மாலுவை எதிர்த்தான். போரில் மாலுவின்சேனை உடைந்தோட அவனும் புறங்காட்டி ஓடி நதியின் வடபாற் புக்கனன். இதைக்கேட்ட சுல்தான் இஸ்மேலடில்ஷா மிகவும் வருந்திப் போர்செய்யுங்காலம் இது அன்றென நினைத்துச் சமாதானஞ்செய்துகொள்ள விரும்பிவந்தனன். அச்சுதன் தனது காவதநாடு தன் வசப்பட்டால் சமாதனம் ஆகுமென்று கூற, அன்று தினம் வெற்றிகொண்ட விசுவநாதன் உடன்படிக்கையைப் பூர்த்திசெய்யச் சென்றான்.

[இக்களத்தில் விசுவநாதன் போர்த்திறம் மதுரைப்புலவனால் அச்சுதனுக்குக் கூறப்படுகின்றது.]

---

## களம்—4.

சமாதான உடன்படிக்கையைச் செய்யச்சென்ற விசுவநாதன் இஸ்மேலடில்ஷா முதலானவர்களோடு இரவெல்லாம் உரையாடி உடன்படிக்கையின் நிபந்தனைகளைத் தீர்மானித்து ஓர் பத்திரம் எழுதிமுடித்தான். மறுநாட்காலையில் இஸ்மேலடில்ஷா கிருஷ்ணாநதியைத்தாண்டித தென்கரைவந்து அச்சுதனைக்கண்டு வணங்கி நட்புக்கூறச் சமாதானம் நிகழ்ந்தது. இருவரும் ஒருநாளவ்விடம் நட்புடன்றங்கிப் பிறகு தம்தம் நகர்நோக்கிச்சென்றனர்.

---

## களம்— 5.

இஸ்மேலடில்ஷாவுடன் உடன்படிக்கையைச் செய்துகொண்டு அரசன் அச்சுதராயன் விஜயநகரஞ் சென்று அரசுபுரிந்தனன். ஒருநாள் பாண்டியநாட்டிலிருந்து சில தூதுவர் வந்து அரசன் சந்திரசேகரன் இறந்தான் என்றும் அவன் குமாரன் குணவீரவர்மன் அரசாளும் வன்மையிலன் என்றும் கூறி விசுவநாதனை யனுப்பும்படி வேண்டிக்கொண்டனர். அப்படியே அரசன் விசுவநாதனை மதுரைக்கு அனுப்பினன். விசுவநாதன் காஞ்சனையோடும் தன் மகன் குமாரகிருஷ்ணப்பனோடும் அவ்விடஞ்சென்று, குணவீரவர்மன் பெயராலரசுபுரிந்து அரியநாதனுடன் கலந்து ஆலோசனைசெய்து அந்நாட்டிற்குப் பல நன்மைகளை யிழைத்துவர, வடபால் விஜயநகரத்து அச்சுதராயன் காலஞ்சென்றனன். அவன் குமாரன் வெங்கிடாத்திரியின்

காலத்தில் மந்திரி சாளுவதிம்மன் சூழ்ச்சிகளால் ராஜ்யத்திற்பல கலகங்களுண்டாக பீஜபூர் சுல்தான் இப்ராஹீம் அடில் படையெடுத்துவந்து நகரை வருத்த, நன்னிலைகெட்ட மந்திரி அரசன் வெங்கடாத்திரியையுங் கொன்று தானுந் தற்கொலைபுரிந்து கொண்டனன். அரசகுடும்பத்துப் பிரபுக்கள் சதாசிவராயனையும் ராமராஜனையும் தமக்குத் தலைமையாகக்கொண்டு இப்ராஹீம் அடிலுக்கு ஐம்பதுலக்ஷம் வராகன் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டார்கள். ராஜ்யபாரத்தை வகித்த சதாசிவராயன் சிலநாளில் விலகிவிட ராமராஜனே பட்டத்திற்கு வந்தனன். இத்தனை குழப்பங்கள் விஜயநகரத்திலுண்டாகிச் சீர்குலைந்து வருநாளில் விசுவநாதன் மதுரையிலேயே யிருக்கும்படி நேர்ந்தது. பாண்டியநாட்டிற் பல்வளம் பெருகி மாந்தர் இன்புறுநாளில் வெகுநாளாய்ச் சித்தங்கலங்கினவனும் இருந்துமில்லாதவன்போன்ற குணவீரவர்மன் சிவபதஞ்சென்றனன். அப்போது நகரமாந்தர் தமக்கு விசுவநாதனையே அரசனாய் முடி சூட்ட வேண்டுமென்று ராமராஜனுக்கு விண்ணப்பஞ்செய்துகொள்ள அவனும் அவ்விதமே முடிசூட்டுகவென ஜீவராயனை யனுப்பினன். ஜீவராயன் சில பிராமணோத்தமர்களோடு கங்காஜலத்தையும் காளிகாதேவியையும் அரசசின்னங்களையும் எடுத்துக்கொண்டு மதுரைமாநகரம் வந்து நல்லோரையில் விசுவநாதனுக்கு முடிசூட்டினன் நகரங் களிகூர்ந்தது. அரசனும் தெய்வபக்தியுடன் கி. பி 1559௵ முதல் 1563௵ வரையில் ராஜ்ய பரிபாலனஞ் செய்தனன்.

# நாடக பாத்திரங்கள்.

கிருஷ்ணதேவராயர், விஜயநகர் அரசன்.

அச்சுதப்பன், விஜயநகர் இளவரசன்.

சின்னவெங்கடாத்திரி, அச்சுதன் குமரன்.

பக்க, அரசன் குரு.

சாலுவதிம்மன், கிருஷ்ணதேவன் மந்திரி.

தென்னல்ராமன், விதூஷகன்.

செவப்பநாயகன், கிருஷ்ணதேவன் மைத்துனன், தஞ்சையரசன்.

நாகமன், கிருஷ்ணதேவன் தளகர்த்தன், பாண்டியநாட்டைக் கவர்ந்தவன்.

விசுவநாதன், கதாநாயகன், நாகமன் புத்திரன், காஞ்சனைகாதலன்.

அரியநாதன்,
இராமராஜன்,
சதாசிவராய்,
ஜீவராய்,
கிருஷ்ணராய்,
வரதராய்,
ஜம்புராய்,
எடத்தராய்,
} படைத்தலைவர்கள்.

சகளராஜகுமாரன், அச்சுதன் படைத்தலைவன்.

குமாரகிருஷ்ணப்பன், விசுவநாதன் குமரன்.

சந்திரசேகரன், பாண்டியன்.

குணவீரவர்மன், பாண்டியன் மகன்.

வீரசேகரன், சோழன்.

கோலாகலன், சோழன் தளகர்த்தன்.

குபேரன், சோழன் யானைப்படைத்தலைவன்.

குணவர்மன்,
வில்வலன்,
இராஜசேகரன்,
} சோழன் படைத்தலைவர்கள்.

சொக்கலிங்கன், ஈழப்படைத்தலைவன்.

சுல்தான் இஸ்மேலடில்ஷா, விஜயபுரி அரசன்.

கும்மல்கான்,
அஷாடாகான்,
} சுல்தான் மந்திரிகள்.

சலாபத்கான் சுல்தான் சேனாபதி.

உம்மதுஷா,
அமீர்பீரித்,
} சுல்தான் படைத்தலைவர்கள்.

சுல்தான் மாலு, விஜயபுரி இளவரசன்.

மங்கம்ம, நாகமன் மனைவி.

காஞ்சனை, கிருஷ்ணதேவன் புத்திரி, விசுவநாதன் காதலி.

லெட்சுமியம்மன், இராமராஜன் மனைவி, காஞ்சனை உடன்பிறந்தாள்.

சின்னம்மன், காஞ்சனையின் சிறிய தாய்.

மதிவிலாசனி,
மூர்த்தியம்மன்,
கஸ்தூரிரங்கம்மன்,
சுந்தரம்மன்,
} காஞ்சனையின் தோழிகள்.

செவிலி, காஞ்சனையின் செவிலி.

மம்தாஸ், ஓர் காவற்பெண்.

நூர்ஜஹான், சலாபத்கான் மனைவி.

கனகவல்லி, சோழன் மனைவி.

பூந்தத்தை, ஓர் ஈழப்பெண்.

மதுரைப்புலவன், போர்க்களம் பாடும்புலவன்.

கச்சிப்புலவன், விசுவநாதன் புடைசூழ்ந்த புலவன்.

படைத்தலைவர்கள், கடைகாவலர்கள், சேவகர்கள், காலாட்கள், ஒற்றர்கள், யாழ்ப்பாண வீரர்கள் சிங்களவீரர்கள், மாதர்கள், தூதர்கள், சாதுக்கள், நகரவாசிகள், புலவர்கள், இவர்களும்,—நடர்களும், நடிகளும் ஆவார்.

இடம்—விஜயநகரம், விஜயபுரி, சோணாடு, பாண்டிநாடு.

வேலுமயிலும் துணை.

# விசுவநாதம்.

## காப்பு—வெண்பா.

சீல குணமுடையன் செங்கோலன் திண்டோளன்
ஞாலம் புகழ்விசுவ நாதன்சீர்—பாலனைய
பைந்தமிழி னாடகமாப் பாடத் துணையாகுந்
தந்திமுகத் தெந்தை சரண்.

## அங்கம்—1.

### களம்—1.

இடம் - விஜயநகரம், இராஜசபை. காலம் - காலை.

[கிருஷ்ணதேவராயர் - சாலுவதிம்மன் - நாகமன் - ராமன் - சேவப்ப நாயக்கன் - விசுவநாதன் - அச்சுதப்பன் - அரியநாதன் குருபக்க - மற்றோர்சாது - சபையோர்கள் - கோத்தவால் முதலானவர்கள்தம் தம் முறையே வீற்றிருப்ப.]

நேரிசை—ஆசிரியப்பா.

குருபக்க. வாழ்க வாழ்க மன்னனுஞ் சபையும்!
ஆழ்ந்த கவலையோ டரசன்வீற் றிருத்தற்
கேன்ற காரண மியாதோ! வறியேம்.

கிருஷ். ஆன்ற கேள்வி யையனே சரணம்!
அடியன் கவலை யறைதரக் கேண்மின்.
குடியெலா மோம்பிக் குறைகட லுடுத்த
வையக மெல்லா மதிக்குடைக் கீழ்வந்
துய்யப் புரந்த துன்னரு ளன்றோ?
இந்நாட் டொருசா ரேழை யிடையன்
பன்னா ளூர்ந்தான் பாங்க ருள்ள
செறிபொழி லலர்ந்த சிற்றூற் றிற்கே

மறிகளை யோட்டி வரிக்களை விடுத்துத்
தென்றலங் குழலி தேமலர் படிந்து
மன்றலந் திவலை வாரிச் சிதற
மெய்ப்புள குற்று விழைந்து சாதாரி
கைப்புற் குழலிற் கனிந்து பாடிக்
கவலை யற்றுக் களிப்புட னிருந்தான்.
அவனைப் போற்சுக மடைவ தெவரே ?
மாற்றலர் தம்மை மடித்து மன்னுயிர்ப்
போற்றின, னுடையிற் பொதிந்து வைத்த
தீப்போ லோங்குந் தீராப் பகைவன்,
காப்புறும் விஜய புரிகா வலவன்,
சுல்தா னிஸ்மேல் சூழ்வினை பலவால்.
கல்லெய் மதிலுங் கணிப்பில் பொறிகளும்
பாதலந் தொட்டுப் படிநத கிடங்கும்
ஆதர வாக வமைந்தகாட் டரணுஞ்
சேம மாகச் சிறநதே யிருப்பினும்
யாமப் பகைவனை யடக்குமா றெதுவென்
றெண்ணியே யிருந்தனன்.

நாகம. வெற்றி வேலோய் ! வீங்கிருட் பிழம்பை
யெற்றிப் பிளக்கு மிரவி யொப்பத்
துன்னலர்த் துடைத்துத் துவச மேற்றி
யென்னக ரையுநின் னிணையடிப் படுத்தி
வாகை பூண்டு வான்புகழ் வீரத்
தோகையை மணநத தோன்றலே ! யுன்வலிக்
கின்னவ னிலக்கோ ? விலகுநாண் பூட்டும்
வின்னல மறியான், வெய்ய பகழி
யெய்யவு மறியான், இழிதருந் தன்மையன்,
செய்யுஞ் சூழ்ச்சிநிற் செகுத்திட லாகுமோ ?
அன்றியு, மிரவி யமைதர வோங்கி
வென்றியம் பதாகை மீதுற வீக்கி
யெந்திரம் பலவுட னிலங்கு மிஞ்சி
மந்தரம் போல வயங்கும் வடபால்.
வேங்கை யிரித்து வேழ மருப்பெறிந்
தோங்கலி னுள்ள வுயர்பொருள் வாரித்
திரையிரு மருங்குஞ் செலுத்துக் துங்கபத்

திரையெறு நதியே திகழ்தர விளங்கும்.
அன்னதி னூழ மார்கவி யொத்தது.
பின்னதி னகலம் பெரும்புறக் கடலே.
செவ்வியிற் பலருஞ் சேர்துறை யற்றது.
கவ்விப் பற்றுங் கராத்தது. மருங்கிற்
செங்குத் தானகற் செறிவுள ததனை
லெங்குத் தாளைவந் திழிந்தே றுவது?
மன்னுமந் நதியின் வடகுண திசையிற்
றுன்னுபே ரணைக்கண் டுன்னலர் துன்று
வண்ண மிஞ்சி வான்றோய்ந் தளாவி
எண்ணரும் பொறியோ டிலங்கிப் படையொடு
தலைமா னூருங் கன்னிகாப் புடைத்தாய்
மலைநிக ரென்று வழங்கு மாட்சியுற்
றுலைகுண் டெனும்பெய ரமைந்துள வரணென்
றானகு வேற்கரத் தொருபதி னுயிரர்
கறையடி நிகர்தருங் காளை வீரர்கள்
உறைதரப் பெற்ற துணர்ந்துன் றிருவுளங்
கலங்க லென்னே? காசினி புரக்கும்
விலங்கல் வலியுடை வேந்தர் வேந்தே!

திம்ம. தானை காவல! சாற்றிய துண்மையே.
ஏனைய வலிநமக் கிருப்பினு, மெதிரி
தன்னுடை நிலையுந் தந்திரப் பெருக்கமும்
அன்னவற் குறுதுணை யரச ராற்றலுஞ்
சிந்தனை முற்றும் செய்தபின் னன்றோ
நந்தம் வலியெலா நயக்கற் பாலது?
அன்றியு, மாற்றல ரடங்கின ரேனும்
வென்றியே கருதிமேல் வினைவை யுன்னுவார்.
ஆதலா னம்மிறை யனுதின மவன்செய்
யேதங் களைவா னெண்ணிய செய்கை
சீரிதே. (கடைகாவலன் பிரவேசம்)

கடைகா. ஜெய! ஜெய! செங்கோல் வேந்தே!
மாரிபோற் பெருகி வழிகண் ணீரினன்,
திருவிழந் தவன்போற் றெளிவிலா முகத்தன்,
உருவ மாறி யுயர்வான் படிந்த
மஞ்சின் மறைந்த மதிபோன் மேனி

யெஞ்சினன், பகழியேறிய புண்ணின்
றுதிர மாறுபோ லொழுகு மெய்யன்,
எதிர்ப்படு வாரு மிரங்கத் தக்கோன்,
அதிர்தரு குரலா னையகோ வென்றகங்
குழைந்தவ னிருகரங் கூப்பியதலையன்—

கிருஷ். விழைந்தவ னெவனோ விளம்புதி, திம்ம!

கடைகா. மன்னவ! வைகை வளநா டுடையான்,
பன்னருங் கிளையும் பதியு மிழந்தோன்,
தண்மதிக் குலத்தான், சந்திர சேகரன்,
விண்மதி லோங்கும் வியனகர்க் கடையில்
நின்றன னின்னரு ணினைந்த நெஞ்சனாய்,
மன்றலந் தாரினாய்!

கிருஷ். (சபையோர்களைநோக்கி.)
வானிதிச் செல்வமும்,
தெண்டிரை வளாகச் சிறப்புந், சிற்றிடைப்
பெண்டிர்தம் போகமும், பேராற் றிடையி
காண்டகு குமிழியே! காத லோடு
பூண்டுற வாடிப் பொன்றுப் புகழை
எய்தின ரன்றோ விருந்தவ ரென்றும்?
(அரியநாதனைநோக்கி.)
வெயிலவன் படுதலும் விரிதலுங், குலாலன்
றிகிரியும் போலத் திரிதரும் வாழ்க்கை
யுகுத்தலால் வாடிநம் முழைவந் தோனைச்
சென்று கொணர்க.
(அரியநாதன் கடைகாவலனுடன் வெளியேபோக.)
(நாகமனைநோக்கி.) சேனாக தலைவ!
வென்றியே நம்பால் விளம்பினை. வழுதி
மன்னவன் விதியை வகுத்து நோக்கி
லென்னுடை யாக்கமிங் கேதாய் விடுமோ?
கீர்த்தியோ டிந்நாள் கேண்மை மிக்க
ம்பார்த்து கியர் புணர்ப்பினாற் றந்த
வெய்யெனச் செல்லு மிருபதி னாயிரங்
கொய்யுளைப் பாய்மாக் கொண்டநஞ் செயல்போல்,
பகைவனு மன்னவர் பண்டை நாடிநம்
தொகையினு மிரட்டித் துரங்க மாப்படை

யீட்டித் தருக்குட னிருக்கின்றான்.
கேட்டவென் கவலை கிளக்க லாவதே?

(அரியநாதன் சந்திரசேகரனுடன் வருதல்.)

விருத்தம்.

சந்திர. சரணம் விந்தைவாழ் மொய்ம்புறு தாரவ சரணம்
சரண மன்னுயிர்க் கின்னரு டந்தவ சரணம்
சரண மொன்னலர் முடிதொடு கழலவ சரணம்
சரணந் தண்குடை மன்னவர் மன்னவ சரணம்.

கிருஷ். (அரசனரியாசனத் தெழுந்து)

நிலைமண்டிலவாசிரியப்பா.

ஒழிக, ஒழிக, வுன்னுடை யவலம்.
செழியனே! வருக, செவ்விதி னமர்க.
யாதுநின் குறைதா னியாவருன் பகைவர்?
ஓதுக, வுன்பகை யொழித்தர சளிப்போம்.

சந்திர. விண்கொளப் பரந்து வியன்புக ழோங்கத்
தண்குடைக் கீழ்த் தாரணி தாங்குங்
காவல ரேறே! கஞ்சத் தடஞ்சூழ்
பூவலர் சோலைப் பொன்னிநா டுடையான்
வீரசே கரனும் வேந்தன் றருக்கிப்
பாரவெஞ் சிலைவிடு பகழிக் கிலக்கென
யாதொரு தீங்கு மிழைத்திடாத் தமியனை,
வாது புரியா வஞ்சமி லேனை,
மிடிபிணி நீக்கி வேலைசூழ் நாட்டின்
குடிகளை யோம்பிக் குளம்பல நிரப்பி
ஆலயம் புதுக்கி யன்னசத் திரமுஞ்
சாலையுஞ் சதுக்கமுஞ் சமைத்துச் சாந்தமாய்
மாந்தரும் விரும்ப மாண்புறு வேனை,
காந்திய மனத்தின் கதித்தெழு சேனை
கொதித்தெழு மாறு கூட்டிடா தேனை,
மதித்தவ னாகி வளர்ந்தனன் புரியை.
செய்திற னின்றிச் சிந்தை கலங்கியே,
உய்திற னறியா தொருபடை யீட்டி,
முரசொலி கறங்க மூரித் தானையோ
டரசனை யெதிர்த்துட னமர்புரி காலையில்,

அவன்படை வீரரா லவிந்தனர் பலரும்,
இவன்போர்ந் திட்டே னென்பதி யிழந்து.
தரணிகா வலனே! தஞ்சநின் சரணம்.

கிருஷ். (மிகுந்த ஆச்சரியத்தையடைந்து)
இரவலன் போலிவ ணெய்தி வருந்தும்
தன்மை, யந்தோ! சாற்றுவ தரிது!
நன்மையே புரிந்து நல்வழி நின்றோன்,
மன்பதை விரும்பு மாட்சிமை கொண்டோன்,
என்ப திவன் செயல். ஏனையன் வஞ்சன்;
பொல்லாச் சூழ்ச்சியாற் புக்கிவன் றனை
எல்லா மழிந்திட, விவன்றனை யோட்டிப்
பதிநிதி கவர்ந்ததைப் பாரீர், பாரீர்!

திம்ம. துதிப்படாம் போர்த்த துன்னல ரேறே!
உன்னுடை யாணை யுதய கிரிசென்
றன்னதற் கப்பா லார்கலி யோங்கும்.
அவனுறு குடிகளுன் னுளுகை யமர்ந்து,
புவன நின்போல் புரப்பா ரிலையென,
கோடையின் மாரியாற் குளிர்ந்திடு பயிர்போல்,
ஓடையிற் குதிகொண் டோடுமீ னெப்பக்,
கார்வரக் கண்டு களித்திரு மாந்து
வார்சிறை விரிக்கு மஞ்ஞை நிகர்ப்ப,
இன்புற் றிருந்தன ரேனை மன்னர்
துன்பந் தொலைத்துத் துறக்கத் தவர்போல்.
கொற்றவ! நின்குடை குமரி யெல்லை
யுற்றிடு கன்னியு மோங்கிய பொன்னியும்
கலந்து வாழ்தரக், கடவு ளிணைத்தே
குலந்திக ழிந்தக் குரிசிலைத் தூதாய்
விடுத்தனர் போலும். வேலைசூ ழுலகம்
அடுத்துநின் னாணை யமர்ந்து நன்மை
துய்த்திடுங் காலந் தோற்றிய தைய!—
பொய்த்த வஞ்சப் புணர்ப்புடைச் சென்னியைப்
போரிடை வீட்டலிற் பூட்டியே, வேப்பந்
தாருடை யார்க்கே தார்முடி சூட்டித்,
தஞ்சைமா நகரைத் தாங்கொளத் தகுமால்!

நாகம. விஞ்சையின் மதிவலான் விரித்த விநயம்
நன்கு! நன்கு! ஞால முடையாய்!
தென்குமரிக்கரை சேர்வது திண்ணமால்.

ராமன். வந்தனம்! வந்தனம்! வாகினித் தலைவனே!
சிந்தனை முடித்தவென் றெய்வம் வாழ்கவே!
குமரிநீ ராடினீர்! குவலயங் குலவுதென்
குமரிநீ ராடலுங் கூடலுங் கூடுமே!

(சபையிலுள்ளவர்கள் எல்லோருஞ் சிரிக்க.)

நாகம. மேனாள் வடாதிசை மேவித், துருக்கர்
நானு திசையிலு நலிந்தவ ரோடப்
போர்ப்பெருங் கோலம் பூண்ட நம்வலி
தூர்த்தன் சென்னியின் றோள்வலி தொலைக்கக்
குன்றலு மாகுமோ? கொற்றவ!

சேவப்ப. நால்வகை
யொன்றிய தானைக ளுடனுறச் சென்று
தாக்கின், வெற்றியைத் தான்பெற லாகுமோ-
ஊக்கிய தோள்வலி யுகுத்திட நேருமோ-
என்பது கருதியீங் கிருந்தவ ரல்லேம்.
அன்பொடு நம்பாற் றொன்றிய வேந்தற்
குறுதுணை யாகிநம் முயர்படை யீட்டி
முரசொலி கறங்க மொய்ம்பொடு செல்லுதல்
தந்திர மோவெனச் சிந்தைசெய் தேமால்.

கிருஷ். (நாகமனை நோக்கி)
வனைகழற் றானை வளைதர, வார்திரைக்
கனைகடல் சூழுங் கன்னிநா டேகி,
வெற்றி கொண்டிவண் மீளவல் லார்கள்,
மற்றைய ரெவரே மாற்றலர் சூழ்ச்சிக்
குள்ளுடை யாம லுறுத்து நின்று
நள்ளா ருயிர்க்கோர் நமனெப் பார்கள்?
ஆதலின், வீர! நம் மாணைமேற் கொண்டு
போதலே புகழ். நம் புரவிப் படையுடன்
சென்று சென்னியைச் சிறைகொடு, நம்பெயர்
நின்றிடத் துவச நிலைபெறச் செய்து,
அந்நில நமதா சாக்கிப், பாண்டி

மன்னவன் றனக்கு மணிமுடி கவித்து,
வருவான் செல்க.

நாகம. வார்முர சொலிப்பக்,
கரிவாம் புரவிதேர் காலாட் படையுடன்,
வழுதியின் வரவே, வைகைநா டுறுவன் ;
தொழுதனன் கணைகழற் றுணையடி விடையே.

கிருஷ். (சந்திரசேகரனைநோக்கி.)
நான மாடி நறுஞ்சாந் தணிந்து
போனக மருந்திப் பொலந்தவி சிருப்பாய்
கார்க்கடற் றுணை கலப்ப நாகமன்
போர்ப்பெருங் கோலம் பூண்டு நம்பால்
வந்து நல்லுரை வழங்குங் காலையில்,
சிந்தை மகிழ்வுடன் செல்லுக சீரிதே.

களம்—1. முற்றும்.

---

## களம்—2.

இடம்-கன்னியாமடம்—காலம்-எற்பாடு.
(காஞ்சனையம்ம—வீணையைமீட்டிப்பாட.)
கோச்சகம்.

தாதுலரா நறுந்தாமஞ் சாத்திமணி விளக்கெடுப்பக்
கோதையர்பல் லாண்டிசைப்பக் கொடியாடத் திருக்கோயிற்
கேதமிலாத் திருப்பணிக ளெழிலாக வியற்றிமனங்
காதலுற வடிபணிந்துங் கமலையருள் செய்கிலையே. (1)

தண்காட்டு வயனாடு தனையிறையு மறவிடுத்து
விண்காட்டு வியன்மதில்சூழ் விஜயநகர்ச் செல்வியெனப்
பண்காட்டி யாழிசைத்துப் பாடினனிற் பரவியருட்
கண்காட்டி யஞ்சலெனக் கமலையருள் செய்கிலையே. (2)

வேதமுமவ் வேதத்தின் வியன்முடிபு மெய்த்தவர்தம்
போதமுங்கண் டுணர்வரிய புண்ணியனுங் கண்ணனையே
நாதனெனக் கொண்டமரு நாயகியே நாதனருட்
காதலுறப் பெற்றிடவுங் கமலையருள் செய்கிலையே. (3)

(வீணையை யொருசார்வைத்துப் பெருமூச்செறிந்து
பஞ்சணையிற் சாய்ந்து.)
(நேரிசை யாசிரியப்பா.)

ஆயினு, நின்னையா னலுத்துக் கொள்வதென்?
தாயினு நல்லை நீ, தண்ணருட் செய்வதில்.
ஊனு றுடலெடுத் துலகுழல் மாந்தர்
மேனாட் செய்த வினைத்தொடர் பாலிப்
பிறவியின் பயனைப் பெறுவ ரென்பரால்.
அறியே னடியே னாற்றிய தொல்வினை.
தண்மதி போலத் தழைத்திடு முகமும்,
பண்புறு படிகநேர் பரந்த நெற்றியும்,
கலந்தவர்க் கருளுங் கமலக் கண்களும்,
விலங்கலை வென்ற விரைதவழ் புயமும்,
தருநிகர் தருங்கொடைத் தாள்தொடு தடக்கையும்,
உருவெளி யாக, விங் கொருவனைக் காட்டிக்
கனங்குழை யொருத்திமேற் கருப்புச் சிலையினைத்
தனங்கவே ளெய்த வாறாப் புண்ணிற்
றென்ற னுழையத் தெருமர லுற்றேன்.
இன்றெனை யஞ்ச லெனக்கரங் கவித்தென்
மனத்துட் புக்க மன்னவன் வந்தியா
னினைத்த வண்ண நேர்படா னெலயன்
அவமே! யவமே! யமைத்தன னந்தோ!
தவமே யிதுவோ? தரிக்க வல்லேனோ?
இனைய னன்றிமற் றெவரா யினுமென்
கனவி லொருகாற் காணப் படினும்,
நண்பாக் கொள்ளே னானிலத் தவனாப்
பெண்பா லார்போற் பேசி வெறுப்பன்.

(மதிவிலாசனியும், மூர்த்தியம்மனும் உரையாடி உள்ளே
பிரவேசிக்க)

**மதிவி.** ஏடி! யென்? னிதுவரை யாதுதான் செய்தனை?
போடிபோ! யிந்தப் புதுமலர் நோக்காய்
கான்மர கதம்போற் காண்பது காணாய்.
பானிற விதழ்ப்புறப் பகுதியைப் பாராய்.

வன்ன வகவிதழ் வனப்புமின் ஞூர்நுதற்
றுன்னுருங் குமம்போற் றுலங்குவ பாராய்.
கண்ணெலா முயரக் கட்டி வைத்ததோ
ரெண்ணரு மூசிரே ரிலங்கிய பொருட்டையும்,
ஈங்கொரு சேய்தன் னெழிஞ நீட்டிய
பாங்கென வோரிதழ்ப் படிவையும் பாராய்.
வெறிகமழ் மணமும் விராஅய்க் கலந்த
செறிபொடி நலனுந் திகழ்தர நோக்காய்.
இங்கொரு மூவே மேற்றுத் திருநதிய
பொங்கரென் பகுதியிற் பொலிவுற விளைந்த
இந்நிலத் தாமரைக் கிணையெனச் சிறிதும்
உன்னுடை மலரை யுரைத்திட வொண்ணுமோ?
சேடியுன் செய்கை தெற்றெனத் தெரிந்தது மூ
ராடவற் குள்ள மழிநதனை யாக, வுன்
புலத்தைக் காத்திலை, புலத்தையுங் காத்திலை.

மூர்த்தி. நிலத்தவ ரியற்கை நிகழ்த்திடக் கேண்மோ.
தன்னினை வயலார் தம்பாற் றென்றிடு
மென்னு முரைபோ லேதடி நவின்றாய்
மெத்த மெத்த விளம்பினை பாயிரம்,
அத்தனை வார்த்தைக் காளலே னம்ம!
கவலை யென்றதோர் கானகம புக்குழ
லிவளோ நின்றொழிற் கிணையெனப் படுவாள்?
காளையின் வலியேன் காக மறியு? நீ
ஏளனம் பேசுவ திததனை யோதான்?

மதிவி. அருமைக் காஞ்சனை யம்மனைப் பாஙகியா
மருவிய நமக்கும் வருங்குறை யுளதோ?
உள்ளக் கருத்தெலா மொளியா துரையாய்

மூர்த்தி. கள்ளத் தனமுங் கபடமு மறியேன்.
பித்தரைப் போனுளம் பேதித் தவளாய்ச்,
சித்தமுஞ் செயலுஞ் சிந்தியே, நாளும்
எய்த்து மேனி யெழினமிக வாடிப்,
பொய்த்துயில் கொண்டு புலம்பா நின்றாள்
மாது காஞ்சனை, மனத்துய ருக்கோ
ரேது வெண்ணி யிருந்திடு வேற்கிதன்

மேலுள குறையும் விளம்ப வேண்டுமோ?
ஏலவார் குழலாய்! இதனைச் சிந்தியா
துன்புக ழோதி யுவந்தனை, யுள்ள
மன்புறு தோழி யவல மறியாய்,
பேதை!

மதிவி. உலகம் பேதமை யென்பது
மாதர்க் கணியென வழங்கிய சொறகோர்
சான்று யினனவ டன்மைதே ராதனித்
தான்றனி வருந்துந் தையலைக் காண்பான்
வல்லை யெழுக, மதிநுத லாய்! அவ
ளில்ல நண்ணி யியற்கையை நாடுதும.

(இருவரும் உள்ளே பிரவேசிக்க, காஞ்சனை உருவெளித் தோற்றங் கண்டு வருந்தி)

காஞ்ச. நாயக! வடிவா ணமைவொ முணர்ந்தும,
வாய்திறந் தோருரை வழங்கு கின்றிலே!
காண்பது நனவோ, கனவோ கண்டது? இங்
காண்டகை யுருவ மமைந்து நின்றதோ?
மாயமோ! வறியேன். மந்த காசமு,
நேயமுஞ் செவ்வியு நிறைந்த முகமும்,
தந்தியின் கரம்போற் றழைத்த கையும,
விந்த கிரிபோல் விளங்கிய புயமும்,
புலப்படா நின்றது, பொய்யோ? மெய்யோ?
வெலப்படா எிவளென வேனிலான் றன்னுருக்
கரநதென் னுருயிர்க் காதலன் மான
வுருவம் பூண்டு வொளிந்து வநதனனோ?

மூர்த்தி. (தனியே) நில்லு! நிலலடி! நெஞ்ச மழிநதிவள்
பல்லுரை கூறிப பரிவுறு கின்றனள்!

மதிவி. அணையிடந துன்னி யமாந்தனள் தனியே;
துணையெனப் போநதவா தோன்று கின்றிலர்;
ஏழை! யெவருட னிததனை வார்தை?

காஞ்ச. (பொருக்கெனவெழுந்து).
தோழியர்! வருக.

மூர்த்தி. தோகை! யென்னிது?
துணைவிழி கலங்கித், தொடிவளை நழுவி,
அணைமலர் கரிந்தன் அங்கம் பசந்து

வருந்துவ தென்னை? மாதர் திலகமே!

(மதிவிலாசனி காஞ்சனையுடலைப் பரிசித்து)

மதிவி. அருந்துணை யம்ம! அடிக்கின் றதுசுரம்.
வெந்தழ லொப்ப வெதும்பு கின்றது.
பைந்தொடி யாகம் படபடக் கின்றதே!

காஞ்ச. பக்கத் திருமின்.

மூர்த்தி. பாவை யனையாய்!
துக்கசா கரத்தே சுழன்று வாடினம்.
ஊதையிற் பட்ட வொருமரக் கலம்போல்,
ஏதப் படப்பார்த் திருப்பது மியல்போ?
உடற்குறு பிணியா லொல்கினை யோ? வுளம்
படப்பல கவலை பற்றிய துண்டோ?
உற்ற வாறெலா மொழியா துரையாய்.
மற்றவை முடித்துன் மனக்குறை தீர்ப்பன்.

காஞ்ச. (மதிவிலாசனியைநோக்கி.)
செய்யவள் பாத சேவைக் கான
துய்ய நறுமலர்த் தொடைய லாதிகள்
கொண்டிவண் வருக, கோதையே! முனிவரு
மண்டரும் பரவு மாலையஞ் செல்வாம்.

(மதிவிலாசனி வெளியே செல்ல.)

புனத்துட் குதித்திவண் போந்திம் மாடத்
தினத்திற் றப்பி யிருந்ததிம் மானென,
மலர்க்கணை யைந்தும் வழங்கி, மாமோக
வலையெடுத் திங்கு மன்மத வேடன்,
குயிற்குழாங் கூவக் குரைகட லொலிப்பப்,
பயப்பய வந்து படுத்த வருந்துமென்
மனப்பிணி மாற்ற மருந்துமுண் டாங்கொலோ?
கனக்குழை மேற்பொரு கயனெடுங் கண்ணாய்!
எதினி யென்ன விலக்கியங் கண்டனன்
ஆதர வாக வமைதர விலக்கணங்
கொண்டபின் அன்றோ கூறுவன் காரிகை?

மூர்த்தி. வண்டறு நறுமலர் வார்குழன் மாதே!
இலக்கியங் கண்டதற் கேற்பச் சிலேடை
சொலப்புகுந் தனை; யுன் சொற்பொரு ளறிகிலன்.

பாங்கியர் மாட்டும் பகரொணுச்செய்தி
ஈங்குனக் குளதென வெண்ணு கின்றிலன்.
வேட்கை யாவும் வெளிப்படை யாக, மென்
றோட்கிணை யில்லாத் தோகையே! சொல்வாய்.

காஞ்ச. பதவியல் முற்றும் படித்தன னென்றாலும்,
அதனுறுப் பிலக்கண மறையென விழைந்து
கேட்டனை யாயினும், கேள்வனை யொருத்தி
கூட்டுக வென்பார் குவலயத்துளரோ ?
அறைகழல் பூண்ட வாடவர் திலகன்,
விரைகமழ் தாரான், விச்சுவ நாதன்,
வந்தெனை யிந்நாண் மருவிடா னென்னிற்,
சிந்தனையுறுதுயர் செப்பவும் வேண்டுமோ ?

மூர்த்தி. மெலியேல் ! மெலியேல் ! மெல்லியல்! அந்த
மலைநிகர் திண்டோண் மன்னவன் றன்பாற்
சென்றவற் கொணர்ந்து சேர்த்துவன்,
மன்றல் கண்டு மகிழ்ந்துநீ வாழ்கவே !

களம்—2. முற்றும்.

---

## களம்—3.

இடம்—நாகமன் வீட்டில் ஒரு சித்திரவறை; காலம்—காலை.
(நாகமன், மங்கம்ம, விசுவநாத, அரியநாத, அச்சுதப்ப
முதலானவர்கள் கூடியிருப்ப.)
நேரிசையாசிரியப்பா.

நாகம. (இளவரசைநோக்கி.)
அச்சுத ! வரச ஞெணையை யறிவாய்.
கச்சைக் கடாம்பொழி களிறுதேர் காலாள்
புரவிப் படையும் புணர்ந்து பின்வரப்,
பரவை சூழும் பாண்டிநா டுற்றுப்,
பகைவனை வெல்லப் பயண மாயினன்.
நகுமணி யொளிர்தர நான்ற மாலையாய் !
நின்வயி னன்புறு நேயனும் நாதன்
தன்னை யுன்பாற் றந்தனன். பிரியா

தென்று மிரண்டுடற் கேன்றவோ ருயிர்போற்
றுன்றி வாழ்தற் றோழமைத் தாமால்.

அச்சு. ஐய! விவன்றுணை யாருள ரெனக்குச்;
சைய மொருகாற் சலிக்கினுஞ் சலியேம்
இன்பத் துன்ப மிரண்டிற் குடநதையாய்,
அன்பெனுந தளேயா லார்க்கப பட்டதாய்,
வன்பகை தொடர்ந்து வருததிடிற் றன்பொரு
ளென்புயி ரியாவையு மீநதிடத தக்கதாய்த்,
துலங்குத லன்றோ தோழமை யென்ப?
விலங்கிநீ ரேகுதல விழைந்தி கிருவரும்
பூத்த மலர்போற் பொலிதர விளங்கி
ஆத்தும யோக வானந்த வாரி
திளேத்துப பருகித தெவிட்டா திருந்து
களித்திடற் கேது காட்டி நின்றதே!

மங்க. (கண்ணீர் ததும்ப.)
காவலன் பின்னவன கழறிய வாசகம்
மேவிய வுவகை விளேத்த தாயினுங்,
குஞ்சைத் தனியே கூட்டி லிருத்தி
யஞ்சிறைப் பறவை யகல்வது போல,
தாயிலாப் பிள்ளேபோற் றனித்துறை தரவெனை
சேயைப் பிரிந்து, யான் சென்றிடக், கொடிய
விதிப்பய னிதுவாய் விளேந்தது கொல்லோ?
பதியுடன் சென்றுனைப் பாரா திருக்கவும்
இசையுமோ வென்னுளம், என்குலக் கொழுந்தே?
பசியறிந் துனக்குப் பாலமு தூட்டுவா
ரெவருளர்? எனேப்போ லெவரந தாயென
வுவகையோ டழைப்பாய்? ஒப்பிலா மணியே!

விசுவ. அன்னையே! உலகெலா மளிக்கின் றவர்தமக்
கென்னேக் காத்தற் கிரும்பொறை யாமோ?
அறைகழற் றந்தையா ருருளுநின் னன்பும்
இறைமகன் றுணையு மேற்றிடு வேறகுத்
தனிமை யெவணுறும்? தளரேல். உனது
மனனுறு கவலையை மாற்றித், தந்தை
யுடனுறச சென்று, அவற் குறுபணி யியற்றிப்
புடையமர்ந் திருத்தல் புகழையே தருமால்.

அன்றியும், ஒருரை! அடையலார் தம்மை
வென்றிடற் கையன் விரைந்திடு காலையில்,
நீதுய ருழத்தனன் னிமித்த மன்றால்.

நாகம. நாதனே! உலக நயப்ப நவின்றனை.
தூய்மையே யுள்ளந் துணிதிற னன்று
வாய்மையே மைந்த! மற்றுள சிற்சில
நன்மொழி யுளதனை நாடிக் கோடியால்.
உண்ணினை வயலார்க் குரைக்கொணாது. ஆராய்ந்
தெண்ணிடா தொருதொழி லியற்றலொண்ணாது.
எவரொடும் பழகுத லினிது தாழ்மையா
யவருடன் பயில லழகுடைத் தன்று
குணங்கண் டொருவரைக் கூடுக. கூடின்,
இணங்கி யன்பொடு மெஃகாற் பிணிப்பாய்.
ஒருநாட் பழகுமுன் னுவந்தவர் தம்மைப்
பெருநட் பாளர்போற் பேணிப் புகழ்ந்தவர்க்
கொண்ணிதிச் செலவுசெய் துயர்விருந் திட்டுன்
கண்ணியங் கெடவீண் காலங் கழியேல்.
வலிய போற்கெழேல், வந்துனை யடைந்தார்
நலத்தை நோக்கி நயந்திட் டாயெனில்,
ஒன்னலர் வெருவ வோட்டி யுன்புகழ்
தன்னையே நானிலஞ் சாற்றிட நிற்பாய்.
எவருரை களையு மேற்றுக் கொள்கநீ
உவகையோ டொருவற் குரைத்திட நினையேல்.
நின்வயிற் பிழையெவை நிகழ்ந்தினும், அதனை
நன்மொழி யாக நயந்து கொள்க.
ஒருவரைப் பற்றி யுணர்விப் பிராயம்
தருவது நினையேல். தகுதிக் கேற்ப
வாடையா பரண மணிந்து கொள்க
ஆடம் பரங்க ளகற்றுக எனெனில்,—
உடைநடை தன்னால், ஒருவன் குணத்தை
யடைவுடன் காண்ப ரறிவுடை யார்கள்.
வண்பொருள் கொடுத்தல் வாங்க லுன்னேல்.
நண்பினை யகற்றும். நலிந்து கேட்பையேல்,
கடனை வாங்குதல் கணக்கறு செலவுக்
கிடனும் இல்லிற் கிடரிழைத் திடுவதாம்.

ஆதலால், இவையெலா மறிந்துநீ மேலாம்
போத மேவிப் புகழுடை னிற்பையேல்,
பொய்ய னென்றுனைப் புகன்றிடா ருலகில்,
ஐயனே! என்மொழி யனைத்துங் கொள்கவே.

(அரியநாதனைநோக்கி.)

மன்னவ னாணையும், மதிக்குலத் துதித்த
தென்னவன் குறையும், சேர முடிப்பான்
நின்றனன், வென்றி நினைந்த நெஞ்சுடன்.
குன்றுறழ் தோளினாய்! குரைகடற் றானையை
யீட்டினை யாயின், இன்னே வழுதி
நாட்டினை நோக்கி நடத்துக. நாமும்
எழுந்தனம்! எழுந்தனம்!

அரிய. (இணையடியைத் தொழுது) ஏற்றி ஏற்றித்
தழும்புறு வரிசிலைத் தடக்கை வீர!
இடிகுரன் முரசொலி யெழுவெழுந் திட்டதிப்
படியினை வளைந்தவேழ் பரவை யாமெனத்,
திக்கெலா மொருவயிற் றிரண்ட தாமெனப்,
புக்கதுன் றானை, பொருவில் வீர; நின்
றிருவுளப் படியே சேர்க
விரிகதிர் முத்தம் விளைதமிழ் நாடே.

களம்—3. முற்றும்.

---

## களம்—4.

இடம்—உத்தியானவனம்; காலம்—எற்பாடு.
(அச்சுதப்ப, விசுவநாத, காஞ்சனையம்ம, ஒருசார்
பூக்கொய்து உரையாட)

நேரிசை யாசிரியப்பா.

அச்சு. அகோ! பார் அன்ப! அழகொடு பொலிந்து
தொகாது பெருகுந் துய்ய மணங்கமழ்
மருதைத் தழுவி, வண்மலர்த் தோற்றி,
அருங்கொடி முல்லை யணைந்தது பாராய்!
அண்டமாம் புருடன் அங்கம் போர்த்துக்
கொண்ட படாம்போற் குலவுதல் காணாய்!

விசுவ　மாட்சிமை யாக மகிழ்ந்துநீ கண்ட
காட்சி யுண்மையே! கழறுவன் கேண்மோ.
மெலியார் வலியரை விரும்பிச் சேர்தலும்,
வலியா ரவரை மருவி வாழ்தலும்,
உலகிய லென்பதை உற்று நோக்குக.

அச்சு.　அலகிலாக் கேள்வி யறிவுடையாய்! அதன்
பொருவறு மலரின் புதுமையென் சொல்கேன்!—
விரிதரு ககனம் விளங்குதா ரகையினஞ்
சொரிதருஞ் சோதியோ? சோமன் கிரணத்
துண்டத் தொகுதியோ? துலங்குவ காணாய்!
அம்மலர்க் கணையா னனங்கவே யெய்து
மம்மர் விளைத்து மாதரை யலைப்பனால்!

விசுவ.　ஏனைய மலர்தனக் கிணையிலை யென்றே
தானகை செய்து தயங்குவ காணாய்!
கொடியிடை நுடங்கக் கொழுகொம் பேறிப்
படர்தர நின்ற பான்மையை நோக்கின்,
கடிமண மார்ந்துதங் கணவரைப் புல்லுங்
கடிமலர்க் கருங்குழற் கன்னியர் போலுமால்!

அச்சு.　மீதணிற் பிள்ளை மேவிக் கோதவோர்
மாதுளங் கனியவண் வயங்குதல கூதநர்
காலுயர் காம்புறக் கைததலந தொங்கவிட்
டாலுத லொப்ப வமைசவது பாராய்!

விசுவ.　தீதற வொருதொழிற் சிநதனை யுறுவா
ராதர மாக வடங்கு மாறுபோல்,
காமா திகளெலாங் கலப்பவு மனைதை
போமா றுறுத்தைம் புலனையு மொடுக்கித்
தழைக்குடின் மேவித் தலைசி ழாக
விழைக்கு மாதவ விருடிகட் கிணையெனப்,
பொருந்திய தவத்தைப் பூண்டிருக் கின்றது; என்
அருந்துணை வா! இத னகம்புற நோக்காய்!
நிறைமொழி மாந்தர் நீள்கலை பயின்று,
பொறையுட னடங்கிப் புகழ்பெறுந் தன்மைபோல்,
ஈண்டுநீ கண்ட விணையிலாக் கனியுட்
காண்டகு செந்நிறக் கற்களை நிகர்ப்ப

நீர்த்துளி நிரம்பி நிலவிட மேற்றோல்
போர்த்து நின்ற பொலிவையும் பாராய்!

காஞ்ச. (தனியே நின்று)
அச்சுத னுரைக்கெலாம், ஆங்கவ னுள்ளமும்
மெச்ச மெச்ச விளம்புகின் றன்விடை.
என்னே! இவன்கலை யிருந்தவா? இவன்குணம்
பொன்னே யெனிலது புகலவும் பொருவுமோ?
தோய்ந்த பொருணயஞ் சொன்னயம் பலவும்,
வாய்ந்த நலமிகு வார்த்தையி னழகும்,
மெள்ளப் பலவுரை விரும்புவா ருள்ளங்
கொள்ளு மாறு கொடுக்கு மாற்றலும்,
என்னே? இவற்கிணை யிருங்கடல் வளாகத்
துன்னி யொருவரை யுரைத்திட வொண்ணுமோ?

அச்சு. நிலவிறி செழுந்தபன் னிறமுறும் பூப்போ
லலர்தலை யுற்ற வலரியை நோக்குக!

விசுவ. கல்லா வொருவன் கற்றவர் நாப்பண்
எல்லா மறிந்தவ னெனவெழுந் திருந்து,
விரைந்து பலபட விளம்பும் பயனிலா
வுரைகளில், அவனுடை யுணர்விற் றோற்று
துதித்திடு மற்புத வுரைகளைப் போலக்,
குதித்தெழு பூவின் கோலநீ காண்டியால்!

அச்சு. தங்கிய மகிழ்பா தருக்களின் மேற்றம்,
மங்கைநல் லார்கள் மணவறைப் பந்தரில்
கரதலம் பொருந்துமண் கலசம் பலவுடன்
வரமுறு பாலிகை வாங்கிநிற் றலையுறும்.
ஒளிர்தரு நின்றதை யுவந்து காண்க நீ!

விசுவ. உளப்பிணிப் பெலலா மொடுங்குமா றுயர்ந்த
சிவப்புகழ் வாய்ந்தொளி சிறந்த யோகியர்
தவப்பெரு நறுமணந் தழைத்த சரீரந்
தேசுடன் கலந்து திகழ்வது மானுமால்!

அச்சு. காசினங் கவினுங் கனக மாலையாய்!
வாவியிற் பூத்திகழ் வாடிய தாமரை
மேவிய நறுந்தேன் மிகுந்து நண்பகல்
நீரிற் படிதலா னினிற வானந்
தூர்தரு செக்கரை யொக்கும்! ஒக்குமால்!

விசுவ. தோழ ! நீ நீரிற் றுலங்கிய தேனையே
யாழ்ச் சிந்தனை யாய்ந்து நின்றனை.
மாலை வந்திட மலருங் குவிந்தது.
காலையி லலர்ந்து கவினுறச் சிறந்த
பங்கயம் வாடிய பான்மையைக் கருதி
யிங்கித மாக வியம்பினை ; கேண்மோ !
தாமே யுவந்து, தம்முட லாவி
யேம மாதி யிசைபெற வளித்து, அங்
கிரவல ரின்பம் பெற்றதைக் கண்டு,
பரவச மாகிப், பங்கயக் கண்க
ளானந்த வாரி யரிவி பெருக,
வானந் தமதென வாழ்வுறு வள்ளலார்
மானவே, தம்பான் மகிழ்ந்து வந்து
கான முழக்குங் களிவண் டருந்த
மதுவினைத் தந்து வாய்ந்த வுடற்பய
னிதுவெனக் கொண்டு, இங் கிரங்கி யிரவலர்
வருஞ்செயற் குரிய மாதவ மிலையென
வருந்திச் சோர்ந்து வணங்கி நின்றன !

அச்சு. பளிங்கிடை வச்சிரம் பட்டப், படி குயிற்றித்
தளங்கொளச் சமைத்த தடமலர் குவளை,
காசினைப் பறிக்கக் காமுகர்ப் படுத்தும்
வேசை மாதர் வேல்விழி களைப்போல்,
அவிநயங் காட்டி யழைக்கின் றதைய !

விசுவ. புவியெலாங் காக்கும் புரவலன் மதலாய் !
கற்பகச் சோலை காட்சி மிக்குறப்
பற்பல வளங்கள் பயிற்றுவான் வேண்டியே,
ஆசினி புரப்போ னாயிரங் கண்களால்
காசினி யுற்றநின் காவளங் கண்டனன் :
அன்னவன் கண்க ளனைத்து நிழலாய்த்
துன்னியித் தடத்திற் றுலங்கின போலாம் !

காஞ்ச. (தனியே)
அருங்கலை விநோதன். அறிவெனு மளக்க
ரிருங்கரை கண்டோன். என்னுயிர்க் காதலன்.
மன்னெடு மிசைத்த மாண்புறு மொழிகளின்
தன்மையை நாடிற் றகவுடை யோர்களும்

சிரத்தினிற் சூடுஞ் சிரோமணி போல்வான்.
ஆர்கலி போலவாழ்ந்த வறிவினன்.
பார்மலை போலப் பரந்தவெண் ணத்தினன்.
இவனுட னொருமொழி யெழில்பெற விசைத்தே,
யவனிலை யைய வறிவா னமைய
மிதுவே! ஓ! ஓ! வெழிற்பன் னசாலை
வதிதருங் குயிலின் வார்த்தைக் குருகி,
யதனுள் ளமைத்த வழகார் பளிங்கி
னிதமுறு பீடத் திருந்த மயிலுங்
களிநட மற்றுக் கலங்கி யுள்ளந்
தெளிவில தாகித் திகைத்த செயலையே
கற்பனை கலப்பநங் கருத்தையு மவ்வழி
யற்புத மாக வறைந்து, அவ னுள்ள
மறிந்திட னலமாம்! (விசுவநாதனை நோக்கி)
ஐயன்மீர்! கேண்மின்!
செறிந்த கொடிகள் சிறப்பொடு படர்ந்த
சாலையை நோக்குமின்! தனிக்குயி லொன்று
மேலிருந் திசைநயம் விளம்பு கின்றது.
உள்ளொளி பரப்பு முயர்பளிங் கிருந்து,
தெள்ளறு தேனிசை தெவிட்டா துண்டு,
களித்திடு கின்றதிக கலாப மயிலும்!

அச்சு. ஒளிப்பருங் காத லுற்றவோ ரரிவை
மனக்கினி யவனென மதித்திடு லவனைத்
தனக்கொரு துணையெனத் தான்பெறக் கருதி
யன்னவன் குணங்க ளனைத்தையு நினைந்து
தன்னந் தனியளாய்த் தயங்குவள் போலக்
குயிலிசை கேட்டுக் குனிநட மொழித்து
மயிலிது நின்றது, வம்மின்! காண்மின்!

விசுவ. மங்கை மொழியிவண் மதிக்கத் தக்கது!
நங்கை! என் னுரையு நயக்கற் பாலது!—
நின்னுரை மிக்க நேர்மை கொண்டது!
முன்னவர் பெரியார்; முத்தியை நாடி,
யீசனைச் சேர, வெரியின் மெழுகுபோல்
பாசப் பவக்கடற் பத்தியா னீந்திட
வுள்ள முருகி, "ஒளிமணிப் பாவாய்!

எள்ளினுள் ளெண்ணெய்போ லெங்கும் பரந்தாய் !
கரும்பின் சுவையே ! கருத்தினுட் கருத்தே !
விரும்புவா ருள்ளம் விளங்குமெய் விளக்கே !
கன்றினைப் பிரியுமோ காராம் பசுதான் ?''
என்றுதான் கதறி, எவனினைச் சேர்வது
என்னத், தலைவி யிரங்கற் றுறையாத்,
தன்னுடைச் சிவன் றன்னையே தலைவியாய்,
பரமனைப் புருடனாப், பாடிக் கூடினர்
கரதலங் கூப்பியென் கண்கொளத் தக்கவர்,—
என்பரா வணிந்தோ னிணையடிக் கென்று
மன்பருக் காழி யருமறை முனிவனுந்,
தேவினுக் கினிய திருத்தாண் டகஞ்செய்
நாவினுக் கரசனும், நள்ளிருட் பொழுதரன்
சந்தெனக் கொண்ட தம்பிரா னாரூர்ச்
சுந்தர மூர்த்தியுஞ், சொல்லி னமுதையே
காணிக் கையென்று கரைந்து பாடிய
மாணிக் கவாச கனும், புகழ் வாய்ந்த
காவிபின் சென்ற கண்ணனை மறித்த
வாலி நாடனும், 'அத்தைத் தின்றுதான்
அங்கே கிடக்கும்' என் றருளிச் செய்ய,
சங்கை யொழிந்து சரண்புகு புலவன்
எம்மாழ் வாரென விசைத்த வாய்மொழி
நம்மாழ் வாரும், நானில மேத்தவே !—
நீயு மத்தகை நினைந்தனை, நங்காய் !
தோயு மன்பினுற் றோகையுட் படுத்திப்,
பாங்குடன் குயிலும் பாடு கின்றது.
ஆங்கது போல, அகிலமும் புரப்போன்
இடையறு வன்பொடு மிரங்கு மன்பரை
யடைந்திட லுன்னியே யவாவுறு கின்றனன்,
பைந்தொடி ! (அச்சுதனைநோக்கி)
அச்சுத ! பாரினில், மாந்தர்
விந்தையை நலனை வெஃகிய பொருளை
விரும்பியே கலந்து விவாகஞ் செய்வர்.
தருவமர் குயிலுந் தனித்த மயிலு
மொன்றி யிரண்டுடற் குயிரொன் றாகியே

நின்ற நிலையை நேர்ந்து நோக்குறில்,
ஆடவன் மனமு மரிவை யுள்ளமு
நாடி யொன்றுத னன்மண மாமால்!

(ஓர் சேவகனும், மூர்த்தியம்மனும் உள்ளே பிரவேசிக்க)

சேவக. ஐயன்மீர்! உங்க ளச்சுவ மிரண்டுஞ்
செய்ய கல்லணை சேரப் பூண்டு,
காற்றை முகர்ந்து, காற்குளம் பெற்றி,
யாற்றெரு வேகத் தமைந்து நின்றன.

அச்சு. நாத! செல்லுதும்; நங்கையர் திலகமே!
போது நாங்கள்.

(சேவகன் பின்னேவர அச்சுதனும், விசுவநாதனும் விரைந்து செல்ல.)

காஞ்ச. (பன்ன சாலையைநோக்கிச் சென்று)
புகன்ற குயிலு
மேகிடத் தனியே யிரங்குமென் மயிலே!
சோகமா யினையோ, தொடிவளை போல?
(பளிங்குமேடையிற் சாய்ந்து)
திருந்திய பளிங்குஞ் சீதளந் தருமென்
றிருந்தனன்; அதுவு மெரிபோற் சுடுதே!
(முல்லைமலர் மேலே உதிர)
நலங்கொளக் கொடியாய் நானுனை வளர்த்தேன்.
பொலங்கொண் மலரே! பொறியா யினையே!
(அன்றிலின் குரலைக்கேட்டு)
அன்றிலே! யுன்ற னருங்குரற் கேட்ப
வின்றென தாவி யிரங்குகின்றதே!
(இளந்தென்றல் மகரந்தம்பூசி நீர்த்திவலை வாரியிறைப்ப)
தென்றலே! கொடியாய்! திவலையோ டெழுந்த
மன்றலம் பொடியும் வாளாக் கொணர்ந்தனை!
ஏனித் தனைவிரு தெடுத்தனை? ஏழை
தானித் துணையுந் தரிக்க வல்லளோ?
(அந்திவானை நோக்கி)
வடவைபோற் பரந்து வளர்ந்த செக்கரே!
சுடுதொழிற் கஞ்சினன். சுடரோன் றொடுகடற்
பட்டனன். இனியிப் பாவையைச்

சுட்டனை யென்பது சொல்லவும் வேண்டுமே ?
(பூரணசந்திரன் உதிக்க)

(விருத்தம்)

எஞ்சும் பொருளைப் பெறத்திரைக ளெழுப்பாற் கடலைக் கடைந்திடுநாள், துஞ்ச னீக்குமமுதுடனே தோன்றி வளர்ந் தா யானுலு, நஞ்சின் வாடை பட்டதொரு நயத்தா லிந்தக் கயத்துள்ள, கஞ்ச மலரோ டென்னையுநீ கடிவா னெண்ணி வந்தனையே. (1)

தண்மைக் கிரணம் பொழிந்துலகந் தழைப்பக் குளிர்ச்சி தனை நல்கு, மொண்மைக் குரியா னென்றுன்னை யுரைத்தார் பெரியா ரதுநிற்க, பெண்மைக் கென்றே யெரிகதிராய்ப் பிறங்க லிந்தப் பேருலகோர், உண்மைக் காத லுறுத்துவ னென் றுரைத்த மொழியை விளக்கிடவோ. (2)

(வேறு)

மார வேள்குடை மன்னிய நாளவன்
நீர முற்றுந தெரிந்தனை கண்ணுதற்
போரி லங்கம் பொடிந்தது கண்டநீ
நேரி னிற்க நினைந்தனை நேர்மையே (3)

பொங்கி நின்று புகைந்தெரி யூட்டினை
நங்கை யர்க்கிடர் நல்கினை யாதலின்
அங்க நாளு மழிந்துற லாயினை
யெங்கள் பாவ மிருந்தது திங்களே ! (4)

பொன்னொ டும்பிறந் தேபுகழ் பூண்டனை
யென்னி லேழைய ரேங்குறச் செய்வதே
யுன்னி நின்ற துனக்கழ காகுமோ ?
வென்னை நோக்கி யெழுந்திடு திங்களே ! (5)

நேரிசையாசிரியப்பா

மூர்த்தி. ஏதடி ! யம்ம ! எதிரிவ ணிருந்த
பேதையை மறந்தனை, பேதுறு கின்றனை.

பொழுது சென்றது. பொன்மனைக்
கெழுக, எழுக, ஏந்திழை! எழுகவே!

களம்—4. முற்றும்.

அங்கம்—1. முற்றும்.

## அங்கம்—2.

### களம்—1.

இடம்—சோழமாளிகை, சோழன் படைவீடு. காலம்-மாலை.
(வீரசேகரன், கோலாகலன், குணவர்மன், இராஜசேகரன்,
வில்வலன், குபேரன் முதலானவர்கள் வீற்றிருப்ப)
நேரிசை யாசிரியப்பா

வீரசே. பற்றல ரேவநம் பாங்கர் வந்த
வொற்றரைப் பிடித்ததா வுரைத்தனை. அவராற்
பகையவர் சூழ்ச்சியும் படைத்துள வலியுந்
தொகைபெறுஞ் சேனைத் தொகுதியி னுழும்
அறிந்தனை கொல்லோ? ஆர்கலி போலச்
செறிந்த நம்படைத் திரளணி வகுத்துப்,
பகுதிக டோறும் படைத்தலை வீரர்
தகுதியிற் செலுத்தத் தங்கனை கொல்லோ?

கோலா. விரைகமழ் பைந்தார் வீர சேகர!
திரையெனப் படருறுந் திறனுடைப் புரவியின்
அளவுநான் கிரட்டி யாயிரம். கரியின்
வளப்படை யிரண்டு நூ றென்ன வந்தது.
வேலொடு வாள்வில் மின்னிட நின்ற
காலா ளிருபதி னாயிரக் கணக்கொடு
வந்த படையிரு வகுப்பா வகுத்துத்,
தந்தம் படைக்குத் தகுந்தள கர்த்தர்
நாகம னரிய நாதனு நின்றனர்
ஆக, அவருள வறிந்துநந் தானப்
பிளிறொலி கொண்ட பிறங்கன் மானுங்
களிறொன் றிரண்டு கலந்த நூறுந்,
தரங்க நிகர்ப்பத் தாவிச் செல்லுந்
துரங்கப் படையின் றொகுதியெண் ணாயிரங்,
கனைகழற் கச்சணி கைப்படைக் காலாள்

இனமிரு பத்தோ டிரண்டொரு மாயிரம்,
ஆகநம் படையிரண் டணியா நிறுத்தினன்.
வாகை நெடும்புகழ் மன்னவ! நீயு
நானு மன்னவை நாயக மாக
வேனை வீரரோ டெழுவதா யெண்ணினன்.

வீரசே. அன்னதே செய்கை, யம்ம! அழகிதே!
கன்ன மதம்பொழி கரிப்படை யாவும்
என்வயிற் றருக; இருந்தனன் குபேரன்
வன்படை கொண்டு வருதினிக் கடலை
மந்தரம் போல மதித்திட நிற்பான்.
தந்திர நடத்துந் தடக்கைச் சிலையணி
விலவலனை றனனை விழைந்து கொள்கநீ.

குபேர. மலைவலித் திண்டோண் மன்னவ னென்வயிற்
பொருத்திய நண்பெனைப் பொருட்படச் செய்தது; இங்
கருத்தியு முளதெனக் காணப் படைமேல்!
களிற்றிடை யானுங் கலந்திடில், அவைகள்
பிளிறொலி யொடு பெரும்போர் செய்யுமால்!
மேனாட் பாரத மெய்ப்போ ரிடையில்,
ஆனைப் படைக்கோ ரதிபதி யான
பகதத் தனைப்போற் படைத்துள வலியெலா
மகிதலத் துள்ளார் மதித்திடக் காட்டி,
மன்னவ னுரைத்த வாய்மொழி தவறு
தின்னே காத்தற் கிருந்தன னெண்ணியே.

(ஓர் போர்வீரன் பிரவேசித்து)

வீரன். பார்த்திப! நமது பாசறை வாயிலில்
வார்த்தை கொண்டு வந்தன னொருவன்.

வீரசே. தருக! (அரியநாதன் உள்ளே பிரவேசிக்க)

அரிய. தந்திரந் தழைத்த காவல!
அருகு வந்தது—“ இங் கவிர்மதிக் குலத்தான்
அரசு தந்தவ னடி வணங் குதியோ?
விரைசெய் தாரணி வெற்றிவே ளுகமன்
கணைவழி யாவி கலங்க நிற்றியோ?
பணைவளஞ் சூழப் படைத்தநின் னாட்டைக்
காத்திட நினைதியேல், கன்னிநா டொரீஇத்

தீத்தொழில் விட்டுன் றேயமா ளுதியோ?
இந்நா டிரண்டையு மிழந்து சாதியோ?''
என்று வறிந்து வாவென வியம்பினன்;—
வந்தன னிதுவென் வரவுக் கேது. நின்
சிந்தனை யாவுஞ் செப்புக நினைந்தே.

வீரசே. (நிந்தனை தோன்றச் சிரித்து)
பற்பல வுரைபோற் பகரக் கற்றிலன்,
விற்படு கணையால் விளம்புவ னுளே,
வைகை நாடிதை வழங்க மாட்டேன்,
உய்கை நாடி யுயிர்பிழைத் தோடுமின்!
(அரிபநாதன் வெளியே செல்ல)
கேட்டிரோ தூதன் கிளந்த மொழியெலாம்!
நாட்டினை விட்டு நயந்து போவதாம்!
அல்லது தொல்லை யரும்பதி தன்னையு
மெல்ல விழந்து விழுந்து சாவதாம்!
குபேரன் வில்வலன் குன்றி நிற்பதாம்;
விபோ! என் றவனடி வீழ்ந்து பணிவதாம்!—

குபேர. பக்க தேவர் பகர்ந்த சூழ்ச்சியோ?
கொக்கின் றலையிற் கொதிப்ப வெண்ணெயை
வைத்துப் பிடிக்கும் வார்த்தை போலாம்!
கைத்த மொழியெலாங் கருதலென் பயனே?
நாளைப் பொழுதே நமக்கு வெய்யபோர்!
காளைய ரியாருங் காமின்! காவல;
இன்றிர வினிதா விருந்து துயில்க!
குன்றினின் றிரவி குதித்தெழு காலை,
வென்றி மடந்தை விழைந்து
நின்றிட, வீர நிலத்திட வெழுவாய்!

களம்—1. முற்றும்.

---

## களம்—2.

இடம்.—நாகமன் சேமப்படைவீடு. காலம்.—நண்பகல்.
(ஓர் ஒற்றனும் நான்கு காலாட்களும் நின்று உரையாட)
நேரிசை யாசிரியப்பா

ஒற்ற. காலாள்! இன்று காலையி னடந்து

கோலிய போரிற் கொற்றங் கொண்டதா
விளம்பினே ; யாவும் விரித்துக் கூறுக!—
களத்தின் மாண்ட கருதலர் செயலும்,
கோலா கலனுயிர் கொண்ட வாறும்,
நாலா வகைப்படை நலிந்த விதமும்,
மேவலர்ச் செகுத்த வீரன்
ருவறு மரிய நாதன் றகவுமே!

1-ம் கா. சண்டையென்ருல் சண்டையா ! அரியநாதர் சண்டையல்லவா சண்டை ! காலாட்கள் இருபதுவரிசை. ஐந்நூறு பேர் வாட் பிடித்தவர்கள். ஐந்நூறு பேர் விற் பிடித்தவர்கள். குதிரை வீரர்கள் நாலாயிரம். அங்கங்கே கொடித்தலை வீரர்கள் நின்ருர்கள். ஆனைகுண்டு சேப்பண்ணு, வெங்கிடகிரி வரதராயர், ஜம்புராயர், சித்தூர் விக்கிரமராயர், துப்பாக்கி கிருஷ்ணப்ப நாயுடுகாரு ;

2-ம் கா. அடடே, இதெல்லா மென்னடா ? இவர்கேட்டதற்குப் பதிலா ?

1-ம் கா. ஒரே போடு பார்த்துக்கொள் ! சாக்கிரதை !

2-ம் கா. மீசை துடிக்கிறது, வீரப்பனுக்கு மீசை துடிக்கிறது !

1-ம் கா. உனக்குக்காலம் கிட்டிவிட்டது ; சொல்லுகிறேன், கேட்கமாட்டேன் என்கிருய் ! (வாளையுருவிக்கொண்டு) இந்தா ! ஒரே குத்து !

ஒற்ற. அடே ! சண்டைபோடாமற் சொல்லுங்கள்.

1-ம் கா. சண்டையா ? ஒரே பிண்டமாய்ப் பிடித்துக் காற்றிலே ஊதிப்போடுவேன் ! நேற்று வந்த பயல் !

2-ம் கா. (தனியேநின்று) இவர்காற்றிலே ஊதுவார் !

ஒற்ற. அடே ! மறுபடியும் சண்டை வேண்டாம். நடந்த வரலாற்றைச் சொல்லுங்கள்.

1-ம் கா. ஐயா, முடியாது ! இந்தப்பயல் ! புத்தியில்லாத முண்டம் ! என் முதுகிலே ஒளிந்தபயல் ! பீரங்கிக் குண்டைப் பார்த்துக் கொட்டாவிவிட்டபயல் ! இந்தப் பயலுள்ள மட்டும் நான் இங்கே வரவில்லை ! (வெளியேசெல்ல)

2-ம் கா. மோசந்தான் ! பீரங்கிச் சத்தத்தைக் கேட்டுக் கிணற்றிற்குள்ளே ஒளிந்த பயலையா இவன் ! எனக்குக் கடுக்காய் கொடுக்கிருன் ; போகட்டும், போகட்டும் ! நான் சொல்கிறே

னையா வரலாறு, கேளுங்கள் ! நமக்கெல்லாம் பீரங்கிக்குண்டு விடும் வித்தையைப் போர்த்துக்கியர் சொல்லிக் கொடுத்தார்களல்லவா ? அந்த வித்தை எங்களுக்கு உதவியாயிற்று. படையிரண்டும் கைகலந்தன. கண்ணெடுத்துப்பார்க்க முடியவில்லை. கூப்பிடுதொலைக் கப்பாலே, ஆனை நடுவில் நுழைந்தாலுந் தெரியாது ; புல்லு வளர்ந்து கிடந்தது. அங்கே படுத்துப் பதுங்கிக் கிடந்தார்கள். சண்டை உண்டாயிற்று. பார்க்கிறவர்கள் கண்கள் பஞ்சடைந்தன. ஆகாசம் மூடப்பட்டது. வீரர்களும் வீரர்களுந் தாக்கினார்கள்,—வாளொடு வாள், வில்லொடுவில், அம்போடம்பு, காலொடுகால்,—என்ன சண்டை ? சொல்லியா சாத்தியம் ? கொஞ்சநேரம் ஒன்றுந் தெரியவில்லை. விழித்துப் பார்க்கிறேன். தூளிதூளிபாய்ப் புறப்படுகிறது. ஆகாசம் செவந்து போயிற்று. ஒரு பெரிய ஏரியிலே, அலை ஒன்றோடொன்று மோதுகிறதுபோல, முந்துகிறது, பிந்துகிறது, நடுங்குகிறது, துவசம் விழுகிறது, துவசம் கிளம்புகிறது ; எக்காளம் ஒலிக்கிறது, எக்காளம் சாகிறது, ஓ ஓ ஓ ஓ ஓ என்று இரைகிறது, ஆ அ அ அ அ என்று அழுகிறது ; கொஞ்சநேரம் பார்த்தேன், கோலாகலன் சேனை பின்னிட்டது. புல்லுப்புதர்களிலிருந்து குண்டு கிளம்பி விட்டது. ஒன்று, இரண்டு, ஆயிரம், பதினாயிரம், கோடி கணக்கில்லை ! ஓடுகிறார்கள், விழுகிறார்கள், கிளம்புகிறார்கள், பதுங்குகிறார்கள், தியங்குகிறார்கள் ; என்ன பண்ணி என்ன ; உதைபடுகிறார்கள் ! ஓடுகிறவர்கள் மேலே குதிரை ஏறுகிறது, குண்டு பாய்கிறது, இரத்தம் ஊத்துகிறது !

**3-ம் கா.** நம்முடைய பக்கத்திலே கேட்பானேன் ? தப்படிக்கிறது, கொம்பூதுகிறது, கொடிபிடிக்கிறது ; ஒரு பக்கம் ஜம்புராயர் நகார் பிளக்கிறார். ஆனைகுண்டு சேப்பண்ணு பம், பம், பம், பம், பம்மென்று சங்கூதுகிறார் !

**4-ம் கா.** போடா ! சும்மா, சும்மா அளக்காதே ! நம்முடைய பக்கத்திலே எத்தனைபேர்களிறந்தார்கள் ? எத்தனை பேர்கள் காயப்பட்டார்கள் ? அதை யெல்லாம் எடுத்துச்சொல்லுகிறாயா ? குப்பல் குப்பலாகக் கைபோனமுண்டம், கால்போன முண்டம்,-ஆ! ஆ! மெய்கூசுகின்றது! காக்கை, கழுகு, பருந்து வட்டமிடுகின்றன ! "தண்ணி, தண்ணி", என்கிறான். தண்ணி கொண்டுவர ஒருவன் இரும்புத் தலைப்பாகை எடுத்துக்

கொண்டு ஓடினன். பக்கத்தில் ஓர் கால்வாய். அதில் தண்ணி எடுக்கக் குனிந்தான். இரத்தம் கட்டி கட்டியா விழுகிறது! தள்ளித் தள்ளிப்பார்த்தான்; எடுக்க, எடுக்க இரத்தம்! ஐயோ! பாவம்! எங்கே போவான் தண்ணிக்கு? குமுதன் இரத்தத்தையே வாரிக்குடித்தான்!

ஒற்ற. நல்லது! எத்தனைபேர் சுமார் இறந்துபோயிருப்பார்கள்? எத்தனைபேர் காயம்பட்டிருப்பார்கள்?

2-ம் கா. யாருக்குத் தெரியும்? சுமார் ஐந்நூறு, அறுநூறு பேர் செத்துப்போயிருக்கலாம். எழுநூறு, எண்ணூறுபேருக்குக் குறைந்தா காயப்பட்டிருப்பார்கள்?

3-ம் கா. அவர்கள் சேதியென்ன?

2-ம் கா. என்ன! ஓடிப்போனவர்கள் இருநூறுபேர் இருக்கலாம் மற்றவர்கள் எல்லாம் போனவர்தாம்!

3-ம் கா. இதெல்லாங் கிடக்கட்டும், கேளுங்கள்! அரியநாதர் சண்டையே சண்டை! நல்ல அரபிக் குதிரை, அந்தச் செகப்புப்புள்ளி வெள்ளைக்குதிரை எசமானன் சொற்படியே கேட்கும். அரியநாதர் கையில் ஒரே பட்டாக்கத்தி. கோலாகலன்மேலே பாய்ந்தார். குதிரையும் குதிரையுந் தாக்கின. கோலாகலன் வாளாலே நேரே தலையைக்கட்டி ஒரு போடு போட்டான். என்ன? நாதரா பின்வாங்குவார்? அப்படியே ஒருவளைச்சல் வளைந்தார்; கத்தியை நீட்டினார், கோலாகலன் வாள் தூளாப்போயிற்று! இவர் முனைந்து ஒருவெட்டு வெட்டினார் அவ்வளவுதான்! கோலாகலன் கக்கரிக்காய்தான்! சங்கத்தை ஊதினார், முண்டத்தை உருட்டினார், தலையைக் கொண்டே போய்விட்டார்! அப்புறம் என்ன? சண்டையேது? சேனை ஏது? எல்லாம் போய்விட்டது.

4-ம் கா. ஐயா, இந்த அரியநாதர் யார்? எந்த ஊரிற் பிறந்தார்? வளர்ந்தார்? எமனுக வல்லவா வந்திருக்கிறார்! இவர்கதையைக் கொஞ்சஞ் சொல்லுங்கள்.

சதாசி. (ஒட்டுக்கேட்டு உள்ளேபிரவேசித்து)
அடே, அரியநாதன் வரலாறு தெரியாதவருண்டோ? கேளுங்கள் சொல்லுகிறேன்.

நேரிசையாசிரியப்பா

தொண்டைநாடென்னுந் தோகை முகமெனப்

பண்டைநா ளமைந்த பதியெனுங் காஞ்சி
தன்னிலே, பரந்து தழைத்த மெய்ப்பூ
டென்னுங் கிராமத் திசைபெற வந்தோன்!
வேளாண் குடிக்கோர் விளக்கே போல்வான்!
தாளாண் மைக்கோர் தலைவன்! நான்கொடு
மு'ப்பது சென்ற முன்னாண் டுணர்ந்தோன்!
பைப்பணி தலைமேற் படிந்துநின் றுடைச்
சிறுவனங் கொருபாற் றிகழ்தரக் கண்டு
மறுவறு மறையவர் மந்திரி யாவனென்
றுரைத்தனர்! கணித வுண்மைநூல் கடந்தோன்
திரைக்கதி போலத் திகழுங் கொய்யுளைப்
பரிமா வோட்டலிற் பாண்டவர் நகுலன்;
செருவலன்! போர்த்துகற் சேனா பதியாம்
ஒப்பிலாக் கிரிஸ்டோ வோதிவி கூரிதோ
தப்பிலாக் குண்டு தைத்திடுங் குழலாம்
பீரங் கிப்படைப் பிரயோ கஞ்சொல
நேர்மையிற் கற்ற நிபுணன்! வில்வாட்
பயிற்சியில் வல்லவன்! பல்படை விநோதன்!
மயில்வளைத் திடுதலி லேற்ற முடையோன்!
இன்னவன் வயநா யிரத்தைந் நூற்றுப்
பன்னி ரண்டெனப் பகர்தரு மாண்டில்
இருபத் தாறென் றியம்புவர்; நாகமன்
செருவித் தாரச் சேனைத் தலைவனாய்,
அவனுக் குதவியா யமைந்த வீர
னிவனே யென்ன வேத்திட நின்றோன்!
அற்றைநாட் டொடக்க மான ரேய்ச்சூர்
முற்றுகை, ஐந்து மூன்று நூறுடன்
கொண்ட பதின்மூன் றாண்டில், கோல
கொண்டா சுல்தான் கூலி குட்புஷா
சொல்லரும் போரிற் சூழ்ந்தவன்! பீடர்
சுல்தா னல்லா வுதீனி மாதுஷா
சண்டைவென் றவன்! சிவ சமுத்திரத் தோடு
பண்டுசீ ரங்க பட்டண முற்றுகை
கிடத்தினன்! உதய கிரிப்போர் வல்லான்!
திடமுள கிருஷ்ண தேவ ராயனும்

மன்னவ னொடு, முதன் மந்திரி சோதரர்
தன்னுடைப் புத்திரர் தகுநா டெந்தில
கோப மந்திரி, குடையின வரசர்,
மாபுகழ் கொண்டதா மாஜி பண்டிதர்,
தம்மிறைக் குறுதி தனைப்புகல் சாளுவ
திம்ம னாதியர் சேரத், திருவுளந்
தன்னின் மதிக்கத் தக்க புகழோன்!
மன்ன னிராஜ மகேந்திரஞ் சென்றவண்,
உரிய ராயரோ டுடன்ப டிக்கையைப்
புரியத் தூது போனவன்! ரேய்ச்சூர்
எழுதர முற்றுகை யிவனால் வெற்றியே
பழுதற நாமும் படைத்தது! இஸ்மே
லலிக்கிவன் பெயரை யறைந்திடின் மெய்ம்மயிர்
சிலிர்த்துளந் தளர்ந்து சிங்கசொற் பானமாம்!
அவன்றளகர்த்த னஞ்சலா பத்கா
னிவற்குச் சலாஞ்செய் திருக்கிறன்! இவனையே
புண்ணிய மகம்மது போற்கொண் டாடுவர்!
கண்ணிய் மெல்லாங் கருதி உம் மாதுஷா
அமீர்பீ ரீதோ டனைவரு மிந்நாள்
எமையாள் பவனென் றிருப்பர் உலகோர்!
என்னே பலபட வியம்புவ துளது?
நன்ன டத்தையே நயந்தவன்! உள்ளங்
கரைந்துநின் றெளியரைக் காப்பதி னுலகம்
புரந்தருள் செய்யும் புகழ்த்திரு மாலே!
கண்டக ராவி கவர்வதிற் கையிலையிற்
கொண்ட சிவமெனக் கூறத் தகுமால்!
தருமத் தாபனஞ் செய்வதிற் சரோருகப்
பிரமனென் றிவனைப் பேசவும் படுமே!
ஆதலி னிவன்செய லனைத்து மோர்ந்து
மேதினி யுள்ளார் விரும்பிப் பிற்றைநாள்
இவற்கிங் காலய மெழில்பெறக் குயிற்றி,
யுவப்புட னிவன்புக ழோதியு நிற்பரால்!
அன்றியும், புகழ்சா லரிய நாதன்
வென்றியுங் குணமும் விநயமு நாளும்
பார்ப்பத் தனது பக்கத் திரானேல்,

போர்ப்புலி நாகமன் பொழுதுபோ காதுகாண்!
இத்தகை யரிய நாதனுக் கிந்த
கத்துவா ரிதிபோற் கலந்து நின்ற
காலாட் படையைக் கலக்கிக் களத்திற்
கோலா கலனுயிர் கொண்டவன் சேனையை
யாசறக் கொன்றன னென்ன வனைவரும்
பேசிய தவற்குப் பெருமை யாகுமோ?
நல்லது! நிற்க, நாடுமின்! ஆங்கண்
தொல்லை வாயுவுந் தோற்கு மாறு
நாடி யொருவ னம்பால்
ஓடி வருகிறான்; ஒதுங்குமின் சிறிதே!

(ஓர் ஒற்றன் பிரவேசித்துச் சதாசிவராயனிடத்தில் ஓர் கடிதத்தைக் கொடுக்க)

(கடிதத்தைப்படித்து)

வீரர்களே கேட்பீராக! படைத்தலைவர் கடிதத்தைப்படிக்கின்றேன்.

"...............................................................

போரில் வெற்றிகிடைத்தது. கோலாகலனுயிர் கவரப்பட்டது. இதுநிற்க, நமது வீரரில் இறந்தவர் தொகை ஐந்நூறு. இவர் நிலையைக் காண வென்மனமிரங்குகின்றது இறந்தவரை யடக்கஞ் செய்வதும், காயம்பட்டவர்களை டோலிகளி லேற்றிப் பாசறைக் கனுப்புவதுந் தொழிலாகக் கொண்டு நின்றனன். மற்றோர் சார், நாகமனுக்கும் வீரசேகரனுக்கும் நடக்கும் போரிலிருதிறத்தாரும் ஒத்திருத்தலை யொற்றர் கூறக் கேட்கின்றனன். விரைவி லவனுக்குதவிபுரிய விரும்பினன் ஆதலின் பாசறையை நோக்கிப் போந்த பாடுற்ற நமது வீரர்கட்குத் தகுந்த விடுதிகளமைத்து மருத்துவன்பால் விடுத்து, எண்ணூறு வீரர்களையணிவகுத்த படையுடன் நம்பால் விரைந்து வருக—

இங்ஙனம்,

அரியநாதன்."

நேரிசையாசிரியப்பா.

வீரர்காள்! சங்கு வீணே நிற்ப
நேரமோ வில்லை! நீவிர்! கேண்மின்!
நொடியினுங் கோல நோக்குமா றுறுவன்;

கடிதினேகிக் கைப்படை கலப்ப
நாமு மரிய நாதனைச்
சேம மாகச் சேருதும் விரைந்தே!

களம்—2. முற்றும்.

---

## களம்—3

இடம்—சோழமாளிகைப் புறத்தோர் வெற்றிடம். காலம்—எற்பாடு.

(மூன்றுயாழ்ப்பாண வீரர்களும், ஒரு சிங்கள வீரனும் உரையாடிநிற்க)

1-ம் யாழ். என்ன! விட்டிற்கிரண்டாக முன்னுவாருளரோ? யாமுஞ் சோழன் றனையில் வீரரெனச் சமைந்தேம். இங்ஙனே நமது தானைகளை ஆரியநாதன் மாட்டனுகினர் அன்னவர் பிழைத்தார். யாமும் பெறாட்டைச் செலுத்தி யிப்பாண்டி நாட்டிற் சேவகம் புரிந்தாம். இவ்வணம் இந்நண்டத்தலைவா தவறிழைப்பா ரெனக்கருதிலேம். கேண்மின்! வீரர்காள்! நம்படைத்தலைவா ஆரியநாதனை யனுகவும், வீரசேகரனுடன் கைகலப்ப நமதுளம் எழுந்ததோ? போர்புரிந்தாலெப்ப நடுக்கமேயன்றி வேறில்லை

2-ம் யாழ். வற்சடம் ஆண்டு பன்னிரண்டு கழிந்த பின்னர், சாமையும், சோளமும் செழித்துற, வைகை நன்னதி நீர்மல்க, சாமனை கோயிலருச்சனை கொள்ள, சதுக்கங்கள் பல்பட விழைத்த பாண்டி தலைவன் நகரந் துறந்தோடத் தோள்வலி குன்றிய யாம் புரிவதெனனே! என்னே! புலனிழந்து நிற்கின்றனம்

3-ம் யாழ். சொக்கலிங்கன்முன் ஆரியநாதன் பாற்புக்கு அழியாகவ்வைக்கிட்டுறிரினான். அது நிற்க, மத்தளத்தை யிருபுறமும் மறைதல் போல இச்சோழப் பெருமானுக்கு அப்பக்கம் நாகமனும், இப்பக்கம் ஆரியநாதனுந் தாக்கும் போரில், அந்தோ! பாவம்! இவன் என் செய்வன்? தானை புறங்காட்டி அப்புறம் இப்புறம் இரிந்தோட, யாமும் பின்னிட்டோடி வந்தனம்.

சிங்க. அங்கு! அதோ! அம்மா!

(பூந்தத்தையுள்ளே பிரவேசித்து)

பூந். எங்ஙனம் வந்தீர்? போர்க்களம் விட்டீர்! நுங்கடமையங்கன்றோ? போர்புரிந்தாயிற்றோ? ஏன் வந்தீர்?

1-ம் யாழ். போர்முடிந்ததாக வந்தேம்.

பூந். என்னே! நம்மிறைக்கு வெற்றியோ? நும்வீரங்காட்டினிரோ?

2-ம் யாழ். எம்படைத்தலைவன் பகைப்படைய நேரலரோடு கலப்ப, யாமும் அன்னமிட்டாங்கு நின்று பார்த்தல் அழகல்லவெனத் தானையை விட்டுப் பிரிந்திவண் போந்தனம். இனியாமவண் சேறலேம். யாவரும் இந்நாட்டை விட்டு நம்முடைய நாடு சேருது மெனக் கருதினம்.

பூந். என்னை!

1-ம் யாழ். பூந்தமைக்குப் போர்வண்ணங் கூறாய்.

2-ம் யாழ். நங்காய்! போர்வண்ணங் கூறுவல், கேளாய்!

கதிரவன் உச்சஞ் சென்று சேர்ந்தான். யாம் சொக்கலிங்கன் படைக் கூற்றினின்று வெம்போர் விளைத்தனம். நாகமன் சேனையை மறுபால் வீரர்கட்குக் கூற்றாகின்றனம். இருபடைகடலும் ஒவ்வி, வெற்றியிங்ஙன் தோல்வியிங்ஙன் என்று கண்டறிதல் அரிதாக்கிடப்ப, ஏற்பாடுற்றது. அங்ஙனே ஒரு பெரும்படை எம்பின்றைல் விளங்குற்றது. அப்படை அரியநாதன் படையாம். அன்னவர் காற்றினுங் கடிய போந்தார் எம்மேல் வெகுண்டெறிந்தார். யாம் நாகமன் படையை விட்டவ்விசை யொருவரா திரிந்து சிலவரிரிந்தோட, சிலவர் மரிந்து வீழ, சிலவர் கலங்கிச் சோரவுறத் துப் போர் புரிந்தனம். சிலபொழுது எங்ஙனே போர்புரிந்தாம? இங்ஙனே? அங்ஙனே? விசுவநாதன் சோழன் பாலோ? அரியநாதன் பாலோ? யாமறிகிலேம்! சொக்கலிங்கன் என் செய்தான? மற்றொருகால் நம்படை போர் சலித்தது போல் வளைவுசைந்து நின்றது. பின்னர், அந்தோ! அரியநாதனையே சேர்ந்தது அங்ஙனம் விளைந்த போர், அம்ம! பெருங்கொடுமை! சோழன் என்செய்வான்? பாவம்! கும்பரன் யானைப்படைதான் சற்று வலிந்து போருக்கிரங்கொண்டு பகைவர் குண்டுக் காற்றுவதாய் அங்குமிங்கும் பிளிறொலிகாட்டி வீரரையுருட்டியும், பரிமாவைத் துளைக்கரத்தான் மாட்டியும், துவசம் வீட்டியும், தேரைச்சாய்த்தும்,

குபேரன் சொற்படி நின்றுடிப்பலருமெச்சப் போர் நடாத்தியது.

காலைப் பொழுதெல்லாம் வெற்றியே கண்டார்க்கு மாலைப் பொழுதெல்லாம் வெற்றியற்றதே! இன்னம் சொல்வதென்னை? அரிவை! இவ்வுரத்திற்பட்ட காய மெல்லாம் புகழை உகுத்தன! இன்னதோர் படைத்தலைவன் எம் படைத்தலைவனாக, யாமுஞ் சேவகஞ் செய்தனமே! எமது வாளுள் வீணாவல் லவோ? உண்மையுரைக்கப் புகுந்திடில், வீரசேகரனுக்குக் கூற்றுவன் கூற்றுவனல்லன். இந்நின்ற சொக்கலிங்கன் கூற்றுவன். அந்நின்ற வரியநாதன் கூற்றுவன். மற்றும் யாமல்லாத வீரரெல்லோருங் கூற்றுவர். அன்னவன்சோற் றையுண்டு நேற்றை யன்புடனிருப்போமென்று ரெல்லோருங் கூற்றுவர். பிற்றை நாள் வஞ்சங் கொடு இன்னே கொடுமை யிழைத்தாரெல்லோரும் பொல்லாத கூற்றுவரம்மே! சோழன் இருபுறத்துச் சேனைகளோடு போர் புரிதலாற்றாது தடுமாறிப் பெருங்காலடித்து மோதப் பெரும் பௌவத்தே கூம்பொடிந்த நாவாய் போல வசைந்து சற்றேதூங்கினன். இவன் துவச மற்று வீழ்தல் திண்ணமெனத் தோற்றிற்று. பிறகு சேனை புறங்காட்டத் தானைத்தலைவர் வீழ, யானைப் படையல்லோலப் பட்டோடக், கொய்யுளைப்பரிமா பொட்டென்று வீழ்ந்திறப் பக், காலாள் கவந்தமாய் நின்றாட, வீரசேகரன் தலையுமுடலி னின்று பிரிக்கப்பட்டு நாகமன் கொண்டாடப் போயதே! அரியநாதனும் தான்கொண்ட படையைப், பல்லியங் கடல் போல வாரவாரிப்ப, வீரர்துள்ளொலி விண்ணகஞ் சார, வெற்றித்திரு கொடிமீதாடச், செலுத்திச் சென்று நாகமனு டன் கலந்தனன். நாகமனும் அரியநாதனைத்தனது அகலந் தழுவினன் யாமுந் தோல்வி யெனும்பேதையை மணந்து பழிப் புக்கலாய் வந்தனம். இவ்வண்ணமே போர் வண்ணமும் எம்வண் ணமும் காணாய்! நங்காய்!

பூந்த. அந்தோ! சோழன் வினை இஃதாயிற்றோ?

நீர்வளம் பொருந்தி நெடிது நாள் வளர்ந்த சோழமண்டல மும், செந்தமிழ்த்தாய்க்குச் சிற்றிலாகவும், தடாதகைப்பி ராட்டியின் தொல்குலமன்னர் ஆணையிற்படிந்ததாயும், நம்ம வர்க்குப் புகலிடமாயதுமான கன்னிநாடும், இன்னே விஜய நகரத்தாரடிமைப் பட்டதோ! ஐயகோ! ஈசன் செயலிஃ

தாய்முடிந்ததோ! யாமுங்கன்னி நாடோரீஇ ஈழம் விழைத லாயிற்றே!

சிங்க. போதும்! போதும்! வருத்தமென்ன?

பூந்த. மெய்யே! வருந்தல் வீணே! இவ்வெறுவெளியில் நிற்பார்க்குத் தீங்குவிளையும். யாமும் இல்லை நண்ணுதும், வம்மின்! அகம்புக்கு, ஈழஞ் செல்வா னுன்னுவம்! மாலை நணுகிற்று. வெயிலவன் குடகடற்புக்கு மறைந்தனன். வம் மின்! வம்மின்!

களம்—3. முற்றும்.

## களம்—4.

இடம்—நாசமன் பாசறை. காலம்—மாலை.

(நாகமன், சேவப்ப நாயக்கன், சந்திரசேகர பாண்டியன், அரியநாதன், சோக்கலிங்கன், சதாசிவராய், கிருஷ்ணராய், வரத ராய், ஜம்புராய், எடத்தராய், முதலானவர்கள் தம்தம் முறையே வீற்றிருப்ப.)

நேரிசை யாசிரியப்பா.

நாகம. தோண்மையே துணையாத் துன்னலர்த் துடைத்தவ
ராண்மையே பூண்ட வரிய நாத!
சென்னியும் யானுஞ் சேரக் களத்திற்
றுன்னிய வெம்போர் தொடங்கிய காலை,
வெற்றியுந் தோல்வியும் விளம்ப லரிதாய்க்
கற்றவெம் போர்வலி காட்டி நின்றனம்,
ஆயதோ ரமையத் தரும்படை யோடுநீ
காய்சினக் கோலா கலனுடன் பொருத
வண்ணமு மன்னவன் வான்படை யிரிந்தத
னெண்ணமுஞ் செயலு மிழந்து நிற்பக்
கண்டவன் றலையைக் கடிந்த வண்ணமும்
மண்டலமாக வளவனை வளைந்து
கொண்ட வாறுங் கூறுக.

அரிய. வேலோய்!
தண்டுடன் சென்று தரியலர் படையைச்
சாடினன், நமது தானை வீரருங்

கூடிக் கலந்து குண்டுக ளோச்சிப்
புரிந்த போரெழு புகைப்படாம் போர்ப்பக்
கரிந்தவர் சாம்பிக் கலங்குங் காலையில்,
நம்முடை யணிக நாட்டிய வீர
மெம்ம னோரா லியம்பற் பாலதோ ?
இடையிற் செலுத்திய விபுளி யாலவர்
படைக்கட லலைந்து பட்ட தன்மையைச்
சொல்லவும் பெறுமோ ? சோரியு நிணமு
மெல்லைக டோறு மிழிந்து படிந்திட,
வெருவியே சிலவர் விரைந்தோ டினர் பலர்
செருக்களத் தேயுடல் சிந்தினா ரர்கள்.
அன்னதோர் காலை யடியனும் புகுந்து
துன்னி வெம்போர் தொடங்கிப் பகைவன்
றலையைத் தளவித் தானை புறந்தா
மலைந்துபுண் பட்ட மறவரை நிறுத்திச்
சேமப் படையிற் சிலவரைச் சேர்த்துப்
பாமக் கடல்போற் பரந்து நின்ற
சோழன் றானையைச் சூழ்ந்தனன் சூழ்ச்சியால்.—
ஈழத் தானைக் கிறைவன் இவன்காண் !
வளவன் சேகரன் வஞ்சனை யறிந்தோன் !
களத்தி லெனைப்போற் கலந்தனன், வழுதி
பிரிவாற் றுறு பேதுறு மனத்தன் !
உரிய செய்கையன் ! உள்ளந் தூயோன்
இவனைப் போற்றுத விரும்புக ராமே !

(சோக்கலிங்கன் எழுந்துபணிய)

நாகம. எவனைப் போற்றுத விரும்புக ராமோ
அவனைப் போற்றுத லடியன் கடமை.
உவந்தன னமர்க ! வுயர்படைத் தலைவ !—
தவந்தனம் யாவுந் தன்மன மடங்கித்
துன்ப மாகித் தொடர்ந்த வேனு
இன்ப மாகக்கொண் டிருத்த லாகும் !—
மன்னவன் வழுதி வளநா டெழுந்து
துன்னுங் காலை, தொடர்ந்து சென்றவற்
குறுதுணை யாகிமற் றுன்பதம் பெறுக.

சந்திர. குறுநிலம் புரக்குங் கொற்றவர் மகுட
கோடியாற் றேய்வுறுங் குறைகழல் வீர!
நீடிய புகழையே நிருபற களிக்க
நின்ற தன்மையன்! நேசமிக குடையோன்!
குன்றாப் போர்வலி கொண்டவன்! பாண்டியான்
செவ்விதிற் செங்கோல் செலுத்து நாளையில்,
தெவ்வ ரரியச சேவகஞ் செய்தனன்!
இணைய னறிமற றேனைய ரியாருமென்
மனக்கினி யாரிலே, மதிக்கிணை யதுவே

நாகம. காலை தொடங்கியான கண்டவெம் போரில்
தோலா தினறுமோ தொடுத்தனன் சோழன்;
பரிதி புச்சம் படுபகல, அன்னவன்
விரிகதி ரோப்ப வெங்கணை செலுத்திப
பொருத போரினை புரிந்தது, யானும்
விருது காட்டி விளங்கிய காலை
மற்பா டேற்றிட வெதிரியா டேறினை;
மற்பா டேற்றதோள் வலிதுடிக திட்டதால்;
இதற்குக் காரிய மெண்ணி யிருந்தனன்,
அதற்குன் வரவே யாயதின் றறிந்தனனே!

(ஒற்றன் பிரவேசித்து)

ஒற்ற. தேய்மதி போலத் தெளிவிலா முகத்தாள்,
ஆய்மல ருகுத்த வருங்கொடி யன்னாள்,
தாவிய புகையாற் றுவா நின்றதோ
ரோவியப் பாவையென் றுரைக்கத் தக்காள்,
விழிவழிப் பெய்து விலருநீர் வெள்ள
மொழுகமுன் றுணைகொண் டொற்றி நின்றனள்,
விரிந்திடு குழலள், வெய்துயிர்ப் புடையாள்,
பரிந்த வுரையுடன் படுகளம் நின்றனள்!
மெல்லியள்! பாதம் வெதும்பிடப் பரலிடைப்
புல்லிட நின்றது! புவன மேங்குறும்!

நாகம. சோக முற்றதாச் சொன்ன
தோகையைக் காணத் தோழ ரெழுகவே.

களம்—4. முற்றும்.

## களம்—5.

### இடம்—களத்தின் ஓர்சார். காலம்—மாலை.

(கனகவல்லி தலைசிதறுண்டுகிடந்த கணவனுடலைநோக்கி)

### விருத்தம்.

காவலனே யென்னருமைக் காதலனே கார்க்கடல்சூழ்
பூவலய மாண்ட புரந்தரனே பொன்றினையோ
பாவியிழைத் திடுவிரதப் பலனிதுவாய் விளைந்ததுவோ
ஆவிதியே யென்றலையி லன்றமைத்த வாறிதுவோ (1)

தாட்டீக மாகத் தரியலர்முன் னின்ற செயல்
கேட்டே னிருந்தேன் கேடிலையென் றேபாண்டி
நாட்டாசை யாலே நடந்தவெனை தாருயிரைக்
காட்டீரோ வென்னுடைக் காதலனைக் காட்டீரோ (2)

மன்னு மனக்கினிய மணவாளா மனுகுலனே
யென்னுவி யேங்கி யிடர்க்கடலிற் பட்டுழலப்
பொன்னுடு செங்கோல் புரிவானீ போயினையோ
ஒன்னார் படைக்குனையா னுன்னைக் கொடுத்தேனே (3)

(வேறு)

வடவைபோ லிரண்டு பாலும் வந்துனை வளைந்த சேனைக்
கடலிடை நின்ற வென்றி காண்கிலேன் களத்தில் வீர
ரிடையிலுன் னுடலைக்காண வெத்தவஞ் செய்தேனந்தோ
விடவரா நுங்கு மந்த வெண்மதி யொத்தே னையா (4)

(வேறு)

பையரவின் பருமுடியும் பருப்பதமுங் கறையடியும் பரிக்கு மிந்த
வையமதிக் குடைநிழலில் வளரவற நிற்பதிறை பன்னருய்ப்பத்
தையலர்தங் கற்புயரத் தனியரசு புரிந்தபெருந் தகையே செல்வம் [னே
பொய்யெனவே துறந்தனையோ மறந்தெனையும் புண்ணிய புலம்ப வைத்தே. (5)

(நாகமன், அரியநாதன், செவப்பநாயக்கன், சொக்கலிங்கன் முதலானவர்கள் உள்ளேபிரவேசிக்க)

கொன்றையணி பரமனுறை கூடல்பெற நினைத்ததுநற்
கொள்கை யன்றென்
றென்றலவே பலவறங்க ளுரைத்தேனை யிகழ்ந்தனைபோர்க்
கொருப்பட் டாயே
அன்றுதா னுணர்ந்திலையே யாக்கைதலை வேறாக
வமைந்து நின்ற
வின்றுதா னறிந்தனையோ வென்னுரையு மின்னுரையா
விருந்த வாறே. (6)

நேரிசையாசிரியப்பா.

நாகம. தோகை யடைந்த துயரம் பெரிது!
செவப்ப. நாகம! கொடிது நங்கையி னவலம்!
அரிய. எத்துணை மனவலி யெய்திய மாந்தரு
மித்துணைத் துயருக் கிரங்குவ தியல்பே!
கனக. (இரைஞ்சிநின்று)
பேதை பாவியாப் பெண்பிறந் தேனிம்
மேதினி யாட்கோர் வெய்ய பொறையாய்ச்
சுற்றமு மிழந்தேன், சோகமு முற்றேன்,
நற்றவ னிழந்து நானல மந்தேன்,
நாடு மிழந்தேன், நாண்டுறந் திங்கு
தேடியே வந்தேன் றிக்குவே றில்லை!
யாவி போற்றவு மறியே னொருவழி
வாவிநீர் வற்றிட வாடிய மீன்போல்
ஆயதென் செயலு மாக்கமு மிழந்தேன்,
தாயக மானீர்! தமியனைக் காத்தற்
கெவரினி யுள்ளா ரியம்பற் பாலார்?
நாகம. புவனி வேந்தன் பொன்றிடக் கண்டது
விதிவச மாகும், வீணு மவலம்!
பதிபடு துயரம் படாநேல், அம்ம!
ஆரியப் படையூ ரரணே தந்தனம்;
வேரியங் கமலம் விளங்கு வேலிகள்
ஆயிரந் தந்தனம்; ஆர்க்கு நூபுரச்

சேயிழை யாரிற் சில்லரையுந் தந்தனம்;
அந்நக ருனதே யமர்ந்து வாழ்க;

கனக. இந்நலந் தந்தீ ரேழை யுய்ந்தனன்,
நாயக னுடலும் நல்குவீ ரைய!
பாய்திரை யுலகம் பழித்திடா வண்ணம்
எங்கோ னுடலை யீமஞ் சேர்த்துவன்.

நாகம. நங்காய்! தந்தனன், நயந்து கொள்க.

கனக. விடைதரக் கொண்டேன், விரும்பிய வெல்லாம்
அடையப் பெற்றே னைய! நீர் வாழி!

(ஓர் சேவகன் வீரசேகரனுடலை எடுத்துக்கொண்டு பின்வர,
கனகவல்லி வெளியேசெல்ல)

நாகம. பொன்னி நாட்டின் பொலிவே நீர்வளம்!
அன்னதற் கிணையென வமைந்தநா டுண்டோ?
ஆதலி னஃதே யவனியின் றிலகமாம்!
மாதவப் பயனான் மற்றதைப் பெற்றோம்
என்றுசெருக்கை யெய்தா திருந்து,
நன்றுப் புரத்தல் நமது கடனே!
மன்னவ னணை வரலை நோக்குதும்!
இந்நா டாளுதற் கேற்ற முடையோன்,
சீரிய சிந்தையன் செவப்ப நாயகன்,
கூரிய மதியன், கோனெனத் தகுமால்!
நாயக! வென்னுரை நயந்து கொண்டுநீ
தூயநா டோம்பத் தொடங்குக; யானும்
அரிய நாதனோ டணிமதிற் பாண்டி
பரிவுடன் சென்று, பல்லியந் துவைப்பச்,
சந்திர சேகரன் றார்முடி சூடச்,
சிந்தை யுவந்து செந்தமிழ் நாட்டைத்
தென்னவன் செங்கோல் செலுத்த,
மன்னவ னுரைப்படி வழங்கவெண் ணினனே!

களம்—5. முற்றும்.

## களம்—6.

இடம்—நகர்ப்புறத்தோர் பூஞ்சோலை. காலம்.—காலை.

(தாதியரும், செவிலியரும், தோழியராயங்களும் நெருங்கி நின்று உரையாட, நடுவே காஞ்சனையும், மூர்த்தியம்மனும், சின்னம்மனும், லெட்சுமியம்மனும், மதிவிலாசனியும், கஸ்தூரிரேங்கம்மனும், சுந்தரியம்மனும், விளையாட)

நேரிசையாசிரியப்பா.

காஞ்ச. *நறுந்தேன் பெய்தேன், நங்கை ! இவ் வள்ளம்,*
*முறுவல் கொண்ட முகத்துடன் வாங்கிப்*
*பருகியென் றோழி ! பவளவாய் திறந்தே*
*யொருமொழி யெனதுள முவப்பக் கூறுவாய்.!*

மதிவி. (காஞ்சனை நீட்டியவள்ளத்தைத் தனது கையால் விலக்கி)
*வள்ளமும் வேண்டேன் ! வார்த்தையும் வேண்டேன் !*
*உள்ளம் வெறுக்க வுரைத்ததே போதும்.*
*மலர்களைக் கொய்து மருவிய காலையில்*
*அலர்பட வுரைத்தாய், அன்னது கிடக்க ;*
*நீர்விளை யாடல் நிகழ்ந்த போதும்*
*ஒருரை பகர்ந்தாய், உள்ளங் கலங்க !*
*தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே*
*நாவினாற் சுட்ட வடுவென் றுணர்ந்திலை.*
*போடிபோ ! உந்தன் பொதுவுறு நிலைமை*
*கோடிய செய்கை கொடிது ! கொடியளாய் !*

(மதிவிலாசனி விம்மிவிம்மிக் கண்ணீர் சோரிந்து நிற்ப)

காஞ்ச. (அவளைத் தழுவிக் கண்ணீரைத்துடைத்து)
*என்னடி பிழைபட விசைத்தேன், ஏழை !.*
*துன்னிய கண்ணீர் துளிப்ப நின்றனை !—*
*நதியுறு புனலை நவிய வெற்றினை !*
*மதியிலி யானு மகிழ்விளை யாட்டில்*
*பேசிய வுரைகளைப் பிழையெனக் கொள்ளேல்.—*
*ஏசுத லெனக்கு மியற்கை யன்றுகாண்,—*
*கண்களோ சிவந்தன, கமலவாண் முகமோ*
*பெண்க ளிரங்கப் பெரிதுவா டிற்று !*
*இழைகளுங் குழைகளு மிலங்கப் பூண்டோம்.*
*விழைந்து கொய்த விரிமலர்த் தொகுதியைக்*

குழையக் கோதிய கூந்தலின் முடித்தேம்.
மழைநெடுங் கண்ணாய் ! வருக ! வனைக
ஆடையா பரணம், ஆரம் புனைக,
சேடிய ரியாருஞ் சேர்ந்து கும்மி
கொட்டுவம், எழுக ! கோதையே ! விரைந்து,
பொட்டு மணிந்து, பூண்பன பூண்டு,
வள்ளம் பெய்த மதுவினை யருந்தி,
உள்ளங் களித்துன் னூடல் தீர்ந்து,
செவ்விதிற் போதுக ! சித்தச னலத்தை
நவ்விநேர் விழியாய் ! நயந்து பாடுவம்!

மூர்த்தி. மாதருங் கலமே ! மதியிலா சனியே !
ஏதுனக் 'கரிதுகாண், ஏழை ! நீ செய்யும்
சாலமோ பெரிது ! தமனியப் பாவையின்
சீலநன் மொழியுன் சிந்தையைச் சுடுமோ ?
வைகறை யாம மணற்றட மலிந்த
செய்கரைப் பாங்கர்ச் செறிந்த பொழிலிடை
நங்கையர் சூழ்தர நாமிவ ணூற்றே
செங்கைசிவப்பச் செழுமலர் பறித்துத்
துங்கபத் திரையிற் றோய்ந்துநீ ராடிக்
கொங்குலா மலரைக் கோதையிற் சூடி
ஆடையுங் கலனு மழகுறப் பூண்டு
நீடுறப் பொலியு நித்தில மாலையும்
சாந்தமும் புனுகுந் தைவரக் குங்குமங்
காந்திட நுதலிற் களிப்புட னணிந்து
மதுவை யுண்டு மனங்களித் திட்டனம்.
இதுவெஞ் செயலா யிருப்ப, ஏழை! நீ
வாடிய முகமும் வருத்தங் காட்டிக்
கோடிய சிந்தையுங் கொண்டனை யாகி
நின்றனை ; பாவம் ! நினக்கிது செயலோ ?
இன்றுன் கூந்த லெடுத்து முடிப்பேன் !
வாடி ! யென் கண்ணே ! வாடா மலர்களைச்
சூட்டுவன் ! கலனுந் தோடும் பூட்டுவன் !
திலகஞ் சேர்த்துவன் ! தேனையு மூட்டுவன் !
இலகுற வெழுவாய், ஏந்திழை யாரொடும்
இனிதி னாடி யின்புற் றிருப்போம்.

மதிவி. வனிதை காஞ்சனை வார்த்தையை மறுத்தேன்.
வள்ளங் கொடுத்தால் வணங்கி வாங்குவன்.
உள்ள மகிழ்ந்தேன். ஒண்டொடி ! வந்தேன்.

(மூர்த்தியம்மனும் மதிவிலாசனியும் வெளியே செல்ல)

சின்ன. காஞ்சனை யம்ம ! கருதிய வாடலில்
யாஞ்சில பாட லியாதோ விசைப்பது ?

காஞ்ச. மன்மதன் கோட்டம் வளரு மாதனம்
நன்மதிக் குடைக்கீழ் ஞாலம் புரப்போன்
சீரினைப் பாடிச் சிற்றிடை துவள
நேரிழை யாருட னேயமாய்ப் பாடுதும்
பாங்கியர் ! வருக பாடவு மாடவும்
பாங்குஜை யார்களும் பரிந்து வருக !
வாழி ! யென் மூர்த்தியு மதிவிலா சனியும
தோழிய ரோடுந் துலங்க வருவர்
வம்மின் ! வம்மின் ! மாதரீர்
கும்மி வசந்தனைக் குறித்துக் கொட்டவே.

[மூர்த்தியம்மனும், கோலங்கொண்ட மதிவிலாசனியும், உள்ளே பிரவேசிக்க, தாதியர், சேவிலியர் மருங்குசூழ்ந்து நிற்பத் தோழியராயம் கோட்டம் வளைந்து கும்மியடித்தல்]

(மதிவிலாசனி முறை வைக்க, மற்றவர் எல்லோருஞ் சேர்ந்து சொல்ல.)

சித்தசன் கும்மி.

மதிவி. கையிற் றரித்த சிலைகரும் பாமவ
னெய்யுங் கணையு நறும்பூ வாம்
மைய விழைப்பதும் பொய்யுருக் கொண்டிந்த
வையத்தை வென்றனன் மங்கையரே (1)

அந்தச் சிலைக்குயர் நாஅரி வண்டுக
ளானவை பச்சைப் பசுங்கிளி தான்
கந்துக மாகவுங் கொண்டனன் காணந்தக்
கருப்பு வில்லியும் வல்லியரே. (2)

ஆர்கலி யேமாரற் கறைந் தொலித்திடும்
பேரிகை யாமல யக்கா லுந்
தேரெனச் செப்பியே செங்கைகள் கொட்டிநீர்
சேரக் கும்மி யடியுங்கடி. (3)

அம்புலி யைக்குடை யாகவே கொண்டவ
னங்கனை யார்படை யன்கங்கு லை
யும்ப லெனக்கொண் டுயர்ந்தவ னென்றிடை
யொசிந்து கும்மி யடியுங்கடி. (4)

தேனைப் பழித்தசொன் மானை மருட்டிய
சேல்விழி யீர்கோகி லங்கா ளம்
மீனத் துவசமுங் கொண்டனன் மாரனே
மேதினி வேந்தனு மெல்லியரே. (5)

சித்தசன் செந்திரு மாமகன் வித்தகன்
செப்பிய லைவகளுந் தப்பற வே
இத்தனை யுந்தனக் கங்கமாக் கொண்டன
னிசைப்ப தென்னினி யேழையரே. (6)

வாழி திருமகள் வாழி கலைமகள்
வாழி மலைமக ளன்புறு நந்
தோழியர் நாளுந் தழைத்து நலன்கொடு
வாழியர் வாழியர் வாழியரோ. (7)

நேரிசையாசிரியப்பா.

சேவிலி. போதுமே கும்மி; பொலந்துடி யிடையும்
மாதே! வருந்தும், மலர்க்கர நோகும்;
ஆரஞ் சிந்திய தாடை நெகிழ்ந்தது;
வேர்வையு நுதலில் விளங்க லுற்றது;
பாதஞ் சலித்தது; பருமணிச் சிலம்பி
னுதரப் பூட்டு மற்று விட்டது;
வார்குழல் சரிந்தது; வாட்ட முற்றனை;
நேரிழை யார்களு நெடிது சோர்ந்தனர்;
வஞ்சியே! நிறுத்துக!

காஞ்ச. மதிவிலா சனி! யுன்
பஞ்சுறுங் தளிரடி பாடுற் றதுகாண்!
நன்குன் பாடல்! நன்குன தாடல்!
மென்குயின் மொழிக்குளம் வியந்தனர் பாங்கியர்.

மதிவி. அம்மணி! யுன்சார் அமைந் திருத்தலே
எம்ம னோருக் கியைந்த பாக்கியம்.
ஆக்கமும் பெறுவேம், அழகும் பெறுவேம்,
வாக்கு முறுவேம், வருங்குறை யில்லேம்!

காஞ்ச. மூர்த்தி! யென் செய்தி?

மூர்த்தி. மூர்த்தியின் செய்தி
நேர்த்தி! நேரம் நினைந்து நின்றனன்!

காஞ்ச. பாங்கிய ரயர்ந்தனர், பகலவன் கிரண
மோங்க லுற்றதால், ஒண்டொடி யார்களே!
களைப்புத் தீரவிக் கடி பொழி லகத்தும்
முளப்படி சில்பொழு துறைமின், பின்னர்
பொன்னொளிச் சிவிகையிற் போதும்,
நன்னகர் மாக்க ணயந்தெதிர் கொள்ளவே.

களம்—6. முற்றும்.

---

## களம்---7.

இடம்—சென்ற களத்தினிடமே. காலம்—சென்ற களத்தின் காலமே.

(மாதர்களும், சேவகர்களும் அல்லலுற்று நிற்ப)

நேரிசை யாசிரியப்பா.

மதிவி. ஆற்றினிற் பார்த்தேம்! அகன்பொழிற் பார்த்தேம்
காற்றென வுருவங் கரந்துபோ யினளோ?

சின்ன. யாவரு முளப்படி யாங்கணு முலாவுக
மேவிய பொழிலிடை மெல்லிய லீரென்
றுரைத்த வோதிம மொக்கலைப் பிரிந்து
விரைத்தடஞ் சோலையை விட்டே கியதோ?

சேவக. பன்ன சாலையும், பங்கயத் தடமுந்,
துன்னு சூழலுந், துருவிப் போந்தனன்.
மங்கைகாண் கிலனு வாளா வந்தனன்;
எங்குற் றனளென் றேழையே னறிகிலன்!

மூர்த்தி. சிற்றிடம் விடாது செவ்விதிற் றேடினம்,
கற்றவர் மதிக்குங் காஞ்சனை காண்கிலன்!

சுந்த. (தனதுவலைக்கரநேரித்து)
ஏதடி செய்வது? ஏழையே மிந்த

வாதனைக் கோலிவண் வந்துநின் றனம் ?
மன்னவன் கேட்கின் மனநிலை கொள்ளுமோ ?
அன்னைதான் கேட்கி லாற்றுவாள் கொல்லோ ?
மாந்தர் மருங்கு மருவி யாரும்
போந்து புகல்வதிப் புன்மை மொழியோ ?

சேவிலி மாயமோ ? வஞ்சமோ ? நேயமா நின்ற
வாயமு மவல மாயதே ! யந்தோ !
கரைந்து நிற்பதுங் காலக் கழிவே !
விரைந்து சென்றிதை வேந்தற் குரைப்பதே
செயலாம். (அச்சுதப்பனும் விசுவநாதனுமாங்கண்வர)

அச்சு. • ‵ ‵ என்னே ! செவிலி ! யென்னே !!

விசுவ. துயரம் நுமக்குச் சூழ்ந்த தென்னையோ?

சேவிலி. ஐயன்மீர் ! வருக ! ஐயன்மீர் ! வருக !
வையகம் புரக்கு மன்னவன் பின்னவ !
நங்கைய ரியாரு நாடினர் வந்திப்
பொங்கர் புகுந்து, பூக்களைக் கொய்து,
புனல்விளை யாடிப், பொருந்திய காலையில்,
இனத்துட னாடிய விளைப்புத் தீர
மேயினர் மாதர் வேறு வேறாகப்
போயினள் காஞ்சனை ; புக்கிட மறிகிலேம் !
ஓடையுஞ் சோலையு மொருங்கு தேடி-
வாடினம் ; பதைத்து வருந்தினம், அயர்ந்தேம் ;
செய்வ தோர்கிலம் ; சேயிழை பிரிவா
லுய்வினை காணு துணர்வு குன்றினம் ;
காற்றிற் பட்ட கலமெனச் சுழன்றேம் !
ஏற்றுமி னெங்களை யிடர்க்கட லிருந்தே !

அச்சு. எங்கணுந் தேடினர், ஏந்திழை காணார்,
இங்கிதன் மாய மேதோ வறிகிலம் !

விசுவ. நங்கையை நாடுதும் நண்ப !
துங்கபத் திரையின் சூழ லெங்குமே !

களம்—7. முற்றும்.

## களம்—8.

இடம்— சென்றகளத்தினிடமே. காலம்—காலை.
(விசுவநாதனும் அச்சுதனும் தேடிவர)
நேரிசையாசிரியப்பா.

விசுவ. இவ்வடிச் சுவடு மேந்திழை யடியே!
நவ்விநேர் விழியா ணடந்த வழியே!
சிறிய வடியிதோ! செல்வது காண்க!
வெறியவிச் சூழலை வேண்டி வந்தனள்!
ஆ, விது நண்ப! வடிகளை நோக்குக!
பாவை யிங்கு பயந்து நின்றனள்!
இன்ன லொன்றவட் கெதிர்ப்படக் கண்டு,
பின்னுறப் பாதம் பெயர்த்து வைத்தனள்!
நாலடி பின்னுற நாடி நோக்கின!
காலடி பலவுங் காண்பன காணாய்!
வஞ்சமே! காதல! வஞ்சியைச் சிறைசெய
நஞ்சமே யனையவர் நாடினர்! மெய்யே!
அந்தோ! இங்ஙன் அரசே! பாராய்!
பந்தஞ் செய்தனர் பாவையை யென்பது
தோன்றிய விந்தச் சுவடு சொல்லுமே!
ஆன்ற பெட்டியொன் றமைவிட மிதுவே!
பண்டி யுருளை பதிந்த சுவடும்
கண்டனன் காணாய்! கனங்குழை சிறையே
பட்டன ளாகும்! பழிபட நின்றேம்!

அச்சு. மங்கைக் கிந்த மறுவுமெய் தியதோ?

(விசுவநாதன் ஓர்மோதிரத்தைக்கண்டெடுத்து)

விசுவ. நங்கையி னாழி! நகுமணி யாழிகாண்!
காஞ்சனை யென்றபேர் காண்க! காதல!
வாஞ்சை கொண்டுநம் வரவை யுன்னியே
வாங்கி யிட்டனள்!—வளரு முட்செடி
தாங்கு கின்றதென்?

(காரைச்செடியின்மீது கிடந்த ஒரு பந்தையெடுத்து.)

தாமரைபூவிது!
நாரினாற் கட்டி நடுவிற் றாணியுஞ்
சேரக் கிடத்திய செயலினை நோக்காய்!

அச்சு. இதனைக் குறித்த விங்கித மென்னையோ ?
புதனுப் போந்த புண்ணியக் குரிசிலே !

விசுவ. வேரியங் கமலமே மெல்லிய லாக,
நாரே நண்ப ! நங்கையைப் பிணித்த
பாச மாகப், படிந்த தூசுங்
கூச விடாதுவாய் கொடுத்தபந்தா,
காரைச் செடியே கண்டகர் குழுவாத்,
தாரைச் சுவடே சகட நெறியாக்,
கருதினன் றேழ ! கனங்குழை யிங்கிதம்
அரிதரிது ! ஆயிழை யறிவு மரிதரோ !

(நாரைவிலக்கிப் பூவை நோக்கி)

பூவே ! யுன்னைப் புரப்பவ ரிலையோ ?
சாவா திருந்தேந் தனைபடக் கண்டும் !
அரசன் புதல்வியே யருங்குல விளக்கே !
விரசுவார் போற்றும் வில்லுமிழ் மணியே !
தானையு மரணுந் தாவறப் படைத்துந்
தேனே ! விதியின் செயலு மிதுவோ ?
பாவியே மியாங்கள் படைத்த வலியு
மோவியம் போல வுயிர்ப்பில தாயதே !
வாடினை நீயும் ! வருத்தந் துய்த்தனை !
தேடி யானுனைச் சிறைமீட் கிலனேல்
வாழு நாளும் வறிதாய் விடுமே !
தாழுமே வீரந் ! தனிச்சிலை குன்றுமே !
அச்சுத ! என்றியா னரிவையைக் கொணர்வனோ
நிச்சயம் ! அன்றுதா னித்திரை கொள்வேன் !

அச்சு. (பெருமூச்செறிந்து)
பேதையாள் பெய்யும் பெருங்கண் ணீரே
வாதை யாயவன் வாழ்நகர்ச் சுடுமே !
நாத ! நீயே நாரினை விலக்கிப்
போதைக் கொண்டனை! புகன்ற சபதமும்
உரைத்து நின்றனை ! யுறுவது கூறில்,
விரைக்கருங் குழலை மீட்பவ னீயே !

விசுவ. வார்த்தை யாடி வாளா நிற்பதோ ?
பேர்த்து மாதரைப் பெறுற லொழித்து ;

நன்னகர்க் கேகி நாமும்
மன்னவர்க் குரைத்தவன் வார்த்தைகொள் வோமே!

களம்—8. முற்றும்.

அங்கம்—2. முற்றும்.

# அங்கம்—3.

## களம்—1.

இடம்—விஜயபுரிக்கோட்டையில் ஓர் உன்னதமாளிகை.
காலம்—மாலை.
[மாளிகை நிலாமுற்றத்துச் சோர்ந்து கிடந்த
காஞ்சனை தனியே புலம்பல்.]
நேரிசையாசிரியப்பா.

காஞ்ச. பேதையர் குழுவைப் பிரிந்ததால் வந்த
வாதனை யோ? விதி வயந்தா னிதுவோ?
செந்திரு மகளின் றிருவடித் துணைகளை
முந்து பூசனை முன்னிநின் றேன்! அவள்
அருளு மிதுவா யமைந்தது கொல்லோ?
மருளு மென்னை மனச்சிறை கொண்டவர்
இச்சிறை மீட்டெனை யேற்றிடு வார்கொல்லோ?
நச்சி நாதரு நயந்திடா ரென்னில்,
என்சிறை நீக்குவா ரெவரே! யிலங்கையிற்
பொன்சிறைப் பட்டனள் போலு மாயினேன்!
சின்னாள் வருந்தியச் சீதை யம்மனுந்
தன்னா யகனைச் சார்ந்த வாறுபோல்
நலங்கொள் வேனோ? நலியு மிந்த
விலங்கிற் பட்டுளம் வெதும்பி நிற்பனோ?
பஞ்சரந் தன்னிற் பட்டு வருந்தும்
அஞ்சிறைப் பறவையும், அலைபுனற் பிரிந்து
வாடிக் கிடக்கு மச்சமும், தன்னினங்
கூடிக் கலந்து குலவா மஞ்ஞையும்,
காட்டி னுலவிக் களிப்பதை விட்டு
வேட்டுவர் வலையில் விழுந்த மானையும்,
குரங்கின் கைப்படு கோதையும், காற்சுழல்
கறங்கையும் போலக் கலங்கி நின்றனன்!
நான மொழிந்து நல்லுணா விழந்து

மேனி மாசுற மெலிந்து விட்டது !
ஆயமும் விட்டிவ் வறிவிலா மிலேச்சர்
ஈயு முணவை யேற்று மிருந்தனன் !
எற்குயி ரிழத்த லெண்ண மாயினுந்
தற்கொலை புரிதல் தகுதி யன்றென
ஆன்றோர் கூற்றுக் கமைந்து நின்றனன் !
என்றெனைக் கொள்ளா திருப்பரே லாவி
பேணேன் ! இந்தப் பிறவியும் பழுதுறும் !
(காவற்பெண் உள்ளேபிரவேசித்து)

மம்தா. காணு மாசையாற் காவலன் மகனார்
சுல்தான் மாலுவுன் சூழற் புக்கனன்.

காஞ்ச. தொல்லை விதியின் சூழ்ச்சியே கொடிதாம் !
அதனினுங் கொடிதிவ் வறிவிலான் செய்கை !
முதனா ளறிவிலி மொழிந்தனன் காதல் ;—
மன்மதன் கணையால் வருந்தினன் ! பைந்தொடி !—
என்றுதா ளிரந்தன னிரந்தவற் கெதிர்மொழி
ஒன்றல நீதிக ளோதினன் ! பண்டு
மன்றலங் குழலாள் வைதே கிக்கிடர்
இழைத்த விலங்கை யிராவணன் பாடும்,
மழைத்தடங் கண்ணியை மன்ன ரவையினில்
மான மழித்த மாசுணக் கொடியோன்
போனகதியும், பொங்கரா நுங்கு
மமயத் தடவியி லரவைக் கொன்று
தமயந்தி யென்றன் றுயர் தீரென
வேண்டிய வேடன் விளிந்த விதியும்,
அகலிகை யிடத்தி லாசை மிக்குறப்
புகுந்தவட் புணர்ந்த புரந்தரன் பாடும்,
சொல்லினன் ! கேட்டிலன் ! சூழ்ச்சியா லிவனை
வெல்லுது மெனவே வேண்டினன் றிங்கள்
ஒன்று தவணையா, வொருப்பட் டனனவன் !
இன்று வந்ததற் கென்னி மித்தமோ ?

[சுல்தான் மாலு உள்ளே பிரவேசிக்க. காவற் பெண் வெளியே செல்ல.]

மாலு. தகைமலர் வாளி தனுவினிற் றொடுக்கு

மதனனுஞ் சலாமிடு மாதர் திலகமே!
என்னுடை யிதயத் திருக்குங் கண்ணே!
தென்னுண் டேனிற் றிதிக்குங் கரும்பே!
மாந்தளி ரொத்துரு வயங்கு மின்னே!
காந்தளிற் செவந்து காட்டுங் கரத்தாய்!
மழைநிகர் வடித்த மணமுறுங் குழலாய்
உமையின் கண்கள்! உனதிரு கண்கள்!
முருக்கிதழ்! பூத்த மூரன் முறுவல்!—
உருக்கொளித் தொதுங்கு மொண்சிறைத் தோகை!
கண்களுன் னுருவே கருதி நின்றன!
எண்ணமு மவ்வா றிருந்த தின்சொலாய்!
தவணை கூறித் தமியனை வருத்தினை!
இவணெனை மருவி யின்பந் தருவையே
உய்வன் அன்றெனி னுயங்குவன் கோதையே!

காஞ்ச. நைதரத் தவணை நச்சி நின்றனன்:—
மன்னவ வென்றன் வாய்மையைக் காத்தி!
பின்ன ருன்றன் பேதுற லொழிப்பேன்.

மாலு. கண்மணி! யுனது கருத்துப் படியே
எண்ணருங் கால மாயினு மிருப்பன்!
காதலி யாகக் களித்துக் கூடிலென்
மாதவப் பயனு மதிப்பன்!—

காஞ்ச. மன்னவ!
உன்னுள மறிந்தேன். ஒருமதி தாழ்த்துப்
பின்னது முடித்தும். பேதையேன் விரதம்
முடியுங் காறு முன்வரா திருக்க
வடியாள் வேண்டினள்!—

மாலு. அணங்குன துள்ளப்
படியே யாற்றுக படைத்த நோன்பையும்!
துடியிடை! அந்நாட் டோன்றுவன் செல்வேன்!

(மாலு வெளியே செல்ல)

காஞ்ச. (பெருமூச்செறிந்து)
சிறையிடைப் பட்டுச் சென்றன நாட்கள்
உறைவிட மெவரு முணர்கிலார் போலும்!
நாதனும் வருகிலன்! நாடுவர் கொல்லோ?

பாதக னுளும் பார்த்து நின்றனன்.
தெய்வமு மென்வயிற் செயிர்த்து நின்றதோ ?
உய்வு மெனக்கினி யுண்டா குங்கொலோ ?
காவன் மனிகை கடப்பது மரிதாம் !
தாவறு மகழியுந் தைவர நின்றது !
உயர்நிலா முற்றத் தொருசார் போந்திச்
செயலா ரகழியிற் சிந்துதல் செயலாய்
முடியுமோ வறிகிலன் ! முந்துமோ நாதன் ?
அடியாள் காணவு மாகு மேகொலோ ?
கண்டகர்க் காகக் கரைந்திடு மியிரை
விண்டலந் தொடுபுகழ் வீரனை விழைதல்
கூடுமோ ? பிறவிதான் கொள்ளுமோ பயனும் ?.
நாடுவ ரியினும், நாளுறு மிடந்தான்
அறிவரோ? சிறந்த வறிவுறு நாதனுங்
குறிப்பானே மொழியிடைக் குறித்த விங்கிதம் ?
தெரிந்தெனை மீட்குஞ் செயலை நாடியே
இருந்தனன் கொல்லோ ? எழுந்தனன் கொல்லோ ?
என்ன தந்திர மியற்றி யென்னை
மன்னவன் கொள்வனே ? வருந்தி னாணுள்
வாளா வளர வைத்தனை
நாவோ துயர நலிய விருப்பதே !

களம்—1. முற்றும்.

## களம்—2.

இடம்-விஜயபுரி, சுல்தான் கோலுமண்டபம். காலம்—எற்பாடு.

[சுல்தானிஸ்மே லடில்ஷா, கும்மல்கான், அஷாடகான், சலா பத்கான், உம்மதுஷா, அமீர் பீரித், முதலானவர்கள் தந்தமாசனத் துமுறையே வீற்றிருப்ப.]

நேரிசையாசிரியப்பா.

சுல்தா. தூதுவர்த் தருக ! (அமீர்பீரித் வெளியே செல்ல)
துணைவ ! மதித்துநீ
யோதுக, தூதுவர் போதுறு செயலை !

கும்ம. மன்னவர் மன்னவ ! மாற்றலர் தென்பாற்
றுன்னிய நாட்டிற் றுங்கபத் திரையின்

பாங்கர் முதலாப் படிந்த காவதம்
தாங்கள் கொண்டதாத் தம்மனத் தெண்ணி
அந்நில முழுதவ ராணைக் குரித்தென
இந்நிலை யுணர்த்தலே யெதிர்ந்த தாகுமோ?
முனைந்தவர் நம்மை முதுக்கலின் முறித்துப்
புனைந்தனர் தாரும்; போரிற் பங்கலைக்
கொண்டனர் கூலி குட்புஷா வணங்க;
விண்டல மளாவும் வியன்மதில் ரேய்ச்சூர்
பன்முறை வளைந்தனர் படைகளால்; யாமும்
வன்முறை குன்றி வணங்கி நின்றனம்;
ஆதலின், முதுக்கலை யடிப்படு குதையாத்,
தீதறு பங்கலைச் செங்கைக் குதையா,
மத்திய நாட்டினை வார்சிலை யாக,
வுத்தியி னமைத்துவிண் ணுயர்மதில் ரேய்ச்சூர்
அம்பா, நமையிலக் காகவுங் கொண்டனர்;
நம்பால் வந்ததும் நாட்டி னுரிமையைக்
காட்டுதற் காகுங் காவல ரேறே!

(அமீர்பீரித் விசுவநாதன், ஜீவராய் இருவரோடும் வர.)

விசுவ. (சுல்தானை வணங்கி)

தோட்டுணை விஜயை துடிக்கும் விஜய!
விஜய நகராள் விஜய தேவன்
விஜய புரிக்கெனை விடுத்தனன் வந்தேன்!
விருப்புடன் கொள்க விளம்பு மொழியை.
கருக்கொள் மேகங் கனைத்து நீருண்ணும்
ஆர்கலித் துறையி லடாதன செய்தனன்,
தார்கலிப் புரவியன், தானு பதியா
வைத்த ரசல்கான்! வடுகற் றுறையில்
மொய்த்தநா வாய்களை முருங்கெரி கொளுத்திக்
கடலிடைப் புதைத்துக் கருதிய வர்த்தகம்
இடருறச் செய்தனன். இளைய செய்கையும்,
போர்த்து கியர்தம் புணர்ப்பினு லன்று!
பார்த்திவ னிவையெலாம் பார்த்தெனைத் தூதாப்
போந்துரைத் துள்ளம் புகலென விட்டனன்!
வேந்தன தாணையை மேற்கொண் டனனோ?
அல்ல தவன்செய லமைந்த வாறோ?

சொல்லுக! அவன்செய் தொழிலை யென்னில்
தக்கதோர் தண்டனை தருதியோ? வலது
பக்கலுற் றவற்குப் பரிந்துபே சுதியோ?
உரைத்ததை யுரைப்ப னொற்றனா தலினால்;
வரைத்தடந் தோளினாய் மனக்கருத் தென்னே?

**சுல்தா.** நாத! நின் னுரைக ணயந்து கேட்டனன்;
போதுக! வென்றுரை புகலு முன்னரே
பேசினை யாதலிற் பேச்சி லிருந்தனன்:—
ஆசனத் தமர்க! வலையில ராயினும்
வீரமிக் குடையரை விழைந்து கொண்டிடும்
வாரமே செய்கையா மதித்து நின்றனன்!
நாதனு மரிய நாதனும் போரிற்
போதகம்! அம்மைப் பொழிசிலை தரித்த
பயோதர மெனச்சலா பத்கான் பகர்தரக்
கியாதியைக் கேட்டனன்; கிடைத்ததுன் வரவும்;
அமர்க! நின்வர வறிந்தனன். அமைச்ச!
தமர வேலைத் தாணு பதியின்
செயலை நோக்குதி! செவ்விது! நாவாய்
துயல்வரு துறையிற் றொழிற்கிடை யூறு
வாற்று கின்றது பழுதே! யம்ம!
சாற்றுவ தினியென்? தவறிழைத் தவனை
வர்த்தகத் தலைவனா மதித்தல் செய்யேம்!
கர்த்தனுக் கிணங்காக் காரியஞ் செய்தனை
உன்றொழி லொழிந்தினி யுறுதுயர் கொள்கவென்
றின்றே நிருப மெழுதுக வவற்கு;
நாகமன் குமர! நீ நாடி வந்தது
வேகமார் நதியின் விழைவுறும் வடபால
முன்னர்ப் படுத்திய முதுக்கலைப் பங்கலை
ஆங்கிலே ரெய்ச்சூர் அரணையு மாட்சி
கொண்டிட நீவிர் குறித்த வுரிமையை
விண்டிட வாமென விளம்பி யிருந்தேம்!
அன்னது குறிப்பெனி லைங்களி கொள்ளுமா
றென்ன வுரைப்பதென் றிருப்பமோ றியம்பினை!

**விசுவ.** அன்ன தரச! வமைந்து கிடந்தது,
பின்னது முடிவு பெறும்படி யாக!

உன்னிலை யறிந்தன னுரைத்ததை யுரைப்பேன் !
இன்றிருந் திரவி யெழுந்திட வெழுவேம்;
விடையுந் தருதி !

சுல்தா. வீரனே ! செல்க !
படைத்தலைக் கிழவ ! பரிந்துடன் கொண்டுனை
தில்லி விருத்தி யிவரை
வல்லை விடுதி வைகறைப் பொழுதே !

களம்—2. முற்றும்.

## களம்—3.

இடம்—காஞ்சனை இருந்த உன்னத மாளிகையும் அகழ்ப் புறத்து இராஜ வீதியும். காலம்—யாமம்.

(சந்திரன் பிரகாசிக்க. காஞ்சனை நிலாமுற்றத்து நின்றுவருந்த.)

நேரிசையாசிரியப்பா.

காஞ்ச. இருபதோ டைந்துநா ளிறந்தன. இறைவன்
வருவதோ காண்கிலன். வாளு டுறப்பதே
சரதம் ! தவிர்க்குந் தனையென
விரத மிருந்ததும் வீணாய் விட்டதே !

விருத்தம்.

வண்டிருக்கு மலர்த்தாரான் வனசமல ரெடுத்தடியேன்
வருத்த செய்கை
கண்டிருக்கு மெனிலிறையுந் தாழாது சூழுமெனக்
கருதி யாவி
கொண்டிருந்தே னித்துணையுங் கோதில்பெரு விரதமொன்று
குறித்து நின்றேன்
பண்டிருந்த விதிப்பயனைப் பாரநிலத் துள்ளவரியார்
பறிக்க வல்லார். (1)

தருமநெறி யுடையபெருந் தகையருளாற் றமியேன்றன்
றளையை நீக்க
வரும்வருமென் றெண்ணிவழி பார்த்திருந்தேன் வற்றாத
வசைக்குள் ளானேன்
இருநிலத்தி லென்போல்வா ரினிப்பிறவார் பிறந்தாலு
மிடருறார்கள்
பெருமைதிகழ் விஜயநக ரிறைமகளாய்ப் பிறந்துபெற்ற
பேறு நன்றே. (2)

(வேறு)

பாதகன் றவணைநாள் பார்த்து நின்றனன்
ஏதினி யெண்ணுவ துள திம் மாளிகை
மீதிவர்ந் தகழியில் விரைந்து வீழ்ந்திவண்
சாதலல் லாதினித் தாழ்க்கற் பாலதோ. (3)

(விசுவநாதன் வீதியில்வர காஞ்சனை மேலும்வருந்த.)

கண்டது முண்டுகொல் கணித்த செய்கையும்
கண்டகர் நாடினைக் கண்டறி வார்கொலோ
பெண்டனி மைக்குளம் பேதுறு மோவெனைக்
கொண்டிட நாதனூர் குறித்துற் றார்கொலோ. (4)

விசுவ. நேரிசையாசிரியப்பா.

கொண்டிட நாதனுங் கூடின னென்றாள் !—
ஒண்டொடி யாரோ ? ஓதிமம் போல
உலாவுத லொழிந்தய லொதுங்கி வருந்தி
நிலாமுற் றத்து நின்றன டனியே, (காஞ்சனையை நோக்கி)
காஞ்சனை !—

காஞ்ச. (கீழ்நோக்கி) யாரது ?— காதல !— நாத !—

விசுவ. ஆம் ! சிறை மீட்ப வறிந்து வந்தனன்.
வருந்தேல். கொள்க மனத்திடம். மாளிகை
இருந்தே யுன்னை யெளிதிற் கொள்வன் !

காஞ்ச. மாளிகை யிருந்தேன், வளைந்த தகழியும் ;
மீளுவ தெப்படி ?—

விசுவ. விசுவ னுன்பாற்;
கயிற்றே ணியைநீ கையிற் பிடித்துச்
செய்ய துவசஞ் சேர்த்திய தூணில்
செவ்விதிற் கட்டுக. சேரமற் றேர்முனை
யிவ்விருக் கத்தி லிறுகப் பிணிப்பன்.
அன்னது சுவரி லமைத்த வேணிபோல்
துன்னும்; அஃது துப்புடைத் தாகுமோ
வென்று காணுமா றேறுவ னிறங்குவன் !
பின்றை யவ்வழி பிடித்துநீ வருக.—
ஜீவராய் !— (ஜீவராய் கயிற்றேணியுடன் பிரவேசிக்க)
வருக, சீக்கிரந் தருக !
(கயிற்றேணியை வாங்கி)

பாவையே! யெறிவன், பற்றிக் கொள்கநீ!

[கயிற்றேணியின் மற்றோர் முனையை விட்டெறியக் காஞ்சனை பிடித்துக்கொள்ள.]

நன்கு! நன்கா நாட்டிய தூணில
வன்புடன் கட்டுக.

[காஞ்சனை தூணிற்கட்ட, விசுவநாதன் மற்றோர் முனையை மரத்திற்கட்ட]

வார்கயிற் றேணி
அமைந்த தழகே! அரிவை! காண்டி.—

(விசுவநாதன் ஏணி ஏறிச்செல்ல)

காஞ்ச. தகைமையொடு விரதநான் கைக்கொண் டதுநின்
வரவைத் தந்தது. வருக மெல்லவே!

(விசுவநாதன் நிலாமுற்றத்துக் குதிக்க)

விசுவ. அரிவை! கயிற்றி லமர்ந்து செல்க—
நாட்டஞ் சிதறேல்; நண்ப!— காஞ்சனை!
காட்டினை தவறேல், தளிர்க்கைப் பிடியும்
தளரேல்; இறங்குக —

[காஞ்சனை ஏணிவழியேயிறங்கி வீதியில் வந்து]

காஞ்ச. (ஜீவராயனைநோக்கி) தயையுடைக் குரிசில்!
உளப்பிணி யொழிக்கெனக் குதவி செய்தனை
மறப்பேனோ நன்றி! (விசுவநாதன் இறங்க)
மன்னவ! வருக!

(விசுவநாதன் வாளையுருவி ஏணியைவெட்ட)

பிறப்பின் பயனைப் பெற்றன னடியேன்!

விசுவ. அரிவை! இவணுற லைகுடைத் தன்று.
விரைவினிற் செல்லுதும், விளம்புவன் கேளாய்!—
உன்னையான் மீட்க வுதவி புரிந்தவன்
இந்நகர்த் தானைக் கிறைவன்;—என் றோழன்
சலாபத் கான்மனை சாருதும். அவனை
யலான்மற் றொருவ ரறிந்திடா ரிதனை!
ஆதலி னுருவங் கரந்தவண் விரைந்து
போதலே நெறியாம்! பூணுக வென்னுடை,
பெண்ணெனு முருவம் பிறரறி யாமல்.

(விசுவநாதன் தன்னுடைகளைக் களைந்துகொடுக்க)

நண்ணுவன் யானும் நண்பன் ஜீவராய்
ஆடையைத் தரித்தே!

[காஞ்சனை விசுவநாதனைப்போல் வேடமாற விசுவநாதன் ஜீவரா
யைப்போல் வேடம்பூண]

ஜீவரா. யருமைத் தோழ!
வேடம் பூண்டீர்! விளங்கிழை தனக்கு
முன்போல் வேட மொப்ப நின்றதே!

காஞ்ச. நின்போ லுருவம் நேர்ந்தன னுதன்!—

விசுவ. காதல! இங்கு கடிகை நில்லாய்!
போதுவம் நாங்கள்; புகுந்த பின்னர்
இமைக்குஞ் சூழ்ச்சியா லெழுந்தனை
அழைப்பவன் சேவக னுகநீ வருகவே!
ஜீவராயைத்தனியே விட்டு இருவருஞ்செல்ல)

களம்—3. முற்றும்.

---

## களம்—4.

இடம்—சலாபத்கான் வீடு. காலம்—வைகறை.
(நூர்ஜஹானும், காஞ்சனையும் உரையாட)
நேரிசையாசிரியப்பா.

நூர்ஜ. வார்புனற் கிருட்டினை மருங்கு திகழுஞ்
சோரபூர் தன்னிற் றோன்றி வளர்ந்தேன்.
தாதை யென்னைச் சாலபத் கானுக்
கீத லெண்ணி யிருந்தனன். அல்தான்
குட்புஷா தம்பி கூலியி மாதுஷா
உட்படுங் காத லுடையனு யுற்றே
கவர்ந்தெனைக் கொண்டு கடுகினன் கிருட்டினை.
தவத்தின் பான்மையால் தையலே, உன்றன்
நாத னங்கு நண்ணினன். அறிந்து!
வேதனை யொழித்து விடுத்தனன் பதிக்கே!-
அன்னவன் செய்த வரிய நன்றியை
என்னருங் கணவனும் யானு மறவேம்!—
உன்குறை தீர்த்தே யொழித்தனன் சிறையு
மென்ப தவற்கோ ரெளிய செயலே!

நாதனுஞ் சிறந்த நாயகன். அவனது
காதலுக் கேற்ற காரிகை நீயே !—
கேளடி காஞ்சனே ! கேளி ரெனக்குமுன்
நாளிலென் படிவ நலத்தைக் கண்டு
நுவலரு நாமம் நூர்ஜஹா னென்றே
நவின்றனர். நங்கை ! உன் னலத்தையிப் பொழுது
நோக்கி யுனக்கு நூர்ஜஹான் ஸேஹலீன்
ஆக்கிய நாம மளித்திடத் தகுமால்!—

[விசுவநாதனும், சலாபத்கானும், சேவகனைப்போல வேடந் தரித்த ஜீவராயும் உள்ளேவர]

சலா. எடுத்த வேடம் இராய ! நீ களைக !—
கொடுத்த வாளைப்போற் கொணர்ந்தனன் றோழனே
நாதனே ! வைகறை நண்ணிய தாதலின்
போதலே துணிக !—

விசுவ. போதலெவ் வகையே ?

நூர்ஜ. ஐயரே ! நீவி ரகல்வதே குறித்தீர் !
மெய்யன் புடையார் விலகல் கொடிது !

விசுவ. அம்ம ! நீ யுரைத்தது மன்பின் மிகுதியாம்,
எம்மனோர் நிலைமை யிருந்த தறியாய் !

சலா. நூர்ஜே ! யன்பு நுவலக் காலமோ ?
பார்ப்பவ ரறியாப் பான்மையி லிவர்கள்
இன்னே யெழுந்தன ரேகுத லினிதே !

நூர்ஜ. கன்ன லின்மொழிக் கயிரவ வாயாய் !
என்னை மறப்பையோ ? ஏகினை யாயினும்
உன்னை மறவேன் ! உனக்கியான் கடிதம்
எழுதுவ னூர்ஜஹான் ஸேஹலீ னென்று ;
பழுதிலா நண்பு பாலித் திடுவாய் !

காஞ்ச. எம்மணி நகர்க்கியா மேகுவ மாயினும்
அம்மணி ! உன்னையு மறப்ப தாகுமோ ?

விசுவ. நண்ப ! இருவரே நாடி வந்தனம் !
பண்படு சொல்லியிப் பாவை தன்னொடு
மூவ ராகினேம் ! மூதூர் கடக்க
லாவதோர் கரும மகத்தி லுன்னினன்:—
என்னுடை காஞ்சனை யேற்றுப் போதத்,

தன்னுடை தன்னையே தரித்த நண்பனே
டினதெழி லாடையே யுடுத்துக், காலென
மனமெனக் கடக்குமுன் வயப்பரி யேறி,
நீயுடன் போந்து நெறிக்கொள விட்ட
தேயு மாறே யெழுவ தெண்ணினன் !
உபாய மிதுதான் உன்மன மேற்குமோ ?

சலா. (சிரித்து)
சபாஷ் ! நாதனே ! தந்தன னுடையும் ;
தரித்துக் கொள்கநீ ! சலாபத் கானென ;—

[நூர்ஜஹான் சலாபத்கானுடைகளைக் கொண்டுவந்துதர]

விசுவ. சிரித்து நூர்ஜஹான் சீருடை தந்தனள் !
வாங்கினன். உடுத்துரு மாறுவன். நூர்ஜஹான் !
பாங்கிக் கென்னுடை பண்ணுக !

(நூர்ஜஹான் காஞ்சனைக்கு விசுவநாதன் வேடம்பூட்ட, விசுவநாதன் சலாபத்கானுடைகளைப்பூண)

தோழனே !
கூத்தெலாங் கண்டு கொண்டனை புன்னகை !
காத்திருப் பவர்கள் காவலைக் கடந்து
போவதற் கான புகலுரை யுளதேல்,
ஈவதுன் கடனும், எனக்கது பயிற்றுவாய்.

காஞ்சனையும் விசுவநாதனும் முறையே விசுவநாதன் சலாபத் கான்போல் வேடம்பூண்டு ஜீவராயுடனிற்ப]

சலா. என்னைப் போலுரு வெடுத்த தன்மையால்,
அன்னதற் கிங்கித மறிதல் வேண்டும்.
உருவினு மொத்தாய் ; புரவியும் பெற்றாய் ;
இருளினு மறியா ரென்னினும், வாயிற்
காப்பவர் இங்கிதங் கழறுவ ராதலின்
ஏய்ப்ப தியலா ! தெதிர்மொழி கூறிச்
செல்லுதல் சீராம். செப்புவன் கோடி !—
சொல்லுவர் வீரர்கள் தொழுதுனை நின்று,
"குதாபஜூஸ் குதாநஹி
முகம்மது பஜூஸ்பீர்நஹி"
என்றே, அறிவுடை யேந்தலே! அதற்கு
"மக்காபஜூஸ் மாவாநஹி
பாஹோர் ஜாநே ராஹா சோடியே"

என்றுரை தருக!—எயிற் புறவாயில்
நின்றவ னியானென நினைந்தென் மொழிக்கு
நேருரை வழங்குக, நிறுத்த முறையே;—
"குதாபஜூபஸ் குதாநஹி
முகம்மது பஜூபஸ் பீர்நஹி

விசுவ. கேசவன் பஜூபஸ் ஈசன் நஹி
தேசிகன் பஜூபஸ் தேசிகன் நஹி—

சலா. (புன்னகை செய்து)
இடக்கிது விடுதி யிஞ்சியின் காவலைக்
கடக்க லாவதோர் கட்டுரை கழறுதி!

விசுவ. "மக்காபஜூபஸ் மாவாநஹி
பர்ஹேர் ஜாநே ராஹா சோடியே"

சலா. அச்சா!

விசுவ. தோழ! அடுத்தது வைகறை;
இச்சா ரெழுந்தியா மேகச் செய்க!
(சலாபத்கான் வெளியே செல்ல)
அரசன் புதல்வி யாதலிற் கொய்யுளைக்
குரகத மூருதல் கூடு மாயினும்,
ஆணுரு வமைந்தனை! அன்னதற் கேற்பக்
காணுமா றெவருங் காப்பதுன் கடனே!
(சலாபத்கான் உள்ளேவந்து)

சலா. நாதனே! குதிரைகள் நயந்து நின்றன!
போதுக நண்பொடும் பொலந்தொடி யோடும்!

காஞ்ச. செம்மலு நீயுஞ் செய்தன மறவேம்!
அம்ம! எங்க ளணிநகர்க் கேகுதும்!
விடையுந் தருதி!

நூர்ஜ. விளங்கிழை! செல்லுக!
குடைகெழு வேந்தன் கொடிமதில் கடந்தே!
(சலாபத்கான் நூர்ஜஹானோடு செல்ல)

விசுவ. துன்னலம் வருக! தோகையே!
செந்நெலுங் கன்னலுஞ் செழித்துள நாடே!

களம்—4. முற்றும்.

அங்கம்—3. முற்றும்.

# அங்கம்—4

## களம்—1.

இடம்—விஜயநகரம், அரசன்கோலுமண்டபம். காலம்-நண்பகல்.

[கிருஷ்ணதேவராயர், குருபக்க, சாலுவதிம்மன், இராமராஜன், அச்சுதப்பன், விசுவநாதன், ஜீவராய் முதலானவர்கள் வீற்றிருப்ப]

(பாண்டிவாசியோருவன் சபையை வணங்கி.).

நேரிசையாசிரியப்பா.

பாண்டி. நானிலம் புரக்கு நாயக! நாகமன்
சேனையோ டெழுந்து சேகரச் சோழனை
மாளிகை தன்னிலே மாய்வுறச் செகுத்து
மீளிபோல் மதுரை மேவிச் சந்திர
சேகரன் றனக்குச் சீர்முடி புனைந்தனன்.
சாகரஞ் சூழ்ந்த தராதல மெல்லாம்
இன்பக் கடலி லேமாந் திருந்தது.
மன்பதை யோங்கி மகிழு நாளில்,
வள்ளுவ னொருநாள் மாநகர் வீதியில்
உள்ளங் கலங்க வொருபறை சாற்றினன்;
யாதெனக் கேட்டேம்; "இறைபித் தேறினன்;
ஆதலிற் சிறையிட் டாதன மேறினும்;
என்று முரச மெற்றுக யாவரும்
இன்றே யுணர" வென்றூர் கட்டளைப்
படிடம் டாம்டாம் படம்டம் டாம்டாம்
அடிப்ப னென்றனன், அரச ரேறே!
இடியே றுண்ட நாக மேய்ப்பக்
கொடியோன் சாற்றுங் கூற்றுக் கஞ்சினேம்;
பாண்டியன் செய்த பாவம தாகுக;
ஈண்டிவ னேனு மின்னரு ளுடனே
அரசு புரிவனோ வறிகுவ மென்றே
விரசி யொழிகினம்; வீணிவ னீதி!

கிருஷ். ஆ! ஆ! கொடிதே! அரிய நாதனை
ஏவாக் கொண்ட விவன்செய விதுவோ?
ஞான சிகாமணி! நந்தா விளக்கு!
மானமே பூணு மதித்து நடக்கும்
சீரியன்! செய்கையுஞ் சிந்தையு நல்லான்!
ஆரியன்! நாதனை யருங்குல மகனைப்
பெற்ற தந்தையும் பேதுற லாகுமோ?
கொற்றமோ? நீதியோ? கோன்மொழி நிற்றலோ?
கூறாக திம்மவோ! கொடிது! கொடிது!

திம்ம. ஊறிய புகழினைப்! ஒன்னலர்ச் செருத்து,
வீரமும் வாகையும்வேய்ந்து, வளர்ந்த
பேரணிப் படையின் பெருமிதங் கொண்டு,
ஊரரா முடிபுனை யொருவ னுண்ட
காரரப் பொழிலு நீரருத் தடமும்
பூசுர ராகுதி பொழிதரு சாலையும்
வாசநா ரோதியர் வதியுமா லையமும்
அழகுறப் பொருந்தும் வழுதிநா டதனைத்
தன்னடிப் படுத்திய தன்மையாற் றுணைவர்
இன்னுரை கொளானாய் இகந்தோர் கிலனாய்
இருந்தனன்; செல்வ மெழுதரு மாயின்,
திருந்திய நீதியுந் தெய்வமும் பேணான்;
சுற்றமுந் துணையுஞ் சொல்லுங் கொள்ளான்;
வெற்றியே கருதுவன்; வெம்பகை யெண்ணான்;
என்பதிவ் வுலக வியல்பா மென்பர்!
தன்புகழ் துடைத்துத் தரணிப! நினக்குப்
பழியுந் தந்தனன்.

இராம. செழியன் பித்தே
வழுதிநா டாள வழியைத் தந்தது.
நாகமன் பித்தோ நமக்கு வெற்றியும்
வாகையுந் தந்து வழுதிபித் தொழிக்கும்!

குருபக்க. அப்ப! நின் மொழிமிகச் செப்ப முடைத்தே!

கிருஷ். செப்பரும் பகைவர் சிற்றமிக் குடைய
துருக்கர் தாமெனத் துணிந்து நின்றேன்;
விருப்புடை யாரும் விரோதி யாயினர்!

கண்மணி காஞ்சனை கடுஞ்சிறைப் பட்ட
எண்ணருந் துன்பம் இரிந்ததிக் குரிசில்
நாதன் புரிந்த நன்றியால் ; நாகமன்
ஏதங் களைந்திவ் விடரினைத் தொலைத்தவன்
தலையைத் துமித்துத் தருபவ ரிலரோ ?

(சபையோர்கள் மௌனமாயிருப்ப)

விசுவ. அலைகட லுடுத்த வவனியைப் புரக்கும்
இறைவனே ! யவையி லிலரோ வொருவரும்
அறநெறி கடந்த பகைவனை யடக்க ?
பேசா திருப்பது பெருமை யுடைத்தோ ?
கூசா தரசன் கொடுத்த வாணையைக்
கடந்த வெந்தையைக் கடிந்து கொணர்வான்
படர்ந்து செல்வன் படையுடன், பார்த்திப !

கிருஷ். இன்னதே வீரம் ! இன்னதே வார்த்தை !
இன்னதே பெருமை ! இன்னதே புகழும் !
இருந்தா ரவையோர் ! எதிர்மொழி கூறிலர் !
இருந்தார் மார்ப னிவனலா தொருவர்
இப்பெருஞ் செயலை யிழைத்த லொண்ணுமோ ?
ஒப்பரு மமைச்ச !

(திம்மனும் அரசனும் தனித்துரையாட)

திம்ம. உயர்மதி யுடையான்,
நல்வழி பிறழான், நாதன் ; ஆயினும்
செல்வழி யொன்னலர் சேர்ந்தவன் மதியைக்
கலைப்பர் ; கலைத்தாற் கல்லுங் கரையும்.

கிருஷ். துலைமுக மொத்த தூமதி யுடையான்,
ஆதலி னேதை னயன்மொழி கொள்ளான்,
போதலே நன்கு !

திம்ம. போதக மனையான்
அறந்தலை நிறுத்தி யப்பனைத் திருத்தித்
திறமுற வெற்றித் திருவொடுந் திரும்பும் !

கிருஷ். (சபையோரை நோக்கி)
நாதனே செழிய னகர மேக
மேதகை யோனென விளம்பின னமைச்சன் ;
எமக்கு மதுவே யெண்ணம் ; அவையோர்

தமக்கு மிதுவே தழைத்த கருத்தெனத்
தோற்றும் ; ஆதலின், (விசுவநாதனை நோக்கி)
மேருன்றலே ! யின்னே
ஆற்றற் படையுட னணிவகுத் தேகுக,
உந்தை மறத்தொழி லொழிந்து,
செந்தமிழ் நாடு சிறப்புற் றோங்கவே !
களம்—1. முற்றும்.

---

## களம்—2.

இடம்—சோழவந்தான்புறத்து இறந்தபாசறை. காலம்—மாலே.
நிலேமண்டிலவாசிரியப்பா.

விசுவ. (தனியேநின்று)
உலகெலாம் புகழ வுடம்பெடுத் தவர்கள்
அலகிலா விளையாட் டாடுமோ ரீசன்
அமைத்த வறநெறி யாற்றிநின் றூரே
சமைத்தமா தவரெனச் சாற்றும் பெரியோர் !
அடியேற் குலக வனுபவம் பலவாம் ;
முடிதரித் துலக முறையினே டாளும்
மன்னவ ரவையு மாந்த ரீட்டமுந்
துன்னலர் படையுஞ் சூழ்ச்சியும் வஞ்சகர்
கூட்டமுஞ் சிறியர் குழுவும் பற்பல
நாட்டி னியற்கையு நன்குணர்ந் துள்ளேன் ;
மாக்க ளுழலும் வல்லிருட் கானில்
ஊக்க முடனிருந் துலவுகா மாதி
வருத்தும் ; அப் பேய்கள் வசப்பட் டார்பலர்.
கருத்தற நெறியிற் கலந்து தாண்ட
நன்மையே யிழைத்தவர் நல்லவ ரென்பதே
என்மனத் தெழுந்த விசைப்பருங் காட்சி !
ஆதலின், யானு மன்னவர் காட்டில்
போதர லமைந்தும், புன்னெறி புகாமல்
நன்னெறி நாடி நலங்கொளக் கருதினன்:—
என்னவென் றுரைப்பேன் ? எழிலார் மாடமும்
தோரண வீதியுந் தோகைவாழ் பொழிலும்,
ஆரண மோது மந்தண ரிருக்கையும்

தமிழினை வளர்க்குஞ் சாலையுஞ் செறிந்த
அமிழ்தினு மினிய வகன்புனல் வைகை
வளநா டுற்ற வான்பெருஞ் செல்வம்
உளநா டுற்றதா லுயரறந் துறந்து
மன்னவ னாணையு மறந்து சரண்புகு
தென்னவன் றனையுஞ் சிறையிடை வைத்தான்
தந்தை ; அன்னவன் றனையடக் கென்று
கந்தடு களிற்றுக் காவல னென்னை
விடுத்தனன் ; வந்தேன். வெம்போர்க் களத்தில்
படுத்துவ தோவெனைப் பயந்த தந்தையை ?
துறப்பதோ வாணை ? தொன்மை யறத்தை
மறப்பதோ கொடிது ! மன்னவன் பார்த்தன்
தந்தையுந் தமையனுந் தம்பியர் பலரும்
விந்தைகற் பித்த வில்லா சிரியனும்
ஆர்வ மிக்க வரசரு நிறைந்த
போர்முனை நின்று பொருவ தொழிந்து
வருந்த வன்னவன் மயக்க மொழிந்து
திருந்த, மாயவன் செப்பிய மொழியை
யாவரே மறப்பர் ? ஆதலி னவனி
காவல னிட்ட கட்டளைப் படியே
நிற்ற லறனென நினைந்து நின்றனன் !—

(ஓர்வீரன் பிரவேசம்)

வீரன். வெற்றிவே லிறைவ ! விழைந்துனைப் பெற்ற
தாய்மணிச் சிவிகை தனிலமர்ந் திங்கு
வாயிலில் இறங்கி வரவுரை யென்றனள்.

(மங்கம்ம உள்ளேவர)

விசுவ. (பணிந்து)
அம்ம ! வருக ! அலகிலா நாட்க
ளும்மைப் பிரிந்தேன்.

மங்க. உனைப்பிரி துயரால்
நானும் வருந்தினன், நாதனே ! மதுரை
மாநக ருறுது வழியிடை நின்றனே ;
ஏனிது ? தந்தையு மிரங்கி நின்றனன் !

விசுவ. கோனெழிற் படைதனைக் கொண்ட ஜீவரமும்
தந்தையைப் பொருது தரும நெறியையு

புந்தியிற் புலப்படப் புகல வந்தனன் ;
அவனுடன் போந்தன னன்னையே !

மங்க. அப்பனே !
எவனுடன் பொருவது ? எவனவன் பொருவது ?
எனவன் பொருவது ?

விசுவ. எந்தை நன்னெறி
தானகன் றனெனத் தராபதி கேட்டுச்
சீவ ராயனைச் சேனையோ டனுப்பினன்.

மங்க. ஆவ் தென்னினி ?

விசுவ. அரும்போர் விளையும் !

மங்க. நீயும் போரிடை நிற்ற லமையுமோ ?

விசுவ. ஆமே ! அறநெறி யாற்றலே கடனும்.

மங்க. தந்தைக் கறன்வழி தனயன் பகர்வதோ ?
விந்தை ! விந்தையே ! வேண்டாம் ! கோளாய் !
உலகியல் முற்று முன்னினு மறிந்தவர் ;—
நலமெனக் கொண்டு நயந்து செய்தனர் ;
ஆதலின் போர்த்தொழி லகற்றி யுன்றன்
தாதையோ டிணங்கித் தாரணி காக்குஞ்
செல்வம் பெறுதி.

விசுவ. (செவியைப்பொத்தி) சிவசிவ ! போதும் !
கல்வியு மதியுங் கைவரப் பெற்றது
அறநெறி விட்டிவ ணவந்த மானமேதோர்
மறநெறிக் கேதுவாம் வாழ்க்கை பெறவோ ?
தந்தைதாய் மொழியைத் தாங்குத லெனக்கு
முந்தையோர் மொழிந்த முழுமறை யாயினும்
அறனலா தியற்றற் கடியேன் பொருந்தேன் !

மங்க. விறற்படை மகளாய் ! வெற்றி மடந்தையும்
அரசச் செல்வமு மாக்கமும் பெயரும்
விரசுவார் வணங்கும் வீரமுங் கீர்த்தியு
நின்னுடைச் செல்வமாய் நிலைக்கக் கண்டு,
மன்னவன் றயென மாநிலங் கூறு
நல்வினை யென்வயி னுடைய வன்றே,
மல்வலித் திண்டோண் மகனே ! பாக்கியம்
அடைந்தவ ளாவேன் ?

விசுவ. அம்மணி! யடியேன்
கடைப்புறங் காவல் காவலர் செலுத்தப்
பாவலர் புகழப் பனிக்குடை யதன்கீழ்
ஏவல ரிறைஞ்சும் இறைமக னாயின்
பாக்கியம் படைத்துப் பலபல போகமும்
ஆக்கிய வின்பமு மடைந்து மகிழ்வையோ?
அன்னையே! விஜய நகர மதனில்
மன்னவர்ப் பயந்த மாதவப் பெண்டிர்
நின்வயின் மிக்க நேய முடையர்
இன்பமு நலமு மெண்ணருஞ் செல்வமும்
ஆடையுங் கலனு மரிவைய ராயமும்
மேடையு மாடமு மென்மலர்ச் சோலையும்
சில்லெனக் குளிர்ந்த சீதளச் சேக்கையு
மெல்லென மேனி வீசு தென்றலும்
இன்னிசை யின்பமு மெதிர்ந்தன வாயினும்,
நன்னிலை தனையுள நாடிற் றிலைபால்,—
என்றவர் கூறின ரென்றுநீ பகர்ந்தன
அன்றே மறந்தனை யன்னாய்!

மங்க. பாலக!
நின்மொழி யறமே யாயினு மாகுக;
என்னுரை கேட்டியேல், இவணுறு தானையோ
டணிமதிற் கூட லடைந்தினி வரசாய்
மணிமுடி மன்னவர் வணங்கவீற் றிருப்பாய்;
அரசதந் திரமு மன்னதே!

விசுவ. அழகிதே.
அரச தந்திரம்! ஆருனக் குரைத்தார்?
பேதைமை கொண்டு பிதற்றுகின் றனை?
மோதுறு படையுடன் முனைந்து மன்னவன்
நாளையே போரில் நலிய வந்திடும்
வேளையித் தந்திரம் வெல்லுமோ? பேதாய்!
அன்றியு மனுமுறை யாட்சி செய்யு
மன்றன் மாலை மன்னவர் மதியார்,
துன்பமே சுற்றும், துரோகசிந் தனையால்
மன்பதை விரும்பார், மாநர கெய்துவம்;
ஆதலி னின்னுரை யகற்றாற் பாலதே!—
போதுக!

மங்க. (மிக்கசினங்கொண்டு)
என்னுரை புல்லிதென் றிகழ்ந்தனை !
நல்லது! போர்த்திறம் நாடினை ! நீவிர்
வெல்வதுந் தோற்பதும் விளங்கு நாளையே !
(மங்கம்ம வெளியேசெல்ல)
களம்—2. முற்றும்.

---

## களம்—3.

இடம்—சோழவந்தான்புறத்து வெற்றிடம் விசுவநாதன் பாசறை.
காலம்—மாலை.
[இரண்டுபோர்வீரர்கள் ஓர் புலவனை யிழுத்துவந்து]
நேரிசையாசிரியப்பா.

1-ம் வீர. நீவிரோ புலவர் ? நீவிரோ புலவர் ?
மேவிய கவிகையும் விதானச் சிவிகையும்
விருதுரைப் பாரும் விரன்மோ திரமும்
அரைதனிற் பட்டும் அமைந்தமுண் டாசும்
மன்னவ ரியாரு மதித்தன ராகி
யன்னவ ரளித்தமோ ராரமுந் தூசும்
எவண்கொலோ வைத்தீர் ? ஏட்டுச் சுவடியுந்
தவறிய தெங்ஙனே ? தப்பறை யுரைத்தீர்,
நீவிரோ புலவர் ? நேரலர் விடுத்த
ஏவல னீயே ! யெம்படை யாற்றலு
நேர்மையுங் கண்டு நிருபற் குரைக்க
நீர்ந்திவண் வந்த நீவிரோ புலவர் ?
நாகமக் குரிசில் நலமே ? சந்திர
சேகரன் றானுஞ் சிறைதனிற் சுகமே ?
வஞ்சமுங் களவும் மயங்கு சூழ்ச்சி
நெஞ்சுடை யொற்ற நீயோ புலவன் ?

புலவ. அன்புமிக் குடையீர் ! அடியோ பொறுக்கிலன்,
முன்புவி வேந்தர் மூவரும் வழங்கிய
வரிசையா லுயர்ந்தேன் வாணிகி பெற்றேன்
புரசை யானையும் புரவியுந் தேருங்
காணியு மில்லமுங் கைவரக் கண்டேன் ;
வாணியுங் கமலையு மருமகள் மாமி

யானதோர் வழக்கா லடியன் பொருளெலாம்
போனவா கண்டேன் ; பொல்லா வறுமைநோய்
வந்தெனைப் பற்றி வாதனை கண்டது.
நொந்தனன், மனைவி நுவல கிற்றிலள் ;
குழவியுந் தாய்முகங் குழைந்து நோக்க,
பழவினை கொடிது! பரிந்தெனை மனைவி
நோக்க, நம்மிறை நொய்தினெம் மிடியைப்
போக்கு மென்றிவண் போந்தனன், பாரீர் !
இந்திர னிருந்தன னிடையிற் கலையாய் ;
வந்திரு விழிகளில் வருண னமர்ந்தனன் ;
தேயுவும் வயிற்றினைத் தேடிப் புக்கனன் ;
வாயுவே யன்றி மற்றுண வறியேம் ;
நீரங் குறைந்து தேய்ந்தவின் வுடலைச்
சார மற்றதாச் சமனும் வெறுத்தான் ;
நிருதி போனு நிலவிய கொடையான்
விருதுடை நாதன் விரும்பிக் குபேர
னுக்கு மென்றிவ னடைந்தனன், கேண்மின் !
தாக்கினிர், தாளேன் ! தவறுமோ வீசன்
விதிவலி ; நீவிர் வேறு யெண்ணினிர் !
பதமுறப் பாடும் பாவல னறிமின் !

(பாசறையிருந்த மற்ருேர் புலவன் வெளிவந்து)

கச்சிப்புல. யாரடா வெளியே ? யாதடா வரவம் ?
போரது முடிந்ததோ ? புகலுமின், இவரார் ?

2-ம் வீர. புலவராம் ! தமிழைப் புந்தியாம் புணையால்
நிலையுறக் கண்டவர் ! நெருநல் வந்தவர்,
இப்புலந் துன்னி யின்னிசை பாடிச்
செப்பரு மிடிகெடச் செல்வமும் பரிசும்
பெற்றுள மகிழப் பெருந்தகை யருளை
முற்றினு நாடி முன்னினர் ! யாங்கள்
போர்க்கள முற்ற பொருந்தார் தாமெனு
வீர்த்து வந்தனம், இருங்கவி வாண !

கச்சிப்புல. வம்மின் ! புலவீர் ! வறுமைநோய் துய்த்துக்
கம்மிய குரலுங் கந்தைச் சிதாரும்
இளைத்த மெய்யு மேந்திய கையுமாய்க்
களைத்து வந்தீர் ! காவலன் கண்டால்

இரங்கும் வருந்து மேழைமை யகற்றும்
அரங்க மேற்றி யன்புரை கூறும்.

**மதுரைப்புல.** மன்னவன் புகழை மருங்கிருந் துரைக்கும்
பன்னரும் புகழ்சால் பாவல ரேறே!
இன்னுரை கேட்டேன்; இன்னல்
என்னைவிட் டோடும், இன்ப நாடுமே!

(தானைமாலை)

பொன்முடி யரசவை பொலிதரும் புலவ!
மின்னொளி வடிவேல் வேந்தன் பெருமையைப்
போர்முனை யறிந்தேன், புகலுவன் கேண்மின்!
கார்முனைந் தெழுந்து காலாந் தரத்திற்
பேரொலி யிட்டுப் பிறங்கு மாறுபோற்
பாருளோர் திகைக்கப் பணைக்கை நீட்டிக்
களிற்றின மொருபாற் கலந்து பிளிற,
துளித்தெழு நுரையொடு துள்ளு மலைபோற்
பாய்பரிப் பந்திகள் படர்ந்து கனைக்க,
வேய்வளர் மலைகள் விசையுட னெழுந்து
தாக்குதல் போலத் தடந்தேர் முட்ட,
ஆக்கையிற் றைத்த வம்பினை வாங்கி
நாரியிற் பூட்டி நடுங்க வெய்து
வாரியைக் கலக்கு மந்தரம் போல
வீரர்க ளொருபால் வீரம் பகர,
கார்கடந் தப்பாற் கற்பக மளாவி
விண்ணகந் திரிந்து விரிசிறை யுதறி
வண்ணம் பலவாய் வயங்கும் பறவைபோல்
கண்ணகன் களத்திற் காவலர் கொடிகள்
நண்ணியந் தரத்தி னுடகம் பயில,
ஓங்கலிற் றண்மதி யுதித்தெழு மாறுபோற்
றாங்கலில் வெண்குடை துலங்கிமீ தோங்க,
வெள்ளநீர்த் தரங்கம் விரிதலிற் கவரி
வெள்ளிவெண் கோட்டு வேழமேற் றவழ,
செந்நிறக் குருதி சேண்படிந் தென்னப்
பொன்னிறக் கதிரவன் பொலஞ்சுட ரளைந்து
களிற்றொடு புரவியுங் காலாட் படைகளும்
நெளித்துறு தன்மையா னிலத்தெழு பராகந்

திரள்விரிந் தாடிச் சிவந்து காட்ட,
பரவையின் பரப்பிற் படியுந் தாரகை
யினத்திளங் கதிரினெதிரொளி போலத்
தனித்தனி வீரர் தாங்கிய படைகள்
தானையங் கடலிற் றவாவொளி வீச,
மேனிவந் தெழுந்து விரிதிரை போர்க்குங்
கற்பாந் தத்துறு கார்முழக் கென்ன
விற்பால் விளக்கும் வீறுடைச் சங்கும்
பேரியு முவகை பெரிதுறக் காட்டுந்
தூரியம் பலவுந் துடியுஞ் சின்னமுங்
கலந்து மயங்கிக் கல்லெனக் கறங்க,
நிலமும் விசும்பு நிலைதடு மாற,
நாகமன் சேனையு நாதன்
வேகவெம் படையும் விரைந் தெழுந்தவே!

(வஞ்சிமாலை)

எழுந்த படைக ளிருகட லெதிர்ந்தெனப்
புழுங்கு சினத்துடன் புகுந்து பொருதவா!
சொல்லவும் பெறுமே? சூலிருங் கொண்மூ
கல்லகம் பொழியுங் கனமழை கடுப்பப்
பெருங்கணை மாரி பெய்தனர் வீரர்;
மருங்குறு வாளை வாங்கிச் சிலவர்
எதிர்ந்தோர் தம்மை யிருகூ றுக்கினர்;
அதிர்ந்து நடந்தங் கறைகூ வினரைத்
தண்டாற் புடைத்துத் தள்ளினர் சிலவர்;
கண்டார் கலங்கக் களத்தவிந் தார்பலர்;
அற்றகை வாங்கி யறாத கைக்கொடு
செற்றனர் சிலரைச் சிங்க வேறன்னோர்;
தலையற் றனர்பலர்; தாளற் றனர்சிலர்;
சிலையற் றனர்பலர்; நிலையற் றனர்சிலர்;
தோள்பட் டனருந் துடைபட் டனரு
நாள்பட் டனரும் வாள்விட் டனரும்
பரிகெட் டனரும் படைகெட் டனருங்
கரிகெட் டனருங் கணக்கிறந் தார்கள்;
வாலிழந் தோடின வாம்பரி சிலவால்;
காலிழந் திட்ட கலினமா பலவால்;

துதிக்கை யிழந்த தும்பிகள் கோடி ;
கதுப்பினை யிழந்த கரியினங் கோடி ;
பாரொடிந் தழிந்தன பலபல தேர்கள் ;
ஆரொடிந் தழிந்தன வலகிலா விமானம் ;
தட்டொழிந் தனசில தடந்தேர் ; கொடிஞ்சி
பட்டொழிந் தனவாற் பற்பல திகிரி ;
புகையொடு பரந்தவும் பொங்கெரி கான்றவுங்
ககனமேற் சென்றவுங் களத்திற் பட்டவும்
பரியினைப் பிளந்தவும் பதாதி சாய்த்தவுங்
கரியினைத் துளைத்தவுங் காலெனச் சென்றவுந்
தலைகளை யுடைத்தவுந் தரியலர் படையின்
நிலைகளைந் தனவும் நெடுங்குழாய் கான்ற
கரும்பொற் குண்டுகள் கணக்கிறந் தனவால் !
அருங்கவிப் புலவ ! ஆயிர நாவுடை
யனந்தனும் புகல வாற்ற லிலானேல்,
மனந்துணி வெய்துமோ ? மற்றது கோடியால் !
அடுத்திவ் விருவ ரமர்க்களந் தானை
யெடுத்துமேற் செலவே, யிளைத்தோன் படைகள்
வென்னிட, நாகம விலங்கு
மன்னவன் வலையில் வந்தகப் பட்டதே !

[விசுவநாதனும், அரியநாதனும் உள்ளே பிரவேசிக்க]

(வாகைமாலை)

வந்தகப் பட்ட மதுரை மன்னன்
தந்திர மிழந்தனன் ; தனயன்—இவரே
ஆகுதல் வேண்டும்—அரும்போர் கடந்தோய் !
சாகரஞ் சூழ்ந்த தராதல மெல்லாஞ்
செங்கோ லோச்சுஞ் செல்வம் பெறுவோய் !
எங்கோன் ! என்னுயிர் ! எங்குறை தீர
வெழுந்தகற் பகமே ! ஏதிலார் பகையே !
தொழுந்தொறு மன்னவர் தொங்கன் மவுலி
தோய்வுறத் தேய்வுறுந் தொடுகழல் வீர !
பாய்திரை யுலகிற் பழயநல் லறங்கள்
நிலைபெற வந்த நீதியின் னிலயமே !
விலையொரு காசு மேவப் பெறாத
துன்னற் சிதாருந் தொடர்ந்த வறுமையு

மின்னற் படுத்து மேழையேன் வார்த்தை
யின்னுரை யருந்து மிருசெவிக் கேற்றந்
தன்னைப் பயக்குமோ ? தமிழறி புலவரைத்
தாங்குந் தண்ணளித் தடக்கை வள்ளால் !
வாங்கு வரிசிலை வயவர்தந் திலக !
ஆயினுங் கேட்டி ! யரும்போர் விளைத்த
பேய்குனித் தாடும் பெரும்போர்க் களந்தான்
சுனைவளக் குன்றுசூழ் சோழவந் தானெனும்
புனல்வளச் சிற்றூர்ப் புறத்து வெற்றிடம் ;
சோழமா ளிகையிற் சூழ்படை தொலைத்துச்
சோழனைச் செற்றுத் தோழமை கொண்ட
பாண்டியற் குரிமைப் படுத்திய தாக
வாண்டுளோர்க் கிதமுற வபிநயங் காட்டிக்
கன்னிநா டதனைக் கவர்ந்த வீரனு
மன்னவன் பகைவன் ; வருதினி வாரிதி !
போர்த்திற மெம்மாற் புகல வொண்ணுமோ ?
பார்த்தவர் திகைப்பர், பரிதிவா னவனுங்
கீட்டிசை யுதித்துக் கிளர்ந்து மேற்றிசைக்
கோட்டினை யடுத்துக் குறுகும் வரையில்
வெம்போர் விளைத்தனை ; விசும்புளோர் வியந்தார் !
கம்பித் துலகங் கடலுறு கலம்போற்
சுழன்றது ! பகைவர் தூசிப் படைகெடத்
தழல்விழிப் பரியினந் தாவுறச் செலுத்தினை ;
அணிவகுத் திட்ட வனிகங் குலைந்திடக்
கணிப்பருங் குண்டுகள் களத்தி லுய்த்தனை;
கூறுவ தென்னினி ? குருதியா றோடப்,
பாறுகள் சுற்றப், பல்பிணக் குன்றி
லலகைநின் றாட, வனுகிநாய் தொடர,
நிலைபெயர்ந் தெங்கு நேரலர் தானை
பின்னிடைந் தோடப், பெட்பிற் குறுநில
மன்னவர் வணங்கி வாகையைச் சூடத்,
திருப்புயந் தன்னிற் றிருவிருந் தாட,
விருப்பொடு முரசொலி வெற்றியை விளக்க,
நாற்கடற் றானை நாகமன் றோள்வலி
தோற்புற் றணுய்த் துவண்டு நிற்ப,

இன்றுநீ பெற்ற வியம்பரு வெற்றியைக்
குன்றிருந் தாங்கு குறிப்புட னேக்கினன்!
கண்டவா பகர்ந்தேன், காவல!வுன்னை
மண்டலம் பரந்த வான்புகழ் சேர,
எண்டிசை மதிக்கு மிறைவ!
அண்டின னென்னை யம்புயப் பொன்னே!

கச்சிப்புல. (விசுவநாதனைநோக்கி)
கவித்திற முடையார் கல்விமிக் குடையார்,
புவிக்கொரு திலக! போரிடைக் கண்டநின்
னாற்ற லனைத்து மழகுறப் பாடினர்;
ஏற்றன வியானு மிருசெவிக் கமுதாய்;
தானியுப் பாடித் தரியலர் மேற்செல
வேனைய வாகையு மெழிலுறப் பாடினர்;
ஆதலிற் புலவ ரருளிய மாலையைக்
காதலித் தவரைக் கண்ணியஞ் செய்க.

விசுவ. (புன்னகை செய்து)
புனைந்தனை மாலை, புகழ்ந்தனை பெரிதா?
அனந்தனி லறிவு மருங்கவித் திறனும்
பெற்ற பெற்றியாற் பேசினை; யென்பா
லுற்றதோ வென்னில்; ஒருசிறி தில்லேன்!
மதுரமே பெருக மனத்தினைக் கவர
இதமுற வந்திங் கின்னிசை பாடினை;
கேட்டனன், நாளுங் கேட்பக்
கூட்டுற வாகக் கூடி வாழ்கவே!

(சேவகர் வெளியேநிற்ப மற்றவர்பாசறைபுக)

களம்—3 முற்றும்.

## களம்—4.

இடம்—பாண்டியன் கோலுமண்டபம். காலம்—காலை.

[விசுவநாதன், அரியநாதன், நாகமன், சந்திரசேகரபாண்டியன், குணவீரவர்மன், சோக்கலிங்கன் முதலானவர்கள் தம்தம் ஆசனத்தில் முறையே வீற்றிருப்ப.]

நேரிசையாசிரியப்பா.

விசுவ. (எழுந்து நாகமனைப்பணிந்து)
எந்தையே! யித்துணை யேதிலார் போலுன்

சிந்தை புண்படச் செய்தன பொறுப்பாய் ;
அரச னாணையு மறநெறித் துணிபும்
விரதமாக் கொண்டேன் ; வினைப்பயன் கொடிது !
சிறப்புற விருத்திச் சேவடி பணிந்து
பிறப்பித் தவனைப் பெரிதுறப் பேணுஞ்
செய்தவ மிழந்தேன் ? சிந்தையு நொந்தேன் ;
கொய்யுளைப் பரியினங் கொணர்ந்தநா ளொருவன்
கூறிய பொய்க்கதை கூடிய தென்பால் !
ஏறலை தவழு மிருங்கடற் றுறைசேர்
நகரமொன் றதனில் நாய்கரி லொருவன்,
பகர்விலை தனக்குப் பண்டம் விற்பவன்,
அன்னவன் றனயன் அருங்கலை பயின்றோன்
மன்னவன் சுல்தான் மனத்தினில் மகிழ்ந்து
தன்னகர் நீதியந் தலைவர்க் குதவி
இன்னவை னாகென விசைந்தவன் ; ஒருநாள்
பட்டினம் புகுந்து பற்பல வணிகர்
கட்டளைக் கல்லையுங் கைத்துலைக் கோலையும்
முத்திரைப் படியையு முழக்கோல் தன்னையும்
[illegible]ய்த்தறிந் தேகினன் ; ஒருசா ரமர்ந்த
தந்தையை நோக்கித் ‘ தனயனே யாமெனச்
சிந்தை செய்திடேல் செய்திற முணர்வான்
ஆதலின் முகந்த ளத்தற் கருவிகள்
ஏத முறுதன வேற்றிடு வா’ யெனப்
பக்கத் துள்ளார் பகர்தரு காலையில்,
நக்கனன் வணிகன் ; நணுகினன் புதல்வன்,
வாம்பரி யிழிந்து வந்தவன் கடையி
லாம்பல கருவிக ளாய்ந்தனன் ; பிழையெனக்
கண்டனன், சிந்தை கலங்கி யவற்குத்
தண்டனை விதித்தனன் ; ‘ தரும தேவதை
தந்தைதா யெனவுந் தன்கிளை யெனவுஞ்
சிந்தை செய்யுமோ ? சிறிதுந் தன்னிலை
தவறுமோ ? தந்தை ! தாளிணை பணிந்தேன் ;
எவரை யாகிலு மிப்பணிக் கிறைவன்
ஏவிலன், இத்துய ரிட்டன னென்வழி !
ஆ ! விதி தன்னை ஐயநீ பொறுத்தருள்,’

என்று தொழுதனன் ;—எனது நிலைமையும்
இன்றது சான்றதால் ! என்பிழை பொறுப்பாய்.

நாகம. மைந்த ! நீ வருந்தல் ; வாய்மை காத்தனை ;
உந்தையைக் காய்ந்ததா வொருவரு மேசார் ;
ஆண்டு முதிர்ந்து மாசைப் பெருக்கால்
ஈண்டிறை யாணையை யிகந்தனன் ; நீயோ
தாங்கினை ; தவறுந் தாய்மொழி தள்ளினை ;
பாங்குறு மரிய நாதன் பகர்ந்த
நன்மொழி கொண்டிலேன் ; நாத நின்செயல்
நன்கெனக் கொள்ளு நானிலம் !

ஜீவரா. நாகம!
பிழைசெய லியற்கை! பின்னது நினைந்து
குழைவுறு வாரேற் குற்றந் தவிர்ந்தார்
மாந்த ரென்றே மாநிலங் கூறும்!
ஏந்தலுங் காட்ட வியற்றிய வினைதான்
தீதெனக் கண்டனை, தெரிந்த தன்மையால்
கோதற மகன்றது; கொற்றவன் பொறுப்பான்!
ஆதலி னின்னக ரரசா மிவரை
யாதன மேற்றி யமைவன செய்து
பெருமையோ டெழுந்து பெருநகர்க் கேக
வொருமையா யுன்னுதும்.

நாகம. (பாண்டியனை நோக்கி) ஒளிமணிப் பூணினாய்!
சிறியேன் செய்த சிறுபிழை யாவும்
பெரியோய் பொறுத்தி!

சந்திர. பெறலரும் புதல்வனைப்
பெற்ற பெற்றியோய்! பிழைநீ செய்திலை.
உற்றதை விலக்க வொருவரா லாகுமோ?
என்விதி யென்றே யெண்ணுத லொழித்து
நின்வயி னிகழ்ந்த நியாய முளதோ?

விசுவ. (அரியநாதனை நோக்கி)
அருமைத் தோழ! அகன்பொழில் சூழ்ந்த
விரிசடைப் பெருமான் விளங்குங் கூடல்
நகரணி செய்து, நல்லதோர் நாளில்
தகைமைசா லரசைத் தமனியப் பீடந்
தன்னி லமர்த்தித், தாரணி மன்னவர்

மன்னவன் மகிழ மணிமுடி கவிப்பான்
கருதினன், கருதிய காரியங் கைவரத்
தருதிமன் னவற்குத் தக்கதோர் துணையா
யமைந்திவ ணிருத்தி, யணிநகர் நோக்கித்
தமருட னேகுவன் தாழ்க்கிடல்.

அரிய. நம்ப!

அன்னதே செய்கை! யாற்றுவன்
மன்னவர் மன்னனை மாநிலந் தொழுமே!

களம்—4. முற்றும்.

## களம்—5.

இடம்—விஜயநகரம், கன்னிமாடம். காலம்—எற்பாடு.

(காஞ்சனையும், மதிவிலாசனியும் கழல்விளையாடிப்பாட.)

ஆசிரியத்தாழிசை.

காஞ்ச. உலகுறு முயிர்கண்மே லொறுத்திடு மவுணர்க
ணிலையுறு ரரன்முன்னென் றூடாய் கழல்
நிலையுறிற் றுஞ்சுவரென் றூடாய் கழல். (1)

மதிவி. துஞ்சினு லென்னையவர் தொல்குலக் கிளைக
ளெஞ்சலி லெழுந்திடுமென் றூடாய் கழல்
இத்தகைய ரேதிலரென் றூடாய் கழல். (2)

காஞ்ச. தன்பகை யவர்பொருது சாடினுங் கருத்துறு
மன்பர்க் கெளியவனென் றூடாய் கழல்
அண்டங் கடந்தானென் றூடாய் கழல். (3)

மதிவி. நண்ணார்க் கிடர்புரிந் தாகிலுந் தனையெவர்
நண்ணினு மருள்பவனென் றூடாய் கழல்
நாடுகள் புரப்பானென் றூடாய் கழல். (4)

காஞ்ச. முண்டகக் கண்டிறந்து முப்புர மழற்படப்
பண்டுநின் றூடினனென் றூடாய் கழல்
பாரியை தனக்கிதனென் றூடாய் கழல். (5)

மதிவி. பற்றல ரிரிந்துபாத பங்கயம் பணிந்திட
வெற்றிபூண் டிட்டானென் றூடாய் கழல்
விச்சுவ நாதனென்றே யாடாய் கழல். (6)

### நேரிசையாசிரியப்பா.

காஞ்ச. (பெருமூச்செறிந்து)
ஏதடி! மானே! எவர்பெய ருரைத்தனை!
போதடி புனைந்தும் போதினு னருளிலன்!
புங்கவன் மனத்திற் புக்கிருந் தவனும்
எங்கரம் பற்றிலன், ஏழையேன் விதிவசம்
எப்படி யிருக்குமோ? எந்நிலை யறியேன்.

(தனது மலர்க்கரத்தால் மதிமுகத்தை மறைத்துத் தேம்பியழ.)

மதிவி. செப்படி! யெவர்பெயர் செப்பினன் பேதை!
கைவளை கழன்றது! கருங்குழல் சரிந்தது!
மெய்வியர்ப் புற்றது! மின்னிடை மெலிந்தது!
மேனி பசந்தது! மெல்லவே யுன்னிறை
மானமுங் கவர்ந்து மனத்தினிற் கரந்த
கள்வனு ருரையாய்?

(மூர்த்தியம்மனும், கிருஷ்ணதேவனும் உள்ளே பிரவேசித்தோதுங்கிநின்றுரையாட.)

மூர்த்தி. கன்னிதன் னுளத்தி
னுள்ளுறை காதல னொருவனைச் சொல்லெனக்
கேட்டோர், வருக! கிஞ்சுகச் செவ்வாய்
வாட்டடங் கண்ணி வார்த்தையா லறிதிர்!

கிருஷ். இவண்மறைந் திருப்பேன்; ஏழைநீ முன்னரே
இவள்கருத் திசைத்திலை!

மதிவி. (காஞ்சனையைநோக்கி) எழுதரு மேனியாய்!
வஞ்சித் திதுவரை மறைத்து வைத்தனை!

காஞ்ச. (நெடிதுயிர்த்து)
வஞ்சியே! நெஞ்சுறை வள்ளலை யுணர்கிலை!
மன்மத னழகில்! மதியினிற் சிறந்தோன்!
என்மனத் தெழுந்த வெழிலார் கற்பகம்!
எளியவர்க் கிரங்கி யின்னருள் புரிவோன்!
களிறெனத் தகையன்! கல்வியிற் பெரியன்!
ஆற்றலின் முருகன்! ஆடவர் திலகன்!
மாற்றமென் னுரைக்கேன்? மதிவிலா சனி! நீ
எவையெவை கூறினு மென்மனத் தெழுந்தார்க்
கவையவை பொருந்தும், அணிவளைத் தோழீ!

நாதனர் பெயரை நங்கையர் நவில்வரோ ?
ஆதலி னவரே யார்வலன் ! (வெள்கித்தலைகுனிய)

மதிவி. விசீவ

நாதனர் பெருமையை நவில வொண்ணுமோ ?
காதல னவனே ! கலந்து வாழ்க !

காஞ்ச. (மிகுந்த ஆர்வங்காட்டித் தோழியைக்கடைக்கணித்து)

அவரையே மணக்கு மரும்பெரும் பாக்கியந்
தவறு தெய்துமோ ? தையலே மலர்மகள்
இன்னரு டருமோ ? எனக்கு
மன்னவ னன்றி மணமக னெவனே ?

விருத்தம். (சோர்ந்து தரையிற்சாய)

மூர்த்தி. வெங்கமத் தழல்படிந்து வேகின்ற பசுங்கொடியே விழைவே யெங்கள்
மங்காத செல்வத்துக் குறைவிடமே மாதரசே மணியே பொன்னே
இங்காரும் புகழ்ந்தேத்து மேந்தலையே மணந்துநல மெய்தி நாளுஞ்
சிங்காரம் படைத்துலகிற் றிருமாலுந் திருவுமெனச் சேர்ந்து வாழி.

(என்றுகூறித் தன்தோழியைத் தரையினின்றெடுத்துத் தழுவினள்.)

மதிவி. நேரிசையாசிரியப்பா.

மூர்த்தி ! யேதடி ! மொய்குழல் சோர்ந்தனள்,
வேர்த்த முகத்தாள், வேதனை யொழிந்து
காய்கன லடங்கக் கன்னியை
ஆய்மலர் தூவிய வமளிசேர்த் துவமே !

(மூர்த்தியும், மதிவிலாசனியும் காஞ்சனையை யெடுத்துச்செல்ல.)

நேரிசையாசிரியப்பா.

கிருஷ். (தனியே)

அறியா திருந்தே னழகியின் காதல் !
வெறியார் மாலையன் விச்சுவ நாதனை
விரும்பினள் ; விரும்பிய விருப்பின் படியே
பெருமண முடிப்பன் ; பெருந்தகை சாலவும்
ஏற்ற முடையோன், எழிலோன் ;

ஆற்றலு முடையோன்; ஆரவ னிகரே?
(வெளியேசெல்ல)

களம்—5. முற்றும்.

## களம்—6.

இடம்—விஜயநகரம். இராஜசபை. காலம்—காலை.
[கிருஷ்ணதேவன், சாலுவதிம்மன், அச்சுதன், இராமராஜன், குரு பக்க, சபையோர்கள் முறையே தம்தம் ஆசனத்தில் வீற்றிருப்ப.]

நேரிசையாசிரியப்பா.

கிருஷ். அவையீர்! கேண்மின். ஆணைமேற் கொண்டு,
சுவைமதுத் துளிக்குஞ் சோலையிற் றும்பி
தமிழினைப் பாடுந் தமிழகஞ் சார்ந்து,
சுமையுட னிருந்த காவலற் கரசைத்
தந்து, தன் றந்தையைத் தன்னுடன் கொண்டு
வந்தனன் வாகை மாலை மார்பன்;
நாத னிங்ஙன் நாகம மீளூடும்
போதரும். அவர்கள் போதரு காலையில்,
நாகம னிழைத்த நவையினைக் கருதா
தோகையி னெழுந்துநல் லுரைகளைப் பகர்மின்.
அன்னவ னிடத்தி லற்றமென் சீற்றம்!
(விசுவநாதன், நாகமன், ஜீவராய் உள்ளேவர)
இன்னே வந்தனர்—எழிலார் தடக்கை
நாத! வருக! நாகம! வருக!
ஏதங் களைந்த விராயநீ வருக!
(மூவரும் கிருஷ்ணதேவனை வணங்கிநிற்ப)
என்னுரை யிகவா தெழுந்துமேற் சென்று
தென்னவ னுரிமை திருத்திய தீர!
அழகினின் மதன! அறிவினிற் சேட!
இழைத்திடுங் கைம்மா றென்னுள தம்ம?
இவனை நன் மகனு யேற்றிடச் செய்த
தவமே பெரிது! தானையின் றலைவ!
இவனுறு மாதனத் தினிதி னமர்க!

நாகம. பவத்தொழில் புரிந்தேன்; பார்த்திவ னாணையைக்

கடந்தவ னேனென் காவல ரவையி
லிடந்தரப் பெறுத லேற்குமோ?

கிருஷ். நாகம!

சென்றது கருதேல்!

நாகம. செய்தது பொறுத்தி!

இன்றடி பணிந்தேன்! எளியேன் மனமிக
நொந்தனன். ஐய! நோதலைத் துடைத்தி.

கிருஷ். சிந்தையிற் கவலை சிறிதுங் கொள்ளேல்?
பன்னெடுங் காலம் பழகினன்; பகையை
உன்னுடை வலியா லொழித்தனன்; உயர்ந்தேன்;
அத்துணை நன்மையை யறியா திருப்பனோ?
இத்துணை யெளிமை யிசைத்தனை வீர!
இன்னருள் வேண்டினை; யென்னுற வளித்தனன்.

குருபக்க. இன்னருள் புரித லிறைமகற் கியற்கை
என்பதற் கேற்ப வின்னுரை கூறினை;
நின்னருள் வாழி! நேயனும் வாழி!

தீம்ம. நேயனுந் துன்னலர் நேர்ந்த காலையில்
ஆயநற் றுணைவனு மரும்போர் முனையிற்
சிங்கவே றன்ன சிறந்த தலைவனுந்
துங்கபத் திரையுந் தூர்க்கையு நாண
நகரங் காக்கு நற்றொழி லுடையனும்
புகழ்தரும் புண்ணியப் புதல்வனைத் தந்த
தந்தையு மான தானையின் றலைவ!
சிந்தையிற் றவறிச் செய்த பிழைதனை
இன்றே மறத்தி; இறைவ னருளினன்;
நன்றே! தவிசில் நாகம வமர்க!

அச்சு. (நாகமனை ஆசனத்திலமர்த்தி)
பிழையெனப் படுமோ? பெரியோய்! புதல்வன்
தழைவுறும் புகழைத் தரணிகொண் டாடச்
செய்தனை; யிழிவு செய்ததாக் கண்ணீர்
பெய்தனை; நின்செயல் பிழையெனப் படுமோ?

இராம. வழங்குறு கலங்களில் வண்புனல் வார்த்து
அழுக்கினைப் போக்குத லவனியோர் செய்கை!
அன்னது நிகர்ப்பவிவ் வாண்டகை குறையைத்

துன்னுகண் ணீரினூற் றுடைத்தன னவையீர்!

கிருஷ். (சிம்மாசனம் விட்டிறங்கி நாகமனைத் தழுவி.)
என்னுயிர்த் தோழ! வெழுந்தியா மேகித்
துன்னுதுங் கதிரவன் சுடர்களைத் துரத்து
நிழலுந் தண்மையு நிலவிய சோலையின்
சூழலில்; பகருஞ் சொற்களுக் கினிய
மாற்றங் கூறுக; வனிதை சாஞ்சனைக்
(சபையோர்கள் எழுந்துநிற்ப.)
கேற்ற நாயக னெய்தினன்; அவளும்
அணங்கினுக் கணங்காம், அழகினுக் கழகு;
குணங்களுக் குறைவிடம், கோலமார் வஞ்சி,—
கடிமணஞ் செய்யுங் காலமு மெதிர்ந்தது;
மடவரற் கேற்ற மணமகற் றேடுதல்
நம்பெருங் கடமை; நாகம! நினைந்து
வம்பவிழ் சோலை வழியே செல்லுதும்!
திம்ம! நீ வருக!

இராம. திருவுளப் படியே
அம்மணிக் கானவோ ராடவ னமையும்!
(கிருஷ்ணதேவன் திம்மன், நாகமன் இவர்களுடன் வெளியேசெல்ல.)

குருபக்க. இளமை தொடங்கி யிந்நாள் வரையும்
உளப்பிணிப் போடு மொற்றுமைப் பட்டாள்,
ஆடலும் பாடலு மருங்கலைப் பயிற்சியும்
ஏடவிழ் மலர்ப்பொழி லினிதுலாந் தன்மையும்
ஒருங்குடன் பெற்ற வொண்டொடி நல்லாள்;—
இருங்கலை விநோதன் எழிலார் நாதன்
தன்னையே யல்லால் தரணியி லெவரை
யுன்னுவ ளுதனுய்? உலகம் புரக்குந்
தேவனு மிதனைத் தெரிந்து நன்மணம்
யாவரும் விரும்பி யாணர் நன்னகர்
வீதியிற் றோரணம் விழைவுடன் பொருத்தி
வேதிகை திருத்த விரைவினின் முடிக்கக்
கருதினன் அவையோர் கருத்து மன்னதாம்;
குரிசில்! உன் கருத்துங் கூறுக!

அச்சு. பெரியோய்!
என்னருந் தோழ னேற்றமிக் குடையோன்
நன்னலந் திகழு நங்கையை மணக்க
வேண்டு மென்றே விரும்பின னெடுநாள் ;
ஈண்டுரை தந்தீர் ; என்மனங் களித்தேன் !

பக்க. அவையீர் ! கேண்மின் ! அவனிகா வலவன்
அவிரிழை நங்கையை யாண்டகை நாதற்
கெழின்மணம் புரிய விசைந்தனன் ; அவ்வுரை
வழங்கென,மகிழ்ந்துரை வழங்கினன் ; நீவிர்
களிப்புட னுங்கள் கடிமணம் போலத்
திளைத்துள மகிழ்ந்து திருமணங் காண்க !

அச்சு. (விசுவநாதனை நோக்கி)
நாதனே ! வருக ! நாமும்
போதுலாம் பொங்கரிற் பொழுதுபோக் குவமே !

(சபைகலைய.)

களம்—6. முற்றும்.

---

## களம்—7.

இடம்—பூங்காவனம். காலம்—எற்பாடு.

(அச்சுதனும், விசுவநாதனும் பளிங்குமேடையிலிருந்து உரையாட)

அச்சு. நேரிசையாசிரியப்பா.
நாத ! நண்ப !—நவிலு மென்மொழி
ஏதடா ! நின்செவி யேறிடக் காணேன்—
தனிமையி லிருந்து தன்னுளத் துடனே
இனிமையிற் பேசி யிருக்குந் தருணம்
இதுவே யாதலின், ஏகு கின்றனன்!—

(அச்சுதன் பிரிந்துசெல்ல)

விசுவ. (தனியே)
மதிநிகர் முகத்தாள் மதுரமென் மொழியாள்
முத்தநேர் முறுவல் முருக்கிதழ்ச் செவ்வாய்
நத்தினை யொத்த நகுமணி மிடற்றாள்
செவ்வரி படர்ந்து சேலினை மருட்டிப்
பவ்வமே சாலும் படைநிகர் கண்ணாள்

நங்கை காஞ்சனை நந்தாக் காதல்
பொங்கிடவென்னைப் பொருட்டாக் கருதினள்!
பாக்கியம் படைத்தேன்! பாவைபா லெனக்கும்
ஆக்கிய காத லமைந்துள தாயினும்,
வாக்கினாற் புலப்பட வார்த்தை கூறிலன்;
நோக்கினாற் குறித்திலன்; நுவலருங் காதல்
தன்னிலே வளரத் ததும்பி நின்றனள்;
கன்னியின் மனதைக் கவர்ந்திடற் கான
இங்கிதங் காட்டி யிருப்பனேற் குற்றந்
தங்கு மென்வயின்; தையலோ டென்றும்
அத்தகை நடந்தில னாயினும், அவளுக்
கித்துணை யார்வ மியற்கையி னமைந்தது!
அங்கனை யன்பினா லார்க்கப் பட்டனன்!

(மூர்த்தியுள்ளேவந்து)

மூர்த்தி. பொங்குதேன் பொழியும் பொலந்தார் மார்ப!
பங்கய மலர்த்திப் படியினிற் புதுமையாய்
இங்கொரு கதிரவ னேகினன் கொல்லோ?
தலைவியின் மனதைத் தன்னுடன் கவர்ந்திவ்
விலைமரப் பொதும்ப ரிடைவெளிச் சென்ற
கள்வ னொருவனைக் கண்டனை கொல்லோ?
புள்ளிமா னன்ன பொற்றொடி வருந்த
எயினர் பதியென வேவினைச் செலுத்தியிவ்
வயினொரு மதனன் வந்தனன் கொல்லோ?
பெண்மைக் கிரங்கும் பெருந்தகை! யென்பால்
உண்மையைப் பேசுக!

விசுவ. ஒன்று மறியேன்;
இவ்வழி யொருவரு மேகிடக் காண்கிலன்;

மூர்த்தி. எவ்வம் படைத்தென் னேழையை வருத்திய
கள்வனைக் கண்டேன்! கள்வனு நீயே!—
புள்விளை யாடும் பொங்கரி னின்றனை;
உருவினு மொத்தனை, யுள்ளுறை வஞ்சனை
திருமுகந் தோற்றத் திருடனி னின்றனை,
கார்முகத் தழும்புன் கைத்தலங் கண்டனன்!
வார்குழற் றலைவிமுன் வம்மின், உண்மை

விட்டினிச் செல்லேன் !

விசுவ. விளங்கிழை ! பழித

னிட்டனை, யினியெனக் கிளமான் விதிக்குந்
தண்டனை யெதுவோ?

மூர்த்தி. தன்னரு வன்பாந்

திண்மையி நிட்டுச் சிந்தையாஞ் சிறையில்
வைத்துனக் கென்றும் வார்த்தையா முணவைப்
பொய்த்திடா தளிக்கும் ! போதுக !—

(காஞ்சனைபிரவேசிக்க)

தலைவியும்

வந்தனள், அம்ம !—மார ! நீ மங்கையின்
சிந்தையிற் படுதல் செவ்விதே !—செல்வன்,

(மூர்த்தி வெளியே செல்ல.)

காஞ்ச. கருங்கலோ மனமும்? கருணைதா னிலையோ?
அருங்கலை பயின்றும் அழகுறப் பொலிந்தும்
நற்குணம் படைத்தும் நாடொறும் பழகியும்
எற்குறு காதலை யிவர்தரச் செய்தும்
உனையலா தொருவ னுறுதுணை வேண்டா
நினைவெனக் கருளியும் நெடுநாட் காதலை
வெளிப்படை குறிப்பின் விளம்பிய தையலைக்
களிப்புறச் செய்யாக் கைதவங் கொடிது !

விசுவ. வேந்தன் புதல்வியே ! விளைதருங் காதலை
ஈந்தன னென்றாய் ! இடையறாப் பழக்க
நேர்ந்ததை யன்றி நேரிழை யறியேன்
சார்ந்ததோர் குற்றம்; தையலே ! யுன்றன்
தந்தையு முனக்குத் தகுமணம் முடிக்கச்
சிந்தை செய்தொரு செங்கோ லுரிமைச்
சிறுவற் களிப்பன் !

காஞ்ச. செங்கோ லுரிமைச்

சிறுவ னெவனே, சிங்கவே றனையாய் !
நின்பொருட் குரியோன் ?

விசுவ. நிலமுழு தாளு

மன்னவன் செல்வி ! மன்னவர் குலத்திற்
பிறந்து வளர்ந்தனை; பெரும்புக ழரசரிற்

சிறந்துளோ ரொருவனைச் சேர்ந்திட லன்றி
எளியனை மணத்த லேற்ற மாகுமோ?
ஒளிமணி மாலை யுயர்முடி மன்னவன்
விதித்த வழியின் மெல்லியல்!
மதிதனைச் செலுத்தின் மனை யெய்துமே!

காஞ்ச. (புன்னகைசெய்து)

நேரிசையாசிரியப்பா.

நண்பரா நாதர் நடுநிலை பகர்ந்தார்,
பெண்பா லிரங்கிப் பெருமதி யுரைத்தார்;
சீரினைச் செய்யுந் திருவும்
பார்த்திவர் தன்மையும் பகர்தரக் கேண்மினே!

நேரிசையாசிரியப்பா.

திருவெனத் தகுவது திருவளர் புயத்தோய!
ஒருவழி நில்லா தோடுஞ் சகடம்;
விழியினைக் கட்டி விளையாட் டயருந்
தொழிலினோர்க் குறுபொருள்; தொடுகடற் றவழும்
வெண்டிரை; ஆதலின், வேந்தே!
உண்டுகொல் நிலைதான்? உள்ளந் தெளிகவே!

நேரிசையாசிரியப்பா.

பார்த்திவர் தன்மை பகரக் கேண்மோ,
பார்த்திவர் வியக்கும் பல்படை விநோத!
நகரமுஞ் செல்வமு நண்ணார் கைக்கொளப
பகருநந் துன்பம் பற்றினர் திரிந்தார்,
பொன்முடி துறந்தார், போர்க்களத் தவிந்தார்,
மன்பதை யொறுக்க மாண்டனர், விடத்தால்
மாய்ந்தனர், ஆதலின், மன்னவ,
ஆய்ந்தறிந் திதனை யகத்திற் றெளிகவே!

நேரிசையாசிரியப்பா.

ஆதலி னரசு மாக்கமும் பிறவும்
போதக மனையாய் புற்புத நிகர்க்கும்!
அன்னவை வேண்டேன், ஐய! நின் காதலி
என்னவே மாநிலம் இசைக்கும் பாக்கியம்
ஒன்றையே வேண்டினன், உதவி புரிக.

விசுவ. மன்றலங் கூந்தன் மங்கையர் திலகமே!
உன்பிதா வொருவற் குவந்தளிப் பானேல்,
என்படு முள்ளம்? ஏழைநீ நவில்வாய்!

காஞ்ச. எறிபுனற் படுவனே! எரியிடைப் புகுவனே!
பிறிதொரு வகையாற் பிரிப்பனோ வாவி!

விசுவ. பேதை! நீ கொண்ட பேதுற லொழிக!
தாதை யெனக்கே தருவதா யெண்ணினன்!
பாவையே! யுன்றன் பணிதலைக் கொள்ளுஞ்
சேவக னாயினன்!

காஞ்ச. சேவக னீயோ?
என்பெருந் தலைவ! என்பெருஞ் செல்வ!
என்பெரு முயிரே! என்பெருங் காதல!
என்பெரும் பிறப்பே! என்பெரு மரசே!
என்பெருமுடலே! என்பெரு மனமே!
என்பெரு மதியே! யிருவரின் னுயிரும்
ஒன்றெனச் சேர்ந்ததோ ருயர்மணங் கண்டோம்!
ஓருயிர்க் கிரண்டுட லுற்ற ததிசயம்!

[மூர்த்தியம்மன், கிருஷ்ணதேவன், குருபக்க, நாகமன், திம்மன் இவர்கள் அங்கேவந்து நாதனுடன் நின்ற காஞ்சனையைக்கண்டு.]

கிருஷ். காரிகை வாழி! காதலன் வாழி!

நாகம. நங்கையும் வாழி! நாதனும் வாழி!

ஏனையோர். மங்கையு நாதனும் வாழி! நீடூழி!

குருபக்க. (தனியே)
காதலன் காதலி களித்ததைக் கண்டு
ஆதரத் தமர ரலர்மழை பொழிக!
கான மெழுக! காவுந் தளிர்க்க!

(தேவர்பூமழை சோரிந்து கானஞ்செய்ய.)

நாகம. வானகத் திருந்து மலர்மழை பெய்ததும்
இன்னிசை யெழுந்தது மிசைப்பரும் விந்தை!

குருபக்க. கன்னி தனக்கிசை காதல னென்று
விண்ணவர் தாமும் வியந்தனர் போலும்!

(மூர்த்தியம்மன் ஒருசார்மறைந்துகோள்ள, மற்றவர் வெளியே செல்ல.)

விசுவ. (தரையிற்கிடந்த ஒரு மலரையேந்துக் காஞ்சனைக்குத் தந்து.)

கண்மணி! யிம்மலர் கற்பகக் காவிற்
பூத்த நறுமலர்; பொலிவினைப் பாராய்!

காஞ்ச. ஏத்தரும் புகழோய்! இனிதிற் செல்லுதும்
நித்தில மாலைக ணிலவிய
பத்தியிற் குயிற்றிய பன்மணி மாடமே!

(இருவரும் வெளியேசெல்ல.)

மூர்த்தி. [காதலன், காதலியிருவருக்கு நிழலைத்தந்த பூங்கொம்பருக்குத் தனது முத்துமாலையைச் சாத்தி.]

நேரிசையாசிரியப்பா.

அலர்தனைத் தாங்கி யசைந்திடுங் கொம்பே!
உலகினி லிவர்போ லொருமனப் பட்டார்
அரிதெனக் கண்டுநீ யசைந்தலர் சொரிந்தாய்!
பெரிதென மாலையைப் பேதையே னளித்தேன்!

(மதிவிலாசனியுள்ளேவந்து.)

மதிவி. என்னடி! பேதை! யிம்மலர்க் கொம்புடன்
பன்னு கின்றனை பலபல மொழிகள்!
அனைவரு மிப்பக லதிசய முற்று
நினைவொரு நிலையி னின்றிடா ராகிக்
களித்திடற் கான காரிய மென்னை?

மூர்த்தி. களித்திடுங் காரணங் காரிகை கேளடி!
காதலிற் காவலன் கன்னியை
நாதனுக் களிக்கு நாளைநன் மணமே!

ஆனந்தக்களிப்பு.

நல்ல மணமிது பெண்ணே!—சகி—
நாதனை யேபதி யாகப் பெருமணம். (நல்ல)

காமப் பெருங்கடன் மூழ்கி—உறு—
காசினை வீசியே கன்னியைத் தேடிப்
பாமரர் செய்மண மென்னே?—புகழ்—
பாரக மேவப் படைத்தவன் செய்மணம். (நல்ல) (1)

மங்கை தனக்குயர் செல்வம்—வர—
வாஞ்சையிற் றேடி வரித்திடு மங்கலம்

மங்கல மாகுமோ? மாதே!—மட—
மானையிம் மன்னவன் மாலையி டும்மணம். (நல்ல) (2)

மன்மத னழகினி லென்று—மண—
மகளேயோர் வினேத் தேடி மடுத்தல்
நன்மண மோ? புகழ் மன்னன்—மக—
ளுதனை நாளை நயந்திடு மாமணம். (நல்ல) (3)

படித்தவ னென்று தேடி—ஒரு—
பண்பு மிலாவெறும் பேதையை நாடிக்
கொடுப்பதோ நன்மணம்? சேடி!—யெழிற்—
கோமக ளைப்புகழ் மாமகன் செய்மணம். (நல்ல) (4)

உள்ள மொருநிலை கொண்டு—முயர்—
செல்வமுங் கல்வியு மொத்திடக் கண்டுங்
கொள்ளுந் திருமணம்! பண்டு—பயில்—
கோதில் தவமேவர் கூடின துண்டு. (நல்ல) (5)

(இவ்விதம் இருவரும் ஆனந்தக்களி யாடி வெளியேசெல்ல)

களம்—7. முற்றும்.

---

## களம்—8.

இடம்—விஜயநகரம். இராஜவீதியிலுள்ள ஓர் மாளிகையின் நிலா முற்றம். காலம்—மாலை.

நேரிசையாசிரியப்பா.

மதுரைப்புல. (தனியே)

கார்வளர் சோலைக் கன்னிநன் னாடும்
வார்புனல் பரந்த வளவன் பதியும்
கண்டிவண் வந்தேன்; கனக மாடமும்
விண்ணொடு நிவந்த வியன்மதிற் காவலும்
பற்பல சிறப்பும் பயிலுமிந் நகர்க்கு
விற்பன ருவமை விளம்ப லாகுமோ?
இந்நகர் தன்னி லிருந்தநாட் சிலவே!
பன்னெடு நாளிற் பாருளோர் காணும்
காட்சி யனைத்தையுங் கண்டன னாதலின்,

மாட்சிமை மிகுந்த மாநகர் பலவும்
திரிந்து நோக்குதல் திருத்திடுங் கருத்தை
விரிதரச் செய்யும் விளக்கமில் மனதை
நாற்றிசை மாந்தர் நடையுடை யொழுங்கையும்
போற்றிடு வழக்கையும் புலப்படக் காட்டி
அறிவைப் பெருக்குமென் றன்றோ ரருண்மொழி
சிறிதும் பிழைபடாச் செயலினை யறிந்தேன்;
ஆடவர் திலக னரும்பெற லங்கையை
ஆடகத் தொடியணி யன்னமெல் லியலை
மனைப்புரி செய்கையின் மாநகர்க் கெழுந்த
தனிப்பெறு மறைகையைச் சாற்றுவ தரிதாம்!
பன்மணி யிழைத்த பவளக் காணிறீஇ
மின்படக் குயிற்றிய விதானமண் டபத்தின்
நாப்ப ணமைத்த நருமணித் தவிசில்
காப்புடன் றிகழுங் கன்னிகாஞ் சனையை
நானிலம் புகழு நாதன் றனக்கு
வானவர் வாழ்த்த வன்னிமுன் பாக
நறும்புனல் பெய்து நயந்து தந்தனன்;
உறுங்கிளை மகிழ்ந்தார்; உத்தமர் வியந்தார்;
மங்கல வாழ்த்தொலி மங்கையர் பாடச்
சங்கினம் பொங்கத் தனித்தனி பல்லியம்
சுறங்கின; அவ்வயிற் காவலன் களித்து
மறையவர் பாணர் வண்கவிப் புலவர்
ஏழையர் பலரு மின்புற நிதியறைத்
தாழ்திறந் திட்டவர் தாமே கொள்கென
விடுத்தனன்; கண்டதை வியநகர் மாந்தர்
கொடுத்தனர் தாமுங் குறைவிலாச் செல்வம்;
இன்னுரை கூறிய ஏழையர் தமக்குப்
பொன்மணி யாரம் பூண்மினென் றளித்தார்;
நெய்யுடன் பருப்பு நெகிழ்ந்த வுண்டியுந்
தெய்வவெண் மதியெனத் திகழ்தயிர் பெய்து
வெண்ணெயுங் கலந்து விளங்குவெண் சோறும்
பண்ணுறும் பலவிதப் பணியா ரங்களும்
இனிப்புறு கனிகளும் இறுவிழி பிரசம்
நனிசொரிந் திட்டு நன்மணங் கமழ்ந்த

பாயச வெள்ளமும் பாலடைக் கட்டியும்
வாய்ந்த வறுவலு மாங்காய் முதலிய
ஊறுகாயு முண்பவர்க் குள்ளம்
ஏறிட வுவகை யிருபிறப் பாளரும்
மற்றுளோர் தாமும் வயின்வயி னுகரப்
பெற்றன ராகிப் பெருமகிழ் வெய்தினர்;
சந்தனம் பனிநீர் தாம்பூ லாதிகள்
தந்தனர்; நறுமலர்த் தாமஞ் சூட்டினர்;
ஏந்தலுக் கெய்திய வின்பங் கண்டு
மாந்த ரியாவரு மனங்களிப் புற்றார்;
ஆடலும் பாடலு மமைந்ததிந் நகரில்.
ஏடவிழ் மாலை யிளைஞரு மேழையர்
தாமும் பெருங்களி தாங்குகின் றனர்.
ஏமம் படைத்தன விருங்களி யானை;
வாம்பரித் தொகுதி வாலுளை யசைத்து
மேம்படு மகிழ்வை விளக்கி நின்றன;
பாகருங் களித்தார்; பதாதியுங் களித்த;
வேகநல் லிரத வீரருங் களித்தார்;—
மன்னனைக் காணவும் மணவினைக் காணவுந்
துன்னின ரரசர்;—தொடுகடல் தவழும்
உரியநாட் டரசும் உறுபொருள் வணிகம்
புரியு மேற்றிசைப் போர்த்துகற் றலைவனுங்
கோலகுண் டாநகர்க் குட்புஷா தானும்
ஓலமார் கடல்சூ ழுதய கிரியின்
காப்புடைப் ப்ரதாப ருத்ர கஜபதி
மாப்புகழ் வீரனு மலயமா நாட்டுச்
சேரன் றிருவடிச் செம்மலுங் குன்றிற்
காருலாங் கொங்குறை காவலன் றானுஞ்
சந்திர கிரியின் றலைவனும் பொதியச்
சந்தனங் கமழுந் தண்டமிழ் வழுதியும்;—
குறுநில மன்னர் குழுவுங் கூடினர்.
குறமொரு முன்னர்க் கொண்ட நெடியவன்
அண்ட முறைதரு மணிவயி றொப்பக்
கண்டன னிந்நகர்; கருங்குழன் மாதர்
கார்வரக் கண்ட களிமயி னிகர்ப்ப

ஆர்வமுற் றனரா யணிபல பூண்டு
மணமக ளொப்ப மனமகிழ் வெய்தினர் ;
திணிதோட் கிருஷ்ண தேவ ராயனும்
சின்னா தேவியுந் திருமலை யம்மனும்
மன்னனச் சுதனும் மகிழ்வா தம்மனுஞ்
சுற்றமு மந்திரச் சூழ்ச்சிக் கிழவரும்
உற்றன ருவகை, உயர்மனை திருத்தினர் ;
பழமணல் போக்கிப் புதுமணல் பரப்பினர் ;
கழையினை நாட்டிக் கட்டினர் தோரணம் ;
வாழையுங் கமுகும் வயின்வயின் பொருத்தினர் ;
காழகிற் புகையைக் கமழ்தரப் போக்கினர்;
சுண்ணமு மலருந் தூவினர் ; தூண்டா
வண்ண விளக்குகள் வாயிலின் வைத்தார் ;
பூரண கலசம் பொலிதர வைத்தனர் ;
நாரியர் வீதியி னலனுறக் கோலம்
இட்டனர் ; நகர மெழிலுறப் பொலியக்
கட்டழ கமைந்த காஞ்சனை தன்னொடும்
பொலந்தே ரேறிப் புதுமணக் குரிசில்
நலமுற வில்வழி நகர்வலம் வருவன் :
ஆதலி னியானு மருங்கவிப் புலவன்
காதலன் கச்சிக் கவிவலா னுடனே
புகுந்து காண்பன் பொன்னொடு
நகுமணி மாட நகர்வலச் சிறப்பே !

வாழ்த்து—வெண்பா.

மங்கையுடன் வாழ்க மகப்பெறுக மாநிதியந்
தங்கிநலஞ் சூழ்கத் தரணியெலாந்—திங்கட்
குடைவளர்க நாதன்செங் கோல்பெறுக மாலை
முடிபுனைக பைம்பொன் முடி.

களம்—8. முற்றும்.

அங்கம்—4. முற்றும்.

# அங்கம்—5.

## களம்—1.

இடம்.—விஜயநகரம் வெங்கடவிலாஸம். காலம்—காலை.

[அச்சுதன், திம்மன், சகளராஜகுமாரன், விசுவநாதன், அரியநாதன், இராமராஜன், சின்னவெங்கடாத்திரி, ஜீவராய், சதாசிவராய் முதலானவர்கள் தம் தம் ஆசனத்தில் முறையேவீற்றிருப்ப].

நேரிசையாசிரியப்பா.

அச்சு. மந்திரத் தலைவ! மன்னவர் செருக்கைத்
தந்திரங் கொண்டு தகைந்திடு மாறு
தென்றிசை நாடித் திரிந்தநா ளிந்த
வென்றிசூழ் நகரம் விளக்க முற்றதோ?
மறையவர் நியமம் வழாஅது நடந்ததோ?
குறைவிலா வறங்கள் கூடின கொல்லோ?
நால்வகை வருணமும் நன்கா ஆற்றதோ?
கோல்வழி நோக்கிக் குடியமர்ந் தனரோ?
வானவ ருவப்ப மாமக நடந்ததோ?
தானமுந் தருமமுந் தழைத்தவோ? எங்கும்
மாமழை பொழிந்ததோ? மாநிலந் தளிர்த்ததோ?
கோமடி சுரக்கக் கொண்டதோ வமுதம்?

திம்ம. வெற்றிவே லிறைவ! வெங்கடாத் திரியின்
கொற்றவெண் குடையில் குவலய மெங்கும்
இன்பமே பொருந்தி யிருந்தது; மாநகர்
மண்டமை மகிழ்ந்துநல் வாழ்வு பெற்றனர்;
செல்வம் பெருகித் திருநகர் செழித்தது.

அச்சு. கல்விமிக் குடையீர்! காசினி புரந்த
அடியன் முன்னவன், அரும்பெறன் மகவாய்ப்
படிபுகழ்ந் திடவெனைப் பரிவொடு வளர்த்தவன்,
திருமுடிக் கிருஷ்ண தேவரு மன்னவன்
அரும்பதஞ் சென்ற வற்றைநா ளடைந்த
துயரந் துடைத்தெனைத் தாமுடி தாங்கி

உயரற நிறுத்தென, வுரைவழி நின்றனன்.
அன்ன காலையில், ஆயிரங் கதிரவன்
தன்னிலை யொடுங்கத் தமந்திரண் டென்னக்
குறுநில மன்னவர் குழுமிப் பரந்தனர் ;—
உறுபகை யடக்க வொருதனிப் படையுடன்
எழுந்தனன் ; சந்திர கிரிசென் றெய்தினன்,
தொழுதனன் வேங்கடம், தூய காளத்தி
மலையினை வணங்கி, மாயவன் விளங்குந்
தலமாம் விஷ்ணு கஞ்சியிற் றங்கி,
அண்ணு மலையா ரருளினைப் பெற்று,
நண்ணிய வேட்டுவர் நட்பினைக் கொண்டு,
கண்களி•யூட்டுங் காவிரி யாற்றின்
தண்ணெனக் குளிர்ந்த தடங்கரை மருவித்,
தரங்கமுத் தெறியுந் தண்புன லாறுசூழ்
அரங்க மாநகரை யடைந்து தங்கினன் ;
நாகமன் படையால் நானிலந் துறந்த
சேகரன் பின்வரு சென்னியாம் நம்பி
திருவிதாங் கூரிறை திருவடி சரண்புகுந்
திருந்தனன். அவனை யெதிர்த்திடச் சகள
விராஜ குமார னேகினன் ; எதிர்ந்து
விராவிய சேனையை வென்னிடத் துரத்திச்
சோழனைப் பிணிக்கச், சோர்ந்த திருவடி
தோழமை வேண்டித் தொழுதெனை யடைந்தான் :
உடன்பா டிழைத்தவற் கொற்றுமை காட்டினன் ;
திடமுறத் தென்னவன் றிருவடிக் குயர்வாம்
பதம்பெற வைத்தனன் ; பாய லரங்கனை
இதம்பெற வேத்திக் கொங்குநா டெய்தினன் ;
படையொடு புகுந்துசீ ரங்க பட்டணம்
அடைந்தனன் ; துருவ வரசர்க ளிறுத்த
திறையினைப் பெற்றுத் திரும்பு காலையில்,
மறவினை புரியும் மாற்றலன் வடபால்
ஆனகா வதநா டச்சுவ பதியின்
தானமே யென்று தருக்குடன் பேசிப்
பொங்குதல் கேட்டுப் போந்தனன் விரைவில் ;
திங்களின் மரபைத் திருத்திய துணைவ !

அன்னவர் விடுக்க வடைந்த தூதனை
முன்னர்க் கொணர்க.

திம்ம. (சதாசிவ ராயனை நோக்கி)
மூர்க்கன் விடுத்த
தூதனைத் தருக. (சதாசிவராயன் வெளியே செல்ல)
தொன்றுதொட் டிவர்கள்
பேதமை கொண்டு பிதற்று கின்றனர்;
நாடு நமதென நாட்டினம் பலகால்;
கேடுசூழ் மதியினர் கேட்கிலர் படுவார்!

(தூதன் பிரவேசித்து.)

தூத. மன்னவ ரேறே! வந்தனந் தந்தனன்!
என்னுரை கேண்மோ! எம்மிறை காவத
நாட்டி னுரிமையை நாட்டு கின்றனன்;
கேட்டீர் மறுப்பின்; கிளர்ந்திடும் போரெனக்
கூறுக வென்றொரு கொடிப்படை கூட்டிச்
சிறிய மானுவைச் சேனைத் தலைவனாப்
அமைந்தரண் சூழ்ந்த வடற்கரும் ரேய்ச்சூர்
இமைப்பொழு தேகென வியம்பினன்; அவனும்
புகுந்தன னியானும் போந்தன னுரைத்தேன்!
நறுமணி மாலை நரேந்திர பூபதி!

அச்சு. (சினங்கொண்டு)
நன்கு! நன்குரை! நாளையே போரென
என்கருத் துரைக்க வெழுதி போதிநீ!

(தூதன்செல்ல.)

நாத நமது நால்வகைப் படையை
ஒதக் கடல்கிளர்ந் தொருவழிப் பெயர்ந்தெனக்
கூட்டுக; ரேய்ச்சூர்க் கொடிமதில்
கோட்டுது நமது கொடிப்படை கொண்டே!

களம்—1. முற்றும்.

## களம்—2.

இடம்—ரேய்ச்சூர்க் கோட்டையின் வெளிப்புறத்திறுத்தபாசறை.
காலம்—மாலை.

(விசுவநாதனும், மதுரைப்புலவனும் உரையாடிவீற்றிருப்ப)

விசுவ. நேரிசையாசிரியப்பா

*பெரும்படை பின்னுறப் பெருவழி கடந்து*
*பொருந்தொழி லோடு பொழிலிரு மருங்குந்*
*தங்கி நிழலிடுந் தண்புனற் கிருஷ்ணை யாற்*
*துங்கநல் லாற்றினைத் தோணியிற் கடந்து*
*நண்ணினன் மாலும்; நாமெதிர் புகுந்தவன்*
*எண்ணிலாத் தானை யிரிந்து பின்னிடத்*
*தாக்குது மிதுவே தகுதி! இவ்வயின்*
*ஊக்கமே காட்டினம்; உயர்மதின் முற்றுகை*
*வெற்றி பயந்தது; வீரனு மாரியன்*
*மற்றது முடிக்கும்; மதுரைப் புலவ!*
*சேனையொ டெழுவன்; சேர்ந்து வருதியோ?*

(கச்சிப்புலவன் பிரவேசித்து)

கச்சிப்புல. *மானவேல் வீர! வான்புக ழரிய*
*நாதன் விடுக்க நண்ணினன்; வீரன்*
*ஏதிலா ரரணை யெண்ணிலாக் குண்டுகள்*
*எறிந்து தகர்த்தங் கிடைவழி செய்து*
*செறிந்த படைதனைச் சிக்கெனச் செலுத்தி*
*உம்மது ஷாவின் உயர்படை செகுத்து*
*நம்மதென் றரண்மே னாட்டினன் கொடியை:*
*அன்னதோர் வெற்றியை யறிவி யென்றனன்.*

விசுவ. *முன்னரே யுணர்ந்தேன் மொய்ம்புடைக் கொடியால்;*
*ஆரிய நாதன் ஆற்றலே பெரிது!*

கச்சி. *சீரிய சிந்தையோய்! செய்வினை பணிக்க.*

விசுவ. *கோட்டையைப் பிடித்துக் குறுகலர் தானையை*
*வீட்டிய வாரியன் வீரஞ் செப்புக!*

கச்சி. *ஆரது புகலு மாற்றலுள் ளார்கள்*
*நேரது நோக்கியு நிகழ்ந்தவா கூறல்*
*அரிதாம்; ஆயினு மையநின் பணியைப்*

பெரிதெனக் கொண்டு பேசுவன்; மலைமுழை
பதுங்கு மிருளைப் பரிதியின் சுடர்கள்
கதுமெனக் கவ்விக் காய்ந்த தன்மைபோல்,
ஆரியன் படைக ளரணைச் சூழ்ந்தன;
பேரிடி முழக்கெனப் பெருங்கா லடிப்பக்
கடையுகத் தெழுந்த கடலுங் கனலும்
புடைபரந் தெங்கும் போர்த்திட வருந்தும்
மன்னுயிர் போலவும், மறலியின் பாசப்
பின்னலிற் சிக்கிப் பெருந்துயர் கொள்ளுஞ்
சீவனைப் போலவும், சேண்மதிற் பட்ட
பாவகற் கிந்த பசுந்தளி ரனையார்
பதைத்து வருந்தினர்; பார்ப்பவர் பயங்கொளக்
குதைவரிச் சிலையிற் கொடுங்கணை போக்கினம்;
துந்தா யிப்படை கோடரி குறுந்தடி
சிந்தா குலமுறச் செலுத்தினம்; கவண்டிக்
கற்களை யெறிந்தோம்; கரும்பொற் குண்டுகள்
பற்பல விடுத்தனம்; பாயிருள் பரந்த
வானிடை யிடியும் வயங்கு மின்னலும்
மானவே புகையிடை மலிந்தன கடுவொலி;
மண்ணினுங் கல்லினும் வகுத்த மதிலின்
வண்ணிலா முடியுறப் பிடித்தன குண்டுகள்.
தகர்ந்த முடியெலாந் தசமுகன் றலைகளை
நிகர்த்தன; வேழ நெட்டிருப் புலக்கை
வாங்கி மதிலின் வலிகெடத் தகர்த்தன;
ஆங்கொரு புடையி னரணடி பறித்தனர்
பாரைமண் வெட்டிப் படைகளால் வயவர்;
ஆரைமீ தேறியு மகன்றிடப் பிளந்து
அரண்வழி நுழைந்து மார்த்தனர் வீரர்,
பெருந்தீ யிட்டனர்; பிடித்தனர் சிலரை,
முடித்தனர் பலரை, முழக்கினர் பேரி;
கொடிப்படை யாரியன் கோட்டையுட் புகுந்து
வித்தியா ரண்ய வெற்றிக் கொடியினை
மத்தியி னட்டினன் மதின்முடி துலங்க;
இத்தகை முடிந்த திஞ்சியின் முற்றுகை,
எத்திசை யும்புக ழெந்தலே!

விசுவ. இனிதாம்!
எண்ணிய வண்ண மியற்றினன் றிறலோன்;
நண்ணுக நாதனே; நாற்பெரும் படையுடன்
மாலுவின் சேனையை மலையுமா றெழுவன்
கோலநீ ராற்றின் குளிர்கரைப் பாங்கர்.
இவ்வுரை யுணர்த்தி யிறைவனச் சுதனை
அவ்வயிற் றாண்டுமா றரியநா தற்குச்
செப்புக போதி, செந்தமிழ் வல்லாய்!
கச்சி. ஒப்பருஞ் சீர்த்தி யுயர்படைத் தலைவ!
கச்சையங் கடகரிக் காவலன்
அச்சுதன் பின்வர் தமர்நோக் குவனே!
களம்—2. முற்றும்.

## களம்—3.

---

இடம்.—கிருஷ்ணாநதியின்தென்கரை. அச்சுதராயன் படைவீடு.
காலம்—எற்பாடு.
(அச்சுதராயன், ஜீவராய், கச்சிப்புலவன் முதலானவர்கள் விற்றிருப்ப)
நேரிசையாசிரியப்பா.

அச்சு. வேகவெங் காலென வெள்ளப் படையுடன்
நாகநின் மதிலை நாடிப் புக்கனன்;
முற்றுகை முடித்து மூதெயில் கொண்டு
வெற்றியம் பதாகை மீதுற நாட்டிய
ஆரிய நாத னரும்போர்க் களத்தில்
கேரலன் மாலுமுன் னின்றுபோர் செய்யச்
சென்றன னதன் சேர்மினென் றுரைப்ப,
நன்றெனப் போந்தேன்; நான்வரு முன்னர்
பெரும்போர் விளைத்துப் பீடுசா லாற்றின்
கரைவழி மாலுவுங் கலங்கித் தானையும்
ஓடுமா றிழைத்தன னொருதனிப் படையான்!
ஓடைமா களிற்றி னுயர்முடி பிளக்க
வடிந்திடுங் குருதி வான்பரந் தென்னக்

குடவரை செவ்வான் குலவக் கதிரவன்
மறைந்தனன் ; பகலில் வாளமர் புரிந்த
திறந்தனை முற்றுந் தெரிந்திட விரும்பினன் ;
நாதனைத் தருமின் !

(மதுரைப்புலவனுடன் விசுவநாதன் உள்ளே பிரவேசிக்க)

ஜீவரா. நண்பன் வந்தனன் !
தீதறச் செலுத்திய செருவெலாங் கூறப்
போந்தனன் மேதகை.

விசுவ. போர்த்திறங் கூற
வேந்தனே ! யெய்திலன்; வீரங் குன்றிய
குமரன் செய்தியைக் குறித்தன் வடிவேலா
அமரினை நிறுத்தி யன்பினை வேண்டினன்,
ஆற்றங் கரையி னகன்பொழி லிருந்தனன் ;
சாற்றுமா றருள்க. தண்புன லாற்றின்
தென்கரை மருவுஞ் செழும்பதி யாவும்
உன்பதி யாக்க வுடன்படு வாரேல்
ஒக்குமே யுள்ளம் ?

அச்சு. உயர்தனிச் சிலையோய் !
இக்கரை நாட்டை யிவரே யுன்றன்
கருத்துட னொக்குமென் கருத்தும் ; ஆதலின்
திருத்துக மேல்வினை.

விசுவ. திக்கெலாம் புகழும்
இறைவனே ! யேகி யிசைத்தவா முடிப்பன்—
துறைபல பாடுஞ் சொற்பயில் புலவ !
அரசனோ டிருந்தி.

(விசுவநாதன் வெளியேசெல்ல)

அச்சு. அருந்தமிழ்ப் புலவ !
முரசொலி யெழுந்த மொய்ம்போர்க் களத்துத்
தலைவனோ டிருந்தனை ; தமரவா றிதிபோல்
மலைந்திரு சேனையும் வளைந்தவா றியம்புக.

மதுரைப்புல. கடல்கிளர்ந் தெழுந்து கடும்புன லாறுதன்
புடைவர வெதிர்ந்து புக்கதைக் கொள்ளுந்
தன்மைபோல், அரச ! தவாநெடும் படைதான்
வன்மையா லுயர்ந்த வளைமதில் ரேய்ச்சூர்

விட்டெழுந் தேகி விரைவினிற் படர்ந்து
துட்ட ரிரும்படை தொலைவுறப் பாய்ந்து
போரிடப் புக்கது. போர்க்களத் தெழுந்த
பேரியி னோசையும் பேராள் முழக்கமுங்
கலந்து களத்திற் கம்பலை மிகுத்தது!
மலைந்திரு சேனையு மயங்கு காலையில்,
வானுற வெழுந்து வளர்ந்த பராகம்
மாநிலத் துடனே மற்றைய நான்கு
பூதமுங் கலந்து பொருந்தின போன்றது!
ஓதக் கடல்வா யுலவு மாமையின்
கான்முகந் தெரியக் கருந்தோற் கவசம்
மேன்முழு தணிந்து வீரவாட் கேடயம்
கைகளிற் றரித்துக் கழலணி வீரர்
மொய்களந் திரிந்தனர்! முகிலிரு கூறுகள்
குளிர்வா னெதிர்ந்து கொட்டுந் தாரைபோல்
வளைந்திரு படைகளும் வாளிக ளேவின!
பரசுகொண் டெற்றினர்; பட்டய மோச்சினர்;
விரசுவார் தம்மை வீட்டினர் வாளால்;
ஆறுபோ லுதிர மமர்க்களத் தோடப்
பாறுகள் சுற்றிடப் பதாதியிற் பல்லோர்
புண்படக் கலங்கியும் பொத்திடு மம்பினால்
மண்படக் கிடந்தும் மயங்கியு மயர்ந்தார்!
ஊனு முதிரமு மூறிய சேற்றிற்
றானை வீரர்கள் தளர்ந்து தவித்தனர்!
துதிக்கையா லியானை தூக்கிவா னெறியக்
குதித்திறந் தார்சிலர் குருதிவெங் கடலில்?
கரலா கவத்தினாற் களத்திடைத் திரிதந்
தொருவனே பலர்போ லுணர்த்தி நின்றனன்!
ஆயதோர் காலையி லடையலர் திகைத்து
மாயமே வல்ல வாட்படை யவுணர்
பூண்டினை யொழிக்கப் புகுந்தமா லிவனோ?
காண்டிவ மெடுத்துக் காண்டவ மழித்த
தனஞ்சய னிவனோ? தக்கன் வேள்வியைச்
சினங்கொடு தொலைத்த சிவபிரா னிவனோ!
என்றுரைத் தெங்கு மிரியலுற் றனரால்!

அன்றொரு காலைப் பிரவின மெல்லாம்
அனலிடைச் செலுத்தி யாற்றிய வேள்விச்
சனமே சயன்போற் சமரிடை வீரன்
தந்தியின் கரங்களைத் தள்ளினன் களத்திற்!
விந்தைவா ழிவன்படை வீரர்க ளஞ்சா
நெஞ்சராய்ப்புகுந்து நெருக்கிநே ரலரை
யஞ்சுங் கலங்க வடித்தனர் !மாலுவும்
ஓடினன் ; அவனுட னோடினர் துருக்கர் !
கோடொசிர் கரிகளுங் குதிரையி னீட்டமும்
கொண்டன மாகிக் கொற்றமும் படைத்தோம் !
எண்டிசை மதிக்கு மிறைவனே ! யிதுதான்
போர்த்திறம் !

அச்சு. புலவ !புகன்றனை ; மகிழ்ந்தேன் ;
நேர்த்தியே !நாதன் நினைத்தது முடித்தான் ;
வார்புன லாடி வைகறைப் பொழுதில்
நேர்கடன் முடித்து நிற்குதும் ; காலையில்
உடன்படு நெஞ்சனு யுருவ னடில்ஷா ;
அடைக்கலம் புகுமே லன்பினைத் தருவோம் ;
இன்றுயில் கொண்மி னெவருங்
குன்றிடை யுறங்குங் கோளரி போலவே !

களம்—3. முற்றும்.

---

## களம்—4.

இடம்—கிருஷ்ணாநதியின் தென்கரை. அரசன் படைவீடு.
காலம்—காலை

[அச்சுதன், ஜீவராய், சதாசிவராய், இராமராஜன், கச்சிப்புலவன், மதுரைப்புலவன் முதலானவர்கள் வீற்றிருப்ப]

நேரிசையாசிரியப்பா.

அச்சு. இதம்பெற நாத னியற்றின னரிய
உதவிதான். இதனை மறத்த லொண்ணுமோ ?
அரச னடில்ஷா வணைந்திடு முன்னர்
உரிமையிற் றெரித்தன னுறுமுடன் படிக்கையிற்
காட்டிய நிபந்தனை காவதிங் கொண்ட
நாட்டினைத் திருதனு நயந்த வர்த்தகத்

துறைமுக வடுகலைத் தொடுகட லுலவும்
நிறைமரக் கலங்கள் நின்று துயல்வரப்,
பொதுவிட மாக்கலும் பொருந்து மிரண்டென;—
கதுமென வெழுந்த கடும்போர் முடிந்தவா
வியப்பே! யினியவர் விரைவுமேற் கொண்டு
பெயர்ந்தின் வருவதாய்ப் பேசினர்; அதுபோல்
வந்தில ரென்னே?

(விசுவநாதனும் சலாபத்கானும் உள்ளே வர.)

வார்கழல் வணங்க
தந்திரத் தலைவன் றன்னுட னொருவனைக்
கொண்டிவண் வந்தனன்

ஜீவரா. கொற்றவ! இவன்றான்
திண்டிறற் சலாபத் கானெனுந் தெவ்வர்
படையின் றலைவன்; பரிவுமிக் குடையான்;
கடைநெடு வேற்கட் காஞ்சனை சிறையை
மீட்குநா முதவிய பிளி மொய்ம்பினன்.

அச்சு. வாட்படை வீர! நின் வரவுக் குவந்தனன்;
அமர்க! நின்னரச னாணையென் கூறுக.

சலா. நமருட னரசன் சார்ந்தன னுனது
பாசறை வாயிலின். பார்த்திவ! உன்றன்
நேசமே நாடிய நிருபனை நின்முன்
அழைத்து வருவனோ?

அச்சு. அன்பனைத் தருக

(சலாபத்கான் வெளியே செல்ல)

தழைத்திடும் புகழோய்! பரியலர் தம்மை
வென்னிடத் துரத்தி வெற்றியை நாட்டி
என்னில மெனக்கே யீந்தனை யென்பதென்?
நேமிசூழ் வலயம் நின்றநின் பெருமைக்
காமிதோர் செயலோ? அன்ப! நின் னாற்றல்
யாவரு முணர்வர் யானினி யுரைப்பதென்?
மேவிய காரிய மேம்பட முடிந்ததோ?

விசுவ. வெற்றிவே லிறைவ! வீங்குநீ ராற்றிற்
கொற்றமே காட்டுங் கொடிபயில் நாவாய்ச்
செலுத்தியான் செல்கையிற், றிகழிரு கரையும்
நிலைத்திடுஞ் சேனையி னேயமே காணப்

பாதலத் துறைவார் பரிவினுற் றதுபோல்,
காதலுற் றவர்நிழல் கடிபுன லகத்திற்
கலந்துற வாடின ; காவல ரிருவரும்
நலந்தனை நினைத்தவர் நன்றேக் குறுமுன்,
இருவர்தம் படையிருந் தெழுந்த தூளிகள்
மருவிக் கலந்தன ; வான்கவை யிரண்டுந்
துன்னிய சேனையிற் றுவைத்த பேரியின்
மன்னிய பேரொலி வான்முக டளாவிச்
சேர்ந்து முழங்கின ; சேனை யிரண்டிலும்
சேர்ந்தபல் கொடிகளி னெற்றியைத் தைவருங்
காற்றினங் களித்துக் கலந்தன ; காவல!
சாற்றுவ தென்னினி ? சமாதா னம்பெற்
வந்தனன் மன்னவன்.

அச்சு. மகிழ்வு மெய்தினன் ;
நந்தங் காலமு நன்மை பயந்தது!

[இஸ்மே லடில்ஷா, மாலூகான், கும்மல்கான், அஷாடாகான், சலாபத்கான், அமீர்பீரித், உம்மதுஷா முதலானவர்கள் உள்ளே வர,—அச்சுதனும் அவன் சபையோரும் எழுந்துநிற்ப,—இஸ்மேலடில்ஷா முன்வந்து அச்சுதனைப்பணிய]

கச்சி. (மதுரைப்புலவனுடன் தனியே)
மதுரைப் புலவ! மமதை யடங்கிப்
புதுநந்தோல் பொருநப் புனைதோ லுரிக்கும்
விடப்பல் விழுந்த வெங்கணை கப்போல்
அடையல னச்சுத பதிராட் டரசன்
நுரையென வெளுத்த நொய்தா மனகிலையைச்
சிரமுதற் கால்வரை சேர்த்தி விஜய
நகரா ளரச னரேந்திரன் முன்வந்
தகமிகக் குழைந்தங் கணிமுடி தாழ்த்திச்
சலாமிடு கின்றனன்!

மதுரைப்புல. சாகரத் திடையிற்
குலாவுறுங் கராவின் கூர்வாய்ப் பட்ட
கரியினைப் போற், படைக் கடலிற் பகைவன்
அரசனச் சுதனை யஞ்சுகின் றனனால்!

அச்சு. அன்பினை வேண்டு மரசனே! வருக!
முன்புள வருத்த முழுவதும் போக்கி

இன்றுதொட் டிருவரும் இசைந்த மனத்தராய்
ஒன்றுபட் டொழுகுத லுயர்நலம் விளைக்கும் ;
ஆதனைத் தார்க!

இஸ்மே. அரச ரேறே!
ஆதரிப் பாயென் றடைந்தவர் தம்மைப்
போற்றும் பெருந்தகைப் புண்ணிய பூபதி!
எற்றமார் நரச இராஜ குமாரனே!
நின்வயி னப்புகழ் நிலவுறு கின்றதால்!
அன்புட னிருவரும் அமர்ந்திட வினிதாம்.

அச்சு. படைகளின் றலைமை படைத்தீர்! கேண்மின்!
நடுநிலைப் படிநீர் நாட்டிய நிபந்தனை
யாவையுஞ் செப்பேட் டெழுதுமின்! யாங்கள்
ஆவலின் முத்திரை யதனி லிடுவோம்—
அன்பனே! யச்சுவ பதிநாட் டரசே!
இன்பமே விளைக்கு மெழிலார் சோலையின்
வம்பவிழ் மலரால் வயங்கு நதிக்கரை
நம்படை சூழ்ந்திட நாங்களிக் திருந்து
விருந்துண் டவரவர் வெற்றித்
திருநகர்க் கெழுவோஞ் சேனைசூழ் வரவே!

களம்—4. முற்றும்.

## களம்—5.

இடம்—மதுரை. சித்திரவிலாஸம். காலம்—காலே.

[விசுநாவதன், குமாரகிருஷ்ணப்பன், காஞ்சனே மூவரும் உரையாட]

நேரிசையாசிரியப்பா.

விசுவ. மணிமுடி கவித்த மன்னவ னேவ
அணிமதிற் கூட லடைந்தனம். அந்நாள்,
ஏந்திழை! யிவனை யெழின்மலர்க் கையால்
ஏந்திநீ வந்தனை! யிளவலுக் கிந்நாள்
ஆண்டெட்டு திரட்டி யாயின. வெற்றியைப்
பூண்டதோர் விஜய நகரிற் புகுந்த
கலக்கமுந் துன்பமுங் காதிறைற் கேட்டோம்!
விலக்குமா றொருவரும் வேண்டினு ரில்லை.

வேங்கடாத் திரிக்கு விரோதமே செய்து
பாங்குறு வார்க்குயர் பதங்களை வழங்கும்
மந்திரி திம்மன் வஞ்சகங் கண்டு
சிந்தை கலங்கித் திருநக ருள்ளார்
சினந்திடத், திம்மன் சிறுவனைக் கொன்றனன் !
மனங்கொதித் திந்நகர் மாந்த ரிருவகைப்
பட்டன ரென்னப் படையொடு புகுந்து
கிட்டின னிப்ரஹீம்; கெடுமதி யமைச்சன்
எட்டிலக் கம்பொன் னீந்தவ னேக
விட்டனன். ஆயினும் வியனகர்க் குழப்பம்
அடங்கில தென்றவ் வடில்ஷா தன்னையே
தொடங்குக போரெனத் தூண்டினன். அவனும்
வந்தது கண்டு மன்குலத் தவர்கள்
சிந்தைகன் றினராய்த் தீயவன் கொள்ள
ஐம்பதி லக்க மரும்பொன் னளித்து
நும்பதிக் கேகென நுவன்றனர் ; சென்றான்.
அன்னதோர் காலையி லமைச்சனை பொறுக்க
அந்நக ருள்ளா ரனைவருந் திரண்டு
சதாசிவ னிராம ராயனுந் தந்நகர்ப்
பதாதித் தலைவரைப் பரிந்து வேண்ட
வளைந்தன ரமைச்சன் வளமனை. அவனும்
உளந்தளர்ந் தினிநமக் கொருதுணை யிலையென
நிலத்தினிற் கத்தியை நிறுத்தி யதன்மேல்
வலனுறப் பாய்ந்து மார்பகங் கிழிய
மாண்டனன், அந்தோ ! வஞ்சகத் தொழிலே
தூண்டிடுங் கேடெனச் சொல்லுவர், நல்லாய்!
மாநக ரமைதி மன்னிய காலையில்
கோனிவ னெனலாக் குடியலா மேற்ப
இராம ராயனை யிறைவ னாயினன் !
விராவிய படையுடன் மேவலன் வருகையும்
அமைச்சன் றீமையு மணிநகர்க் குழப்பமும்
அமையுமோ, யானு மந்நக ரிருந்தால்?
மந்திரி செய்த வஞ்சனை யாலுந்
தந்திரத் தடில்ஷா தாக்குத லாலுந்
தம்பொரு டம்முயிர் தம்மனை தமதென

நம்புத விலராய் நகருவார்க் கெய்திய
விதிகொடி தென்ன வேலைசூழ் போர்த்துகற்
பதிநூல் வல்லோன் பார்ஞெ நூனிஸ்
எழுதிய நிருப மெதிர்ந்தநாண் முதலாப்
பழுதிலா நகரும் பழுதுபட் டதென
வருத்த மெய்தினன்..

**காஞ்ச.** மன்னவ! ஈசன்
கருத்தை யெவர்கொலோ கடந்திட வல்லார்?

(சிலபிராமணர்களும், ஜீவராயனும், அரியநாதனும் உள்ளேவர)

**ஜீவரா.** நாட்டினுக் கென்று நல்லறம் புரிந்தது
கூட்டுறும் பயனைக் குறித்திடாக் கோவே!
அறமே புரிந்தனை; ஆதலி னின்பா
லறத்தின் மூர்த்தி யருள்சுரந் தவனாய்
அரசனைக் கொண்டுனக் கரசு தந்தனன்.
விரவிய சீர்க்குண வீர வர்மன்
மாண்டது கூறி மதுரை வாசிகள்
வேண்டின ருன்னை வேந்தெனக் கொள்ள!
மன்னவன் மகிழ்ந்து வான்புனற் கங்கை
நன்னீ ராட்டி நனிர்முடி சூட்டு
வரும்படி விடுக்க வந்தனன், நண்ப!
அருமறை நவிலு மந்தணர் தம்மால்
புனித மாக்கிய பொன்னுருக் கொண்ட
துனிதருங் கூர்வேற் றூர்க்கையும வந்தனள்!

**விசுவ.** காக்குந் தொழிலுடைக் கன்னிவந் தனளோ?
நோக்கருண் மாது நோன்பினுற் றனளோ?

(வெளியே ஜனங்கள் கூட்டங்கூடி நின்றார்த்து)

**ஜனங்கள்.** ஜெய! ஜெய! ராம ராஜ! ஜெய! ஜெய!

**விசுவ.** வியன்பெரு வீதியில் விழைவொலி யென்னே?

**அரிய.** மாந்த ருரைப்படி மன்னவ னிராமன்
சந்தன னென்ன விருங்களி யெய்தினர்!

**விசுவ.** காரணி யிந்த நகர்வந் தாளெனப்
பேருவப் பெய்தினன்.

**அரிய.** பேசுவன் கேண்மின்!
மேவிய புகழோன் வெற்றிவேற் கிருஷ்ண
தேவன் செங்கோல் செலுத்து நாளையில்

நவராத் திரியெனு நன்னாண் முடிவில்
தவறு தரசனுந் தன்குலக் கிளைஞரும்
கொடிமதில் காக்குங் குமரிமுன் சென்றவ
ளடிபணிந் தலரா லருச்சனை புரிந்து
பகட்டினை நிறுத்திப் பார்ப்பவர் வெருளத்
தகட்டுரு வாய தனிவா ளெடுத்தோர்
வெட்டினிற் கழுத்தை வெட்டிப் பலியிடல்
இட்ட தேவதைக் கினியதோர் பூசை!
வெட்டொன் றிற்றலை வீழ்த்தப் படாதேல்,
நட்டமுந் துன்பமு நகருக் கெய்தும்!
ஆதலி னிப்பலி யாண்டுக டோறுங்
காதலி னரசர் கைவிடா தியற்றுவர்! • • •
ஆண்டொரு நாளி லவ்விதப் பூசை
ஈண்டிய காலையில், இறைவன் வேட்டமேற்
சென்று கானகந் திரிந்து, மைந்நிறக்
குன்றுகால் பெற்றுக் கொண்டலின் முழங்கிக்
கொம்பினுற் றருக்களின் கோடுகண் முறித்துப்
பம்பிய கானிற் பாய்ந்து குளம்பினுற் •
பாரினை யெற்றிப் பராக மெழுப்பி
நேர்முக மாக நிற்பது போல
நிற்கும் பகட்டி னேர்மையைக் கண்டனன்;
விற்குனித் தெய்யும் வேடரைக் கூவி
"வலையினை வீசுமின்! வளைந்து நெருங்குமின்!
நிலையுறக் கொணர்மின்! நீவிரிக் கணம்" என
ஏயினர் வளைந்தனர்! ஏறெழுந் துறுமி
வயின்வயி னோடி வளைந்தவர் தம்மை
முட்டித் தள்ளி முழங்கு மெல்லையில்,
கட்டிக் கொணர்ந்த கழலோ னிவன்காண்!
வேந்தன் கிருஷ்ணன் வியந்து சூலம்
ஏந்திய கையா ளேற்றிடு நற்பலி
இதுவென நகர மெய்தி, நாளையே
கதுமெனச் சென்று காளிசன் னதியிற்
பலியிடு வோமெனப் பறைபறை வித்தனன்.
வலிமிகு பகட்டை வாளினு றுளைச்
செகுப்பவ ரெவரெனத் திகைத்தனர் வீரர்!

நகுமிளங் கதிரவ னண்ணிய காலையில்,
ஆயுத சாலையை யடைந்தனன். ஆங்கண்
போயித மான பொரும்படை துருவி
நின்ற நாதனை நெருங்கித் "தோழ!
இன்றிவண் வந்ததற் கேது காரணம்"?
விளம்பெனக் கேட்டேன்; விசுவ நாதனும்
உளம்படு கனவை யுரைத்தனன். அதுவும்
இரவினிற் கண்ட வெனது கனவும்
விரவிய தன்மையால், வியந்தனன். தேவி
கூறிய வண்ணங் கூட்வா ளெடுத்துப்
பாறுசூழ்ந் திட்ட பலியிடஞ் சென்றோம்.
ஆங்க ணரச னவலமுற் றவனுய்
சங்கிதைக் கொல்வா ரெழுந்தில ரென்று
வருந்துங் காலை, யிவ் வாட்கை வீரன்
திருந்த வே நின்று திகழிரு கொம்பின்
வளைவினிற் படாமல் வாளினைச் சாய்த்து
விளையாட் டாக விலங்கின் கழுத்தைத்
துண்டித் தெறிந்தனன்; துண்ணென வியந்தார்!
மண்டலம் புரந்த மன்னவன் களித்தான்!
காளியும் பூசையைக் களிப்புறக் கொண்டாள்!
மீளிமொய்ம் பனுக்கு வெற்றியே யுதவி
என்றும் பிரியா திருந்த தெய்வம்
இன்றிங் கெழுந்தனள்; பரமம் படைத்தனன்.

**விசுவ.** வாய்மையே யுரைத்தான்; வாகையுஞ் செல்வமுந்
தாய்தர வந்தன!

[வெளியேஜனங்கள் மற்றோர்முறை யார்த்துச் சோக்கலிங்கனை முன் செலுத்தி]

**ஜனங்கள்.** தாழ்க்கிலம்! தாழ்க்கிலம்!
இன்னே யிறைவற் கெழின்முடி சூட்டத்
துன்னுதி! போதி!—தோன்றலே! வாழி!

**விசுவ** மற்றொரு முறையு மாநகர் மாந்தர்
உற்றுறு மொக்க வுயரொலி கிளப்பினர்!

(சோக்கலிங்கன் உள்ளே வந்து)

**சோக்க.** வைகைநா டோங்க வந்த பூபதி!
கைகளைக் குவித்துக் கடைப்புற நின்று

பொன்முடி புனைகெனப் புகன்றனர் மாந்தர் :—
தென்னவன் குலத்திற் சிறுவ ரின்மையால்
மன்னவ னிராமன் மதித்த வண்ணமே
இன்னே மவுலி யெழிலுறப் புனைக !

ஜனங்கள். (வெளியே)
புனைக ! புனைக ! பொன்முடி புனைக !
நனைக ! நனைக ! நறும்புனற் கங்கை !
செங்கோல் பெறுக ! சிங்கா தனத்தி
லெங்கோ னென்ன விருந்துநீ வாழி !

விசுவ. (சோக்கலிங்கனைநோக்கி)
அவ்வித மாகுக ! அணிநகர் மாக்களைச்
செவ்விதி னமர்த்திச் செலுத்துக ! போதி !

அரிய. (ஜீவராயனைப்பார்த்து)
நண்பனே ! முடிபுனை நன்று ளிதுவெனப்
பண்புறு கணிதர் பகர்ந்தனர் கொல்லோ ?

ஜீவரா. நாளைநன் றென நவின்றனர் மேலோர் !

அரிய. வாளைபாய்ந் துழக்கும் வண்புன னாட்டின்
மாந்த ரனைவரு மாநகர் புகுக்கிப்
பூந்தார் சூட்டிய பூரண கும்பமும்
பொலம்பா லிகைகளும் பொன்னொளிர் கவரியும்
நலந்திகழ் விளக்கும் நங்கைய ரெடுப்பச்
செய்வன செய்திநீ சேனைத் தலைவ !
மைமந்நிகர் தந்திமேல் வார்முர சேற்றி
நாளையே முடிபுனை நல்விழா நடத்தும்
நாளெனச் சாற்றி நகருக் குணர்த்துக !

சோக்க. இத்துணை பாணையை யேற்றேன் ! மகிழ்ந்தேன் !
மெய்த்தவ மிருந்தவா !—மேதினி யுள்ளார்
களிப்பர், திளைப்பர், களியாட் டயர்வர் ?
ஒளிப்பரு முவகையா லோடித் துள்ளுவர் !
ஆதலின், ஐய ! நின் ஞணைமேற் கொண்டேன்,
போதுவன். (சோக்கலிங்கன்வெளியேசெல்ல)

விசுவ. கேண்மின் ! பொன்முடி புனைந்து
செங்கோல் தரித்துச் சேணிலங் குடையிற்
றங்குமா றிருந்து, தந்திரத் தலைவரும்

மந்திரத் தலைவரும் மன்னருஞ் சூழ
இந்திர னிகர்ப்ப விருந்து, மங்கையர்
பல்லாண் டிசைப்பப் பார்ப்பன ராசி
சொல்லா லெழுப்பச் சுருதிநூற் படியே
மாநிலங் காத்தல் மனுவிற் குமாகுமோ?
யானிதற் காளோ? யாமளை கருணையும்
ஆன்றோ ரருளு மமைந்தா லன்றி
என்றிடற் கொண்ணுமோ, இப்புவிப் பாரம்?
சுமையின் றன்மையைச் சொல்லுவன் கேண்மின்!
அமைச்சர் முதலா மவையோர் சொற்படி
நிற்றலும், மாந்தர் நினைத்தவா புரிதலும்
கற்றவர் விதித்த கதியினிற் போதலும்
அறன்வழிச் சேரலும் அதற்கு மாறு
மறன்வழி விலக்கலும் மங்கையர் பாலகர்
மூப்பினர் முதலா மொய்வலி யிழந்தார்க்
காப்பதுங் கள்வரைக் கடிவதுங் காமம்
ஆதிமுக் குற்றமும் அடக்கலு நகரில்
சாதியே தத்தவர் தத்தம் நிலையில்
தவறு தொழுகத் தக்கவா றியற்றலும்
இவரலை படரு மிருங்கடன் மீது
வங்கஞ் செலுத்தி வர்த்தகம் புரிதலும்
எங்கணும் பயிர்த்தொழி லியற்றி வித்தலும்
பிணிபசி நீக்கலும் பெரும்போர் துடைத்தலும்
அணிநகர் வீதி யாவையுந் திருத்தலும்
குளம்பல நிரப்பலும் குடிகளைப் பெருக்கலும்
வளம்பட வாயணம் வகுத்தலும் பற்பல
கைத்தொழில் வளர்த்தலும் கல்வியை வளர்த்தலும்
பொய்த்தலை யுவக்கும் பூரியர் பகையை
நால்வகை வழியா னலிவுறச் செய்தலும்
மேல்வரு வினையை வினயமா யுணர்தலும்
நாற்றிசை மன்னவர் நட்பைக் கோடலும்
வேற்றுமை காட்டும் வேந்தரோ டிறழ்தலும்
இத்துணைச் செயல்களை யிழைத்த லெளிதோ?
கத்துவா ரிதிசூழ் காசினி புரத்தல்
என்வயி னமைந்தது மீசன் செயலாம்!—

பன்னருந் துணைவர் படைத்ததோள் வலியும்
மன்பதை யன்பும் மாதவத் தோர்கள்
என்பால் வைத்த விரக்கமு மீசன்
அருளுந் தாங்கி யாணைமேற் கொள்ளக்
கருதினன்; சபையீர் காட்டுமி னார்வம்
மணிமுடி தாங்கி மாநிலம்
அணிபெறப் புரக்கும் அரசனைக் காத்தே!

[வெளியே ஜனங்கள் வாத்யகோஷஞ்செய்ய மதுரைப்புலவன் உள்ளேபிரவேசித்து]

மதுரைப்புல. வாழ்த்து

வாழ்க! மன்னவ வையக நின்குடை
வாழ்க! வானவர் மானவர் வாழ்வுற
வாழ்க! நல்லற மாதவ மோங்கிட
வாழ்க !காஞ்சனை மாதொடு வாழ்கவே!

களம்—5. முற்றும்.

அங்கம்—5. முற்றும்.

விசுவநாதம்
முற்றுப்பெற்றது.

## ஆக அங்கம்—5, களம்—29-க்கு
## இந்நூலில் உள்ளபாடல்களின் தொகைக்குறிப்பு

| | | |
|---|---|---|
| 1. | வெண்பா .... .... | 2 |
| 2. | நேரிசையாசிரியப்பா ... | 42 |
| 3. | விருத்தம் .... .... | 12 |
| 4. | நிலைமண்டில வாசிரியப்பா | 2 |
| 5. | கோச்சகம்.... .... | 3 |
| 6. | கும்மி .... .... | 7 |
| 7. | ஆசிரியத்தாழிசை .... | 6 |
| 8. | ஆனந்தக்களிப்பு .... | 5 |

## பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 16 | 31 | ருயிந்த | யிருந்த |
| 26 | 5 | சேயதன் | சேய்தன் |
| 55 | 2 | குறைகழல் | குரைகழல் |
| 62 | 16 | வாழியரோ | வாழியரே |
| 88 | 23 | நீர்ந்திவண் | நேர்ந்திவண் |
| 124 | 23 | விசுநாவதன் | விசுவநாதன் |

KALYANASUNDARAM POWER PRESS : G. S. MANIYA & CO., TANJORE.